January -2019 | Volume-5 | issue-52

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜனவரி - 2019 பருவம் - 5 புனல் - 52 தனிச்சுற்று நன்கொடை ரூ 25

for private circulation only



மொதல்ல படிங்க,
நல்ல வேலைக்குப் போங்க...
அப்புறம்?
அஜித் இல்லேனா...ஆர்யா!
ஆர்யாவோடு ப்ரேக் அப் ஆனா...சூர்யா!

HAPPY LOVER'S DAY 2019

# இவ்வளவுதான் காதல்

## 'காதல்' நம்ம கண்ட்ரோல்ல இருக்கணும்
## காதலின் கண்ட்ரோலில் நாம் சிக்கிவிடக்கூடாது

சங்ககாலத்திலிருந்து,
தனது துணையைப் பெற்றோர்கள் தேடிக் கொடுக்கும்
இழிவு தமிழர் பண்பாட்டிலேயே இல்லை.
ஆரியப் பார்ப்பனர்களின் படையெடுப்புக்குப் பிறகுதான்
ஜாதி, மதம், சடங்குகள், பெற்றோர் நமக்கு பெண் பார்ப்பது,
மாப்பிள்ளை பார்ப்பது என்பது போன்ற
இழிவான பண்பாடுகள் உருவாயின.
ஏறுதழுவுதல் (ஜல்லிக்கட்டு) பழந்தமிழர் பண்பாடு என்றால்...
உடன்போக்கும், களவு மணமும் பழந்தமிழர் பண்பாடுகள் தானே?
ஆணோ, பெண்ணோ நமது வாழ்க்கைத் துணையை
நாமே தேர்ந்தெடுப்போம்!
ஜாதி, மதம், இனம், மொழி, நாடு கடந்தும் காதலிப்போம்!

**what ever it is...**
**Never, Ever accept arranged marriages**

திராவிடர் தளம்

திருப்பூர் 90252 47411 திண்டுக்கல் 97868 89325 ஈரோடு 98426 44575



# எந்தத் “தை” யில் வழி பிறக்கும்? சேரியிலிருந்து ஊருக்கு...

“தை பிறந்தால் வழி” பிறக்கும் என்பது தமிழர்கள் அனைவரும் அறிந்த வாக்கியம். எத்தனை “தை” பிறந்தாலும், சேரியிலிருந்து ஊருக்குச் செல்லும் வழி மட்டும் இன்னும் பிறக்கவே இல்லை. பல நூற்றாண்டுகளாகியும், சேர, சோழ, பாண்டிய, முகலாய, தெலுங்கு, ஆங்கிலப் பேரரசுகள் ஆண்டு முடிந்த பிறகும் எவரது ஆட்சியிலும் வழி பிறக்கவில்லை.

பிற்படுத்தப்பட்ட ஜாதியினரின் தெருவுக்குள்ளே தாழ்த்தப்பட்டவர்கள் நுழையவே வழிபிறக்காத நிலையில், அவர்களின் வீடுகளுக்குள் நுழையும் வழி எப்படிப் பிறக்கும்? எந்தத் “தை” யில் அது பிறக்கும்?

இதற்கு விடைகாண வேண்டியது ஜாதி ஒழிப்பாளர்களும், தீண்டாமை ஒழிப்பாளர்களும் தான். அவர்களும் “பொங்கல்விழா” என்ற பெயரில் பல ஆண்டுகளாக நடந்தது வரும் ஜாதி ஆதிக்கத்தையும் - தீண்டாமைக் கொடுமையையும் கண்டும் காணாமல் சென்றால் எப்படி வழிபிறக்கும்?

தோழர் பெரியார் மகர சங்கராந்தியாக இருந்த பார்ப்பனப் பண்பாட்டு விழாவை, பொங்கல் விழாவாக - பார்ப்பன எதிர்ப்புப் பண்பாட்டு விழாவாக மாற்றி முன்னெடுத்தார். பொங்கல் விழா என்பது தமிழர்களின் விழா என்று அவர் தனது இறுதிக்காலம் வரைகூடச் சொல்லவே இல்லை.

1972 இல் பொங்கலைக் கொண்டாடுங்கள் என்று விடுத்த அறிக்கையில் கூட, பொங்கல் தமிழர்களின் விழா அல்ல. தமிழர்களுக்கு வேறு விழாக்கள் இல்லாததால், பொங்கலைக் கொண்டாட வேண்டியுள்ளது என்றுதான் கூறியுள்ளார்.

> “அரசாங்க விடுமுறைக்கு உரிய பண்டிகைகள் போகி, பொங்கல், மாட்டுப் பொங்கல், மகாசிவராத்திரி, தமிழ் வருடப் பிறப்பு, ஆவணி அவிட்டம், கோகுலாஷ்டமி, சரசுவதி பூசை, பிள்ளையார் சதுர்த்தி, தீபாவளி. விடுமுறை இல்லாத பண்டிகைகள் கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம், தைப்பூசம் இந்தப் படியாக இன்னும் பல உள.
> இவைகளில் தமிழனுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழன் பண்பிற்கு, தமிழன் வரலாற்று நடப்புக்கு, தமிழனின் அறிவு ஆராய்ச்சிப் பொருத்தத்திற்கு - ஏற்றவாறு விழா அல்லது பண்டிகை என்பதாக எதையாவது சொல்ல முடிகிறதா?
> இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக்கூடியவை அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம்.இந்தப் பொங்கல் பண்டிகையைத் தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்”.

– தோழர் பெரியார், விடுதலை 30.01.1959

இந்த அறிக்கையில் சில சொற்களை மட்டும் மாற்றி, மீண்டும் 1972 இல் இதே கருத்தைக் கூறுகிறார்.

> “தமிழனுக்குக் கடவுள், சமயம், சமய நூல், வரலாற்றுச் சுவடி, இலக்கியம் முதலியவை என்று சொல்ல எதுவும் காண மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக்கூடியவை அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம். இந்தப் பண்டிகையும் அறுவடைத் திருவிழா என்ற கருத்தில் தானே யொழிய, சங்கராந்திப் பண்டிகை, போகிப் பண்டிகை இந்திர விழா என்று சொல்லப்படும் கருத்தில் அல்ல. இந்தப் பொங்கல் பண்டிகையைத் தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்”.

– தோழர் பெரியார், விடுதலை14.01.1972

இன்று வரை தமிழர்களுக்கு வேறு விழாக்களை நாம் உருவாக்கவில்லை. 80 ஆண்டுகளுக்கு முன்பு வேறு வழியில்லாமல், பெரியார் அறிவித்த பொங்கலை இன்றும் தொடரவேண்டுமா? என நாம் சிந்திக்க வேண்டும். “பெரியார் சொன்னதை நாம் மாற்றக்கூடாது, பொங்கலைத் தான் கொண்டாட வேண்டும்” என்று முடிவெடுப்பதும், இந்த ஜாதிப் பொங்கலை

மறுப்பதும், அவரவர் உரிமை. குறைந்தபட்சம், அந்த விழாவை "ஜனநாயகப்படுத்துவது" என்ற அளவிலாவது சிறு சிறு முயற்சிகளையாவது நாம் தொடங்கியாக வேண்டுமல்லவா?

தமிழ்நாடு முழுவதும், கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடுகள் எதுவும் இன்றி எல்லா இடங்களிலும் "ஊர்ப்பொங்கல்" - "சேரிப்பொங்கல்" என்று தனித்தனியாகத்தான் பொங்கல் கொண்டாடப்படுகிறது. பல கிராமங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குள்ளேயே தனித்தனி ஜாதிப் பொங்கல் நடக்கிறது. பல சேரிகளில் பள்ளர், பறையர், சக்கிலியர் என தனித்தனிப் பொங்கல் நடக்கிறது.

இந்த "இரட்டைப்பொங்கல்" எனும் நிலை யாருக்கும் தெரியாமல் நடப்பது அல்ல. இதற்குப் பெரிய ஆய்வுக்குழுவோ, புலனாய்வோ தேவையில்லை. எல்லா முற்போக்கு அமைப்புகளின் தோழர்களும் ஆண்டுதோறும் பார்த்துப் பழகிய நிலைதான். இந்து மதத்தைச் சேர்ந்த சராசரி மனிதன் இவற்றைக் கண்டு பழக்கப்பட்டு விட்டதில் வியப்பில்லை. ஜாதி ஒழிப்பாளர்களே இதை ஒரு இயல்பாக எடுத்துக்கொள்வது தான் அதிர்ச்சியாக உள்ளது.

தோழர் பெரியார் 1926 இல் காரைக்குடி சிராவயல் சேரியில், காங்கிரஸ் கட்சி சார்பில் வெட்டப்பட்ட தனிக்கிணறு தொடக்க விழாவில் பேசியதை நாம் படித்திருப்போம்.

**"ஆதி திராவிடர்களுக்கென்று தனிக் கிணறுகள் வெட்டுவது அக்கிரமமென்பதே எனது அபிப்பிராயம். இவ்வாறு தனிக் கிணறுகள் வெட்டுவது, ஆதி திராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள், அவர்கள் நம்முடன் கலக்கத் தக்கவர்களல்ல என்று ஒரு நிரந்தரமான வேலியும் ஞாபகக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அர்த்தமாகும்".**

– தோழர் பெரியார், குடி அரசு – 25.04.1926

**நான் காங்கிரசில் இருந்தபோதே சமுதாயத் துறையில் சமத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்று நிறையப் பேசியிருக்கிறேன். அப்போது காந்தி, "தீண்டப்படாதவர்களைக் கிணற்றில் தண்ணீர் எடுக்க விடாவிட்டால் வேறு தனிக் கிணறு கட்டிக் கொடு. கோவிலுக்குள் விடாவிட்டால் வேறு தனிக் கோவில் கட்டிக் கொடு' என்றார்; பணமும் அனுப்புகிறேன் என்றார். அப்போது நாங்கள்தான் அந்த ஏற்பாட்டை எதிர்த்தோம். "கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்று இழிவுபடுத்தும் இழிவுக்குப் பரிகாரமில்லாவிட்டால் அவன் தண்ணீரில்லாமலே சாகட்டும்" என்றேன். "அவனுக்கு இழிவு நீங்க வேண்டும் என்பது முக்கியமே தவிர, தண்ணீரல்ல" என்றேன்.**

– தோழர் பெரியார் விடுதலை' 9.10.1957

இந்தத் தனிக்கிணறு மட்டுமல்ல; காங்கிரஸ் சார்பில், பறையர்களுக்குத் தனிப்பள்ளிக் கூடங்களும், தனிக்கோவில்களும் தொடங்கப் பட்டன. அனைத்தையும் பெரியார் எதிர்த்தார். காங்கிரஸ் கட்சியின் மாகாகணத் தலைவராக இருக்கும்போதே எதிர்த்தார்.

ஒரு மனிதனுக்கு குடிநீரைவிட, கல்வியைவிட விழாக்கள் முக்கியமானவை அல்ல. தண்ணீர் இல்லாமல் சாகட்டும், கல்வி கற்காமல் போகட்டும். அதைவிட முக்கியத் தேவை "சுயமரியாதையே!" என்கிறார் பெரியார்.

குடிநீரைவிட, பள்ளிக்கூடத்தைவிட "பொங்கல் விழா" எந்த வகையில் உயர்ந்தது? பெரியார் அறிவித்த விழாவிலேயே ஜாதியும், தீண்டாமையும், பெண்ணடிமைத்தனமும் இயங்கும் அவலத்தைப் பெரியார் தொண்டர்கள் தான் அழிக்க வேண்டும்.

ஜாதி ஒழிப்பு அமைப்புகள் நடத்தும் பொங்கல் விழாக்கள், திராவிடர் இயக்கத் தோழர்களின் வீடுகளில் வைக்கப்படும் பொங்கல் என எல்லா இடங்களிலும் பொங்கல் வைப்பது என்ற அடுப்பங்கறை வேலையைப் "பெண்கள் மட்டுமே" செய்வது, எங்களுக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

எந்தக் குற்றஉணர்வும் இல்லாமல், இந்த அவலத்தை மாற்றவும் நினைக்காமல் இரட்டைப் பொங்கல், ஜாதிப்பொங்கல், ஆணாதிக்கப் பொங்கலை நமது பெருமைமிக்க விழாவாக அறிவித்துக் கொள்ள நாங்கள் வெட்கப்படுகிறோம்.

நாங்கள் வெட்கப்படுவதன் விளைவாக, எங்கள் பகுதியில் "இரட்டைப் பொங்கல்" நடக்கும் ஊர்களையும், சேரிகளையும் பற்றிய தகவல்களைச் சேகரித்தோம். மிக மிகச் சிறிய எல்லைக்குள் தான் தகவல் சேகரிப்பு நடந்தது. விரைவில் முழுமையான தகவல்களைத் திரட்டி, இந்த ஜாதி, ஆணாதிக்கப் பொங்கலின் சுயமரியாதைக்கேட்டை விளக்கி தனி நூலை வெளியிட இருக்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பில் அக்கறை உள்ள தோழர்களும் இயக்கங்களும் இந்தப் பொங்கல் தீண்டாமையை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம். தங்களது ஊர்களில், சேரிகளையும் இணைத்துப் பொங்கலைக் கொண்டாட முயற்சிக்கலாம். ஆனால், ஜாதி ஒழிப்பில் அக்கறை உள்ளவர்கள் இதுபோன்ற விழாக்களை முற்றாக ஒழிக்க போராட வேண்டும்.

இந்துப் பண்டிகைகளில் ஜாதியும், தீண்டாமையும், ஆணாதிக்கமும் இருந்தால் அவற்றை எதிர்ப்போம். ஆனால் தமிழர் விழாக்களிலோ, திராவிடர் விழாக்களிலோ அதே ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் கண்டும் காணாமல் இருந்து விடுவோம் என்பது ஜாதி, மத ஒழிப்புக்கு எந்த வகையில் பயன்படும் என்பதைச் சிந்தியுங்கள்.

**– காட்டாறு குழு**

பெரியார்நம்பி, விமல், வடிவேல், வின்சென்ட்




# ஊர் சேரி பொங்கல் விழாப் பட்டியல்

## தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பொங்கல்

**1.ப.வடுகபாளையம், பல்லடம், திருப்பூர்**

இங்கு சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் சமத்துவப் பொங்கல் என்ற பெயரில் முன்னெடுத்தனர். சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த மக்களுக்குச் சொந்தமான அண்ணன்மார் கோயில் முன்பு நடைபெற்றது. ஆனால் இந்த நிகழ்ச்சி சமத்துவப் பொங்கல் என்ற பெயரில் நடைபெற்றாலும் மற்ற எந்தச் சமூக மக்களும் இவ்விழாவில் கலந்துகொள்வதில்லை. கொண்டாடுவதும் இல்லை.

**2. சாமிக்கவுண்டம்பாளையம், பல்லடம், திருப்பூர்**

கவுண்டர் - சக்கிலியர் சமூகங்கள் வசிக்கும் ஊராக இருந்தாலும், இங்கு சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் முன்னெடுத்து நடத்தினார்கள். அந்தச் சக்கிலியர் சமூகம் வசிக்கும் பகுதியில் நிகழ்ச்சிகள் நடத்தி சக்கிலியர் மட்டுமே கொண்டாடினர்.

**3.J.K.J காலனி, பல்லடம், திருப்பூர்**

பல்லடம் இந்து முன்னணியைச் சார்ந்த இளைஞர்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடினர். இதில் பெரும்பாலும் குறவர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்களும் இதர தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர். இவ்விழா சேரியில் நடந்தது.

**4. சுக்கம் பாளையம், பல்லடம், திருப்பூர்**

சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் விழாவை முன்னெடுத்துக் கொண்டாடினர். சக்கிலியர் சமூகம் வசிக்கும் இடத்தில் மேடை அமைத்து, கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி கொண்டாடினர். அங்கே வசிக்கும் மற்ற சமூகத்தைச் சார்ந்த யாரும் கலந்து கொள்வது இல்லை. அங்கு உள்ள கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த இருவரைத் தலைமை ஏற்கவைத்து நடத்தச் செய்தனர்.

**5. நாதேகவுண்டம் பாளையம், பொங்கலூர், திருப்பூர்**

சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் நடத்தினர். இவ்விழாவும் சேரிப்பகுதியில் தான் நடந்தது. மற்ற எந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் கலந்துகொள்ளவில்லை. இந்த ஊரில் இன்றும் மிகக் கொடிய முறையில் தீண்டாமை நடைமுறையில் உள்ளது.

**6. தெற்குப்பாளையம், பல்லடம், திருப்பூர்**

காலனியில் சக்கிலியர் சமூக ‘தென்றல் இளைஞர்கள் நற்பணி மன்றம்’ சார்பாக நடத்தப்பட்டது இங்கு உள்ள வேறு எந்தச் சமூக மக்களும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்வது இல்லை.

**7. வெங்கிட்டாபுரம், பல்லடம், திருப்பூர்**

இந்து முன்னணியைச் சார்ந்த சக்கிலிய இளைஞர்கள் கொண்டாடினர். ஆனால் இளைஞர்கள் என்கிற பெயரில் கொண்டாடினர். இது சேரிப்பகுதியில் தான் நடந்தது. மற்ற சமூகத்தைச் சார்ந்தவர்கள் யாரும் கலந்து கொள்ளுவதில்லை.

8. ஜோத்தியம்பட்டி (குண்டடம்) தாராபுரம், திருப்பூர்

சக்கிலியர் சமூகம் வசிக்கும் பகுதியில் சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் கொண்டாடினர். வேறு எந்த சமூகத்தைச் சார்ந்த மக்களும் இப்பொங்கல் விழாவில் கலந்துகொள்வதுமில்லை கொண்டாடுவதுமில்லை.

9. செங்கோடம்பாளையம் (குண்டடம்), தாராபுரம், திருப்பூர்

இங்கு சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் பொங்கல் விழா கொண்டாடினர். சக்கிலியர் வசிக்கும் பகுதியில்தான் கொண்டாடப் பட்டது. மற்ற எந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்களும் கலந்துகொள்வதுமில்லை கொண்டாடுவதுமில்லை.

10. ராவத்தூர், சூலூர், கோவை

இருகூர் பஞ்சாயத்து ராவத்தூர் கிராமம் கலைஞர் நகர், சக்கிலியர் சமூக இளைஞர்களால் கொண்டாடப்பட்டது. சக்கிலியர் சமூக மக்கள் வசிக்கும் பகுதியில்தான் நடந்தது. மற்ற சமூகத்தைச் சார்ந்தவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள்.

11. இருகூர், சூலூர், கோவை

இருகூர் ஏ.ஜி புதூர் பகுதியில் மதுரைவீரன் நண்பர்கள் என்ற பெயரில் 8 ஆம் ஆண்டாக அங்குள்ள சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் பொங்கல் கொண்டாடினர். இதுவும் சக்கிலியர் வசிக்கும் பகுதியில்தான் நடந்து.

12. புலியகுளம், கோவை

புலியகுளம் மாரியம்மன் கோவில் பகுதியில் 'தேவேந்திரகுல வேளாளர் பஞ்சாயத்து சபை' சார்பாக 'இந்திர விழா' என்கிற பெயரில் கொண்டாடப்பட்டது. பள்ளர் சமூகம் மட்டுமே இதைக் கொண்டாடினர்.

13. பாப்பம்பட்டி, சூலூர், கோவை

அயோத்திபுரம் பகுதியில் கவுண்டர் சமூதாயத்தைச் சார்ந்தவர்கள் தனியாக பொங்கல் கொண்டாடுவார்கள். மற்ற சமூகத்தை சார்ந்தவர்கள் யாரும் கலந்துகொள்ள மாட்டார்கள்.

பிற்படுத்தப்பட்ட மக்களின் தனிப்பொங்கல்

1. சூலூர் (காங்கேயம் பாளையம்), கோவை

காங்கேயம் பாளையம் பெரிய பிள்ளையார் கோவில் வீதியில் 'விவேகானந்தர் நற்பணி மன்றம்' சார்பாக காங்கேயம்பாளையம் காவிப்படை என்கிற பெயரில் 4 ஆம் ஆண்டு பொங்கல் விழா பிற்படுத்தப்பட்ட மக்களால் கொண்டாடப்பட்டது.

2. வரதராஜபுரம், சிங்காநல்லூர், கோவை

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் (AIYF) வரதராஜபுரம்மேடு கிளை சார்பாக 20 ஆம் ஆண்டு பொங்கல் விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாகக் கொண்டாடப்பட்டது.

3. இலட்சுமி மில்ஸ், பல்லடம், திருப்பூர்

இங்கு பல்வேறு பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடினர். இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்துகொள்ள அனுமதிப் பதில்லை.

4. செம்மிபாளையம், பல்லடம், திருப்பூர்

கவுண்டர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் கொண்டாடினர். கவுண்டர் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியில் தான் நடந்தது. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

5. அனுப்பட்டி, பல்லடம், திருப்பூர்

கவுண்டர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் கொண்டாடினர். கவுண்டர் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியில் தான் பொங்கல் விழா நடந்தது. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை.

6. கோடாங்கிபாளையம், பல்லடம், திருப்பூர்

பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அருகருகே வசிக்கின்றனர். இங்கு பொங்கல் விழா 24 வருடமாக கொண்டாடினாலும் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்துகொள்வதில்லை. முதன்மையாக முன்னின்று நடத்துவது கவுண்டர் சமூதாயத்தைச் சார்ந்தவர்கள்.

## ஒரே ஊரில் இரட்டைப் பொங்கல்:

1. சூலூர் , கோவை

சக்கிலியர் சமூகம் வசிக்கும் கிழக்கு அங்காளம்மன் கோவில் வீதியில் காந்தி நற்பணி மன்றம் சார்பாகக் கொண்டாடப்பட்டது. வேறு எந்தச் சமூகமும் கலந்துகொள்ள மாட்டார்கள்.

மதியழகன் நகர் முதல் வீதி மற்றும் இரண்டாம் வீதியில் வசிக்கும் பள்ளர் - பறையர் சமூக மக்கள் இணைந்து பொங்கல் விழா கொண்டாடினர்.

இங்கு மூன்றாம் வீதியில் வசிக்கும் சக்கிலியரை இணைத்துக்கொள்ள மாட்டார்கள். சக்கிலியர் சமூகம் கலந்துகொண்டால் பிரச்சனைகள் நடக்கும் என்பதால் அவர்கள் கலந்துகொள்ளுவதில்லை. சக்கிலியர் தனியாக பொங்கல் விழா நடத்தி கொண்டாடுவார்கள் இந்த முறை சக்கிலியர் சமூகம் கொண்டாடவில்லை.

பொங்காளியம்மன் கோவில் வீதியில் தேவர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் தனியாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவார்கள் இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

2. காளிவேலாம்பட்டி, பல்லடம், திருப்பூர்

15 ஆம் தேதி DYFI சார்பாக சக்கிலியர் மக்கள் மட்டுமே நடத்தி கொண்டாடினர். 16 ஆம் தேதி கவுண்டர் சமூகத்தைச் சார்ந்தவர்களும், இதர பிற்படுத்தப்பட்ட மக்களும் இணைந்து கொண்டாடினர். காந்தி நகர் பகுதியில் இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் தனியாகக் கொண்டாடினர்.

3. மாணிக்காபுரம், பல்லடம், திருப்பூர்

15 ஆம் தேதி சக்கிலியர் சமூக மக்களைத் திட்டமிட்டே தவிர்த்து பொதுவழியை மறைத்து

யாரும் வர முடியாதபடி அங்குள்ள கவுண்டர் சமுதாயத்தினர் பொங்கல் விழாவைக் கொண்டாடினர். அதற்கு அடுத்த நாள் 16 ஆம் தேதி அங்குள்ள சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் தனியாக, பொங்கல் விழா கொண்டாடினர்.

**4. கண்ணம்பாளையம், சூலூர், கோவை**

இங்கு AIYF சார்பில் மூன்று விதமாகப் பொங்கல் விளையாட்டு விழா கொண்டாடப்படுகிறது. அங்குள்ள CPI கட்சிப் பிரமுகர்கள் மூன்று இடத்திலும் சென்று சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

ஒன்று, 6 வது வார்டு அம்பேதகர் நகர் சக்கிலியர் சமூகத் தனிப்பொங்கல்.

இரண்டு, மருதம் நகர் மற்றும் வ.உ.சி நகர் ஆகிய இரண்டு பகுதிகளிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சார்பாகக் கொண்டாடுவார்கள்.

மூன்று, K.V.R நகர் கவுண்டர் சமுதாயத்தின் தனிப் பொங்கல்..

## திண்டுக்கல் மாவட்டம்: ஆத்தூர் ஒன்றியம்

**ஆத்தூர்:**

பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் கள்ளர், நாயக்கர், வன்னியர் (இந்து) வசிக்கும் பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் மட்டும் இணைந்து பிற்படுத்தப்பட்டோர் பொங்கல் நடத்தப்படுகிறது. விளையாட்டு விழாவோடு சேர்த்து இரண்டு நாட்கள் நடத்துகின்றனர்.

தலித் மக்களின் காலனிப்பகுதிகளில் பறையர் சமுதாயம் தனியாகவும், அருந்ததியினர் தனியாகவும் என காலனிக்குள்ளேயே இரட்டைப் பொங்கலை நடத்துகின்றனர். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் யாரோடும் இல்லாமல், பள்ளர் சமுதாயம் தனியாக ஒரு பொங்கலை நடத்துகிறது.

கிறிஸ்துவ மதத்தில் மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாளை அந்தோணியார் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். அன்றைய நாளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் தனியாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் (பறையர்) தனியாகவும் வழிபடுகின்றார்கள். விழாவாக இல்லாமல் பொங்கல் மட்டும் வைத்து கால்நடைகளை ஓட்டிவந்து மந்திரித்துச் செல்வார்கள். முஸ்லீம்கள் பொங்கல் விழா நடத்துவது இல்லை.

**அக்கரைப்பட்டி:** இந்து வெள்ளாளர், கள்ளர், அருந்ததியர், பள்ளர் சமூகத்தினர் தனித்தனியாக பொங்கல் விளையாட்டு விழா நடத்துகின்றனர்.

**பாறைப்பட்டி:** பிற்படுத்தப்பட்ட சமுதாயம் (கள்ளர்) தனியாகவும், தாழ்த்தப்பட்ட (பள்ளர்) சமுதாயம் தனியாகவும் பொங்கல் விளையாட்டுப் போட்டியினை நடத்துகின்றனர்.

## ஒட்டன்சத்திரம் ஒன்றியம்

**சாலைப்புதூர்:** செட்டியார், ஒக்கலிகர், பிள்ளைமார், பள்ளர்கள் ஆகிய ஜாதியினர் இணைந்து தனிப்பொங்கல், சக்கிலியர் மட்டும் தனிப் பொங்கல்

**அரங்கநாதபுரம்:** கொங்குக் கவுண்டர் தனிப்பொங்கல்

**லெக்கையன் கோட்டை:** நாயக்கர் தனிப் பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**புதுச்சத்திரம்:** கொங்குக் கவுண்டர் தனிப்பொங்கல், காலனியில் சக்கிலியர் தனிப்பொங்கல்

**எட்டமநாயக்கன்பட்டி:** நாயக்கர் தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**புதுஅத்திக்கோம்பை:** ஒக்கலிகர் மற்றும் கொங்குக் கவுண்டர் இணைந்து தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**கொல்லபட்டி:** தேவர், நாயக்கர், பிள்ளைமார் இணைந்து தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**அத்திக்கோம்பை:** வேட்டுவக்கவுண்டர் தனிப் பொங்கல், பிள்ளைமார் தனிப்பொங்கல், பறையர் தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**கே.கே.நகர்-ஒட்டன்சத்திரம்:** பிள்ளைமார் தனிப் பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**நாகனம்பட்டி:** ஒக்கலிகர் தனிப்பொங்கல், நாடார் தனிப்பொங்கல், கொங்குக் கவுண்டர் தனிப் பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**காந்திநகர்-ஒட்டன்சத்திரம்:** தேவர்களும், குறவர் களும் இணைந்து தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்

**திடீர்நகர்:** தேவர் தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்


**தங்கச்சியம்மாபட்டி:** பறையர் தனிப்பொங்கல், பள்ளர் தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல், போயர் தனிப்பொங்கல், கொங்குக் கவுண்டர் தனிப்பொங்கல் இந்த ஊரில் அரசு சார்பில் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனியாக கலையரங்கம் கட்டப்பட்டுள்ளது.

**கொசவபட்டி:** கொங்குக் கவுண்டர் தனிப்பொங்கல், சக்கிலியர் தனிப்பொங்கல்,

**அம்பிளிக்கை:** சக்கிலியர் தனிப்பொங்கல், பறையர் தனிப்பொங்கல், கொங்குக்கவுண்டர் தனிப் பொங்கல்.

**சிந்தலப்பட்டி:** சக்கிலியர் தனிப்பொங்கல், கொங்குக் கவுண்டர் தனிப்பொங்கல்..

பல்லடம் நாராயணமூர்த்தி



# இந்துத்துவப் பொங்கல்

தைப்பொங்கல் என்றாலே அது தமிழர் களின் விழா என்று கூறுவார்கள். தமிழர்களின் இலக்கியங்களின் “ஜாதி” என்ற ஒரு வார்த்தையே இல்லை என்று கூறுவார்கள். ஆனால் களத்தில் உண்மையான நிலவரம் அது இல்லை. தைப் பொங்கல் என்பது இந்து மதம் சார்ந்தே இயங்குகிறது. இந்து மதத்தின் சாஸ்திரம் சார்ந்தே இருக்கிறது. குலத்தொழில் அடிப்படையிலும் இருக்கிறது.

முதலில் மதம் சார்ந்து இருக்கும் அடையாளங்களைப் பார்ப்போம். இந்த விழாவை இந்து மதத்தவரைத் தவிர இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் யாரும் தங்களது வீடுகளில், தங்களது பண்பாட்டு அடையாளம் என்ற அடிப்படையில் கொண்டாடுவது இல்லை. இவர்கள் பொதுவெளியில் ஆதரிப்பார்களே ஒழிய வீடுகளில் கொண்டாடுவது இல்லை.

பொங்கல் பண்டிகையில் இந்து மத சாஸ்திரங்கள் கடைபிடிக்கப்படுகிறது. காலையில் சூரியன் உதயமாகும் பொழுது பொங்கல் வைப்பது சிறந்தது என்று நல்லநேரம் குறிப்பார்கள் பார்ப்பனர்கள். அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தான் பொங்கல் வைக்கப்படுகிறது. அதுமட்டு மல்லாது பொங்கல் வைக்கும் பானையில் பொங்கல் பொங்கி வரும் திசை கிழக்காக இருந்தால் அது குடும்பத்திற்கு நல்லது என்ற ஆழமான மூடநம்பிக்கையும் இதில் பின்பற்றப்படுகிறது.

## இந்து மதத்தைப் பாதுகாக்கும் பொங்கல் பண்டிகை

தைப்பொங்கல் என்றாலே அதில் அனைத்து ஜாதியினரும் அவரவர் உரிய ஜாதிய தொழிலில் ஈடுபட வேண்டிய கட்டாயமாகிறது. எப்படி என்றால் பொங்கல் வைப்பதற்கு மண்பானையே சிறந்தது என்று கூறப்படுகிறது. எனவே மண்பானை தயார் செய்ய குயவர் சமூகம் தேவைப்படுகிறது.

தைப்பொங்கல் என்றாலே அது வேட்டி சேலையுடன் தான் கொண்டாட வேண்டும் என்ற மனநிலை உள்ளதால் வேட்டி, சேலை நெய்ய அதற்குரிய ஜாதி தொழில் தேவைப்படுகிறது. நமது தொலைக்காட்சி விளம்பரங்களில் கூடப் பாரம்பரிய முறையில் வேஷ்டி சட்டைகள் செய்யப்படுகின்றது அதற்கென்றே பாரம்பரியமாக தொழில் செய்து வருபவர்களால் நெய்யப்பட்டது என்று விளம்பரம் செய்யகிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். இதில் பாரம்பரியத் தொழில் என்பது ஒரு குறிப்பிட்ட சாதி சார்ந்த தொழில் என்பது தெளிவாகிறது.

மேலும் பண்ணை வேலைகளைச் செய்வதற் கென்று தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் பயன்படுத்தப் படுகின்றனர். மாடு மேய்ப்பதிலும், விளைநிலங்களில் பணிபுரிவதிலும் தாழ்த்தப்பட்டவர்களின் பங்கு அதிகமாக உள்ளது.

பொங்கல் பண்டிகை என்றாலே அதில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கும். தங்களது வீடுகளைச் சுத்தம் செய்து சாணமிட்டு வழிப்பது,

அதில் கோலமிடுவது ,கோலமிட்ட இடத்தில் அடுப்பு, பானை வைத்து பொங்கல் வைப்பது, பலகாரம் செய்வது, சமையல் செய்வது போன்ற அனைத்து வீட்டு வேலைகளையும் பெண்களே விரும்பியோ அல்லது விரும்பாமலோ செய்யவேண்டியுள்ளது.

## கிராமங்களில் பொங்கல்

மார்கழி கடைசித் தேதியில் சங்கராந்தி பண்டிகை என்று வடமாநிலங்களில் கொண்டாடப் படுகிறது. நமது தமிழ்நாட்டில் போகிப் பண்டிகை என்று கொண்டாடப்படுகிறது பழையதை எரித்துவிட்டு புதிய பொருட்களை வாங்கி தை முதல் நாளைக் கொண்டாடத் தொடங்குவார்கள்.

தை முதல் நாள் சூரியப் பொங்கல் என்பது மண்பானையில், புது நெல், புது பானை வைத்து சாணத்தால் ஆன பிடித்து வைத்த பிள்ளையார் ஒன்றும், இஷ்ட தெய்வங்கள் என்ற அடிப்படையில் நடுகற்களை வைத்து வணங்கத் தொடங்குவார்கள்.

தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் என்று அழைக்கப்படுகிறது. நமக்காக உழைக்கும் ஜீவராசிகளுக்குப் பொங்கல் வைத்து வணங்குவதாகக் கூறிவரும் பண்டிகை. மாடுகளைச் சுத்தம் செய்ய, பண்ணையைச் சுத்தம் செய்ய தாழ்த்தப்பட்டவர்கள் பண்ணைக்கு தை முதல் நாளில் இருந்தே வேலை செய்யத் தொடங்கி விடுவார்கள்.

மாடுகளுக்கு பூஜை என்பது சிவபெருமானுக்கு நேரடியாக பூஜை செய்வதாகக் கருதுகின்றனர். சிவபெருமான் வாகனமாகக் கொண்டுள்ள நந்தியைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். மாட்டினைக் கழுவி, கொம்புக்கு வண்ணம் பூசி, பொட்டுகள் வைத்து, பூஜைக்குத் தயார் படுத்துகின்றனர்.

பொங்கலைத் தங்களது வீட்டின் பெண்கள் வைப்பார்கள். பூஜை முடிந்த பிறகு மாட்டிற்குச் சிறப்பான உணவுகள் கொடுக்கப்படுகின்றது. மாட்டிற்குக் கொடுக்கப்பட்டபின் நிறைவு நிகழ்வாக மாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பண்ணை முதலாளிகள் உணவு, உடைகள் கொடுப்பார்கள்.

அன்றாட வழக்கம்போல் ஜாதிய பழக்கவழக்க வேலைகள், பெண்களின் அடிமைப்பணிகள் என இந்து வர்ணாசிரம முறையானது பொங்கல் நாளிலும் மாறாமல் அப்படியே இயங்கும். சாட்சி கேட்பவர்கள், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பல கிராமங்களில் நேரடியாகவே இதைக் காணலாம்.

தை மூன்றாம் நாள் காணும் பொங்கல். கிராமப் பகுதிகளில் பூப்பறிக்கும் பண்டிகை என்பது அவரவர் வீட்டில் செய்த பலகாரங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரை,

**இன்று பொங்கல் விழாக்கள் முற்றிலும் இந்து மயமாகிவிட்டது.... நாளை நாம் எந்த விழா கொண்டாடினாலும் அறிவுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் பொருந்தாத விழாக்களாக அவை இருந்தால் அவையும் இந்து மதத்தால் கண்டிப்பாக ஜீரணிக்கப்படும்.**

குளத்தங்கரைப் பகுதிகளுக்குச் சென்று உண்டு மகிழும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் பறையடித்துக் கொண்டு முன்னே செல்வார்கள் மற்ற சாதியினர் பின் தொடர்ந்து செல்வார்கள். இந்த நிகழ்விலும் ஒவ்வொரு சாதியும் கலந்துவிடாமல் பாதுகாப்பாக நடக்கும்.

தென் மாவட்டங்களில் மட்டும் நடந்து கொண்டிருந்த ஜல்லிக்கட்டு விழாக்கள் இன்று தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் எங்காவது ஒரு இடத்தில் ஜல்லிக்கட்டு நடந்து கொண்டிருக்கின்றது. ஜல்லிக்கட்டில் இயங்கும் ஜாதியத்தைப் பற்றி, காட்டாறு இதழ் தனிச் சிறப்பிதழே வெளியிட்டது. அந்த இதழ் 2017 இல் தனி நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. அதை விரிவாகக் கூற வேண்டியதில்லை.

## நகரப்பொங்கல்

சிறுநகரங்களில் நடக்கும் பொங்கலை இரண்டு நாள் விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இந்த விழாவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவார்கள். எண்ணற்ற விளையாட்டுகள், போட்டிகள் நடக்கும். என்னதான் நகரங்களாக இருந்தாலும் ஜாதித் தெருக்களாக தான் இருக்கின்றது.

அந்தந்த ஜாதி தெருக்களில் பொங்கல் விழாக்கள் பாதுகாப்பாக தனித்தனியாக நடந்து கொண்டிருக்கின்றன. பொங்கல் விழாக்களில் ஆண்களுக்கு வீர விளையாட்டுகளும், பெண்களுக்கு கோலப் போட்டிகளும் நடக்கின்றன. முற்போக்கு இயக்கங்கள் நடத்தும் சமத்துவப் பொங்கல் என்று அழைக்கப்படும் பொங்கல்களிலும் மேலே கூறிய வகையில்தான் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த முற்போக்கு இயக்கங்கள் நடத்தும் விழாக்களில் கூட ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக விளையாட்டுகள் வரையறுக்கப் பட்டுள்ளன. நாம் வசிக்கும் நகரங்களாகட்டும், கிராமங்களாகட்டும் இரண்டிலும் அனைத்து ஜாதியினரும் ஒன்றிணைந்து ஓரிடத்தில் பொங்கல் வைத்து விழாவைக் கொண்டாடுவதில்லை. அப்படிப்பட்ட விழாக்களைக் காண்பதும் அரிதாகவுள்ளது.

தமிழ்தேசிய இயக்கங்களைச் சார்ந்தவர்களும் நமது பாரம்பரிய விழாக்களைக் காக்க வேண்டும் அடிப்படையில் சென்ற 2018 ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் தேதி அன்று பல்லடம் கொங்கு மஹாலில் “தமிழர் விழா பொங்கல் விழா”வை நடத்தினர். இந்த விழாவைத் தலைமை ஏற்று நடத்தியது “தாய் அறக்கட்டளை”. இந்த நிகழ்ச்சிக்குச் சிறப்பு

விருந்தினராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முன்னோடியான தோழர் ஆர். நல்லகண்ணு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த விழாவிற்கு காட்டாறு தோழர்களும் புத்தக விற்பனைக்காகச் சென்றிருந்தோம். அதில் நிறைய சான்றுகளுடன் நமக்கு புகைப்படங்கள் கிடைத்தன. இந்து மதத்தின் கடவுளின் புகைப்படங்கள் அதிகம் வைக்கப்பட்டிருந்தது. குறிஞ்சி நிலக் கடவுள் முருகன், முல்லை நிலக் கடவுள் திருமால், நெய்தல் நிலக் கடவுள் மச்சாவதார பெருமாள், மருத நிலக் கடவுள் சிவபெருமான் என்ற அடிப்படையில் புகைப் படங்கள் இருந்தன.

அந்தந்த ஜாதி தர்மப்படி செய்யப்பட்ட வேலைபாட்டுப் பொருட்கள் இந்த விழாவில் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தது. பாரம்பரிய முறைப்படி செக்கில் ஆட்டப்பட்ட எண்ணெய் வகைகள், பாரம்பரிய முறைப்படி செய்யப்பட்ட மாட்டு வண்டிகள், பழங்கால முறையில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் பொருட்கள், பழங்கால தானிய வகை உணவுகள், ஆண்களின் வீரத்தைக்காட்ட பயன்படுத்தும் இளவட்டக்கல், இந்து மத பழக்கவழக்கங்களை ஒட்டி பொங்கல் வைத்துக் கொண்டாடும் முறை போன்றவை காட்சியாக வைக்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பறையை அடிக்கும் ஜாதியினரால் பறை அடிக்கப் பட்டது.

மேலும் நமக்கு சான்று வேண்டும் என்று கருதினால் பொங்கல் விழா யாருடைய விழா என்று பாமரனை நோக்கி கேட்டுப்பாருங்கள் கண்டிப்பாக பதில் இந்து மத விழா என்பதாகத்தான் இருக்கும். நம் வீட்டில் இருக்கும் நாட்காட்டியைக் கொஞ்சம் திருப்பிப் பாருங்கள் அதில் விடுமுறை நாட்கள் என்பதில் பொங்கல் பண்டிகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இடமானது இந்துக்களின் பண்டிகை என்பதுதான்.

## முற்போக்குப் பொங்கல்

முற்போக்கு இயக்கங்கள் கொண்டாடும் பொங்கல் விழாக்கள், விளையாட்டு விழாக்களாகவும், பறையிசை நிகழ்ச்சிகளாகவும் இருக்கின்றன. அந்த இயக்கத்தைச் சார்ந்த தோழர்கள் சமத்துவமாக பொங்கல் வைத்து சமைத்து சாப்பிட்டுவிட்டு ஒரு பகுதி நிகழ்வாக மேடை நிகழ்ச்சியில் இது தமிழர்களின் விழா என்று கருத்துரை வழங்குகின்றனர். இது இந்து மதத்திற்கு சம்பந்தப்பட்ட விழா அல்ல என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

**அந்தந்த ஜாதி தெருக்களில் பொங்கல் விழாக்கள் பாதுகாப்பாக தனித்தனியாக நடந்து கொண்டிருக்கின்றன. பொங்கல் விழாக்களில் ஆண்களுக்கு வீர விளையாட்டுகளும், பெண்களுக்கு கோலப் போட்டிகளும் நடக்கின்றன.**

ஆனால் நடைமுறையில் வேறாக உள்ளது மார்கழி 31 சங்கராந்தி பண்டிகை தொடங்கி காணும் பொங்கல் பண்டிகை வரை இந்து மதத்தின் சாஸ்திரங்களும், பழக்கவழக்கங்களும், ஜாதி தர்மங்களும் கறாராகக் கடைபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றும் ஊர் பொங்கல், சேரிப் பொங்கல் என்றுதான் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பம் வளர்ந்த காலத்தில் கூட பழைமை, பழக்கவழக்கம், பாரம்பரியம் என்ற பெயரில் கல் அடுப்பு, மண் அடுப்பு, பொங்கல்பானை, வேட்டி, சேலை என்று அறிவுக்குப் பொருந்தாததைச் செய்கின்றனர். அரசியலமைப்புச் சட்டம் உருவாகிறது என்று தெரிந்தவுடன் தோழர் பெரியார் பழக்கவழக்கம் என்ற ஒன்றை சட்டத்தில் செய்து பார்ப்பனர்கள் சாதியைப் பாதுகாத்துக்கொள்வார்கள் என்று எச்சரித்தார். 1957 இல் அதை எரித்தார். இன்றும் அதே பழக்கவழக்கம், பாரம்பரியம் என்ற பெயரில் சாதியை பாதுகாக்கும் பணி தொடர்கிறது. அதற்கு நாமும் பலியாகிக் கொண்டிருக்கிறோம்.

தோழர் பெரியார், உழைக்கும் மக்களுக்கு விழாக்களும் கொண்டாட்டங்களும் தேவை தான் அவை அனைத்தும் எதிர்வரும் காலத்தில் முன்னேற்றத்திற்கும், அறிவிற்கும் உகந்த விழாக்களாக அமைய வேண்டும் என்று விரும்பினார். உழைக்கும் மக்களுக் கான பொங்கல் விழாவையும், மே தின விழாவையும் குடும்பம் குடும்பமாக, பொது விழாவாக நடத்தச் சொல்லி அறிக்கையும் விட்டார்.

ஆனால் இன்று பொங்கல் விழாக்கள் முற்றிலும் இந்து மயமாகிவிட்டது. மே தின விழாவை 90 களுக்குப் பிறகு மக்கள் விழாவாகக் காணவே முடியவில்லை. அனைவருக்கும் விழாக்களும், கொண்டாட்டங்களும் தங்களுடைய வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாகத்தான் உள்ளது. அது பிற்போக்குத்தனமாக இல்லாமல் அறிவியல் முற்போக்கை உடையதாக இருந்தால் மிகவும் சிறப்பாகவே இருக்கும்.

பொங்கல் விழா மட்டும் இல்லை நாளை நாம் எந்த விழா கொண்டாடினாலும் அறிவுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் பொருந்தாத விழாக்களாக அவை இருந்தால் அவையும் இந்து மதத்தால் கண்டிப்பாக ஜீரணிக்கப்படும். மாறாக அறிவுக்கும், அறிவியலுக்கும் பொருந்தக் கூடிய விழாக்களை, சுற்றுலாக்களை ஊக்கப்படுத்த வேண்டும் அவற்றைக் கொண்டாட வேண்டும்.

பொள்ளாச்சி விஜயராகவன்

# தலைவரும் தளபதியும்



திராவிடர் இனத்தின் ஒப்பற்ற தலைவர் கலகக்காரர் தோழர் பெரியார். திராவிடர் இனமான மீட்புப்பணியில் எந்தப் பொருளையும், நிகழ்வையும் ஆரியர், திராவிடர் இனப்போராட்டமாகவே பார்த்து, திராவிடர் இன மீட்சிக்கு அரசியலில் ஆதரவு, எதிர்ப்பு நிலையை மேற்கொண்டு, புத்தருக்குப் பின்னால் பார்ப்பன ஆதிக்கக் கட்டமைப்பை முற்றிலும் துடைத்து எறியப் போராடியவர் தோழர் பெரியார்.

தன்னுடைய தலைமை மாணவராக இருந்த தோழர் அண்ணா அவர்கள் தோழர் பெரியாரையும், பெரியார் இயக்கத்தையும் விட்டுப் பிரிந்து தி.மு.க என்ற அரசியல் கட்சியைத் தொடங்கி 1967 இல் இராஜாஜி மற்றும் சில அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்றார். அந்த வெற்றிக்குப் பிறகு நடந்த நிகழ்வுகளைக் குறித்து இன்றைய இளைய தோழர்கள் அறிந்து கொள்ளவும், இன்றைய தமிழக அரசியலோடு ஒப்பிட்டுக்கொள்ளவும் மீள்பதிவுச் செய்யப்படுகிறது.

## உணர்ச்சிப் பெருக்கில் பெரியார்

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் 1967 சட்ட மன்றத் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கி வந்த வேளையில் பெரியாரின் எண்ணம் காமராசரையே சுற்றிச் சுற்றி வந்தது. காமராசரை ஒழித்தால் சமதர்மத்தை ஒழித்தது போலாகும் என்பதால் பார்ப்பனர்கள் காங்கிரசை ஒழிக்க நினைக்கின்றனர். இன்று நாட்டில் நடப்பது இனப்போரே ஆகும். மத, மூட நம்பிக்கையாளர்களால் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்திட முடியாது. மனுதர்ம ஆட்சியைக் கொண்டு வரத் துடிக்கும் ஆச்சாரியாருக்குக் கண்ணீர்த் துளிகளே நாற்காலி ஆகி விட்டனர். எனவே அவர்களையும் புறக்கணியுங்கள் என்று தாம் பேசிய கூட்டங்களில் விவரித்தார்.

சுதந்திரம் அடைந்தது முதல் இந்த நாட்டை ஆண்டு வந்த பலம் பொருந்திய காங்கிரசை அகற்ற, அண்ணா பிற கட்சிகளைத் தன்னுடன் கூட்டணியாகச் சேர்த்துக்கொண்டு தேர்தலைச் சந்தித்தார். ராஜாஜியின் சுதந்திரா கட்சி, காயிதே மில்லத் அவர்களின் முஸ்லீம் லீக், சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சி, ம.பொ.சிவஞானத்தின் தமிழரசு கட்சி, மூக்கையா தேவரின் பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகள் இந்தக் கூட்டணியில் இருந்தன.

பெருந்தலைவர் காமராசரின் ஆட்சியில் தமிழகம் பெரும் முன்னேற்றங்களைக் கண்டதோடு பெரியாரின் கனவுகளை நனவாக்கி நல்லாட்சி புரிந்தது என்பதால் நிபந்தனையற்ற தனது ஆதரவைக் காங்கிரஸ் இயக்கத்திற்கு அளிக்க வேண்டியவரானார் பெரியார். அதற்கேற்ப தனது 88 வது பிறந்தநாள் விழா அறிவிப்பில்,

“எனது கனவுகள் நனவாக, நேரிடையாகச் செயல்படுவது எனக்குத் திருப்தி அளிக்கக்கூடியது அல்லவா? எனவே நான் எனது இலட்சியத்தில் மனக் குறையடைய வேண்டிய நிலையில்லாதவனாக இருக்கிறேன். இதை 4, 5 மாதங்களுக்கு முன் காமராசர் வெளியிட்டார்.”

பெரியாருக்கு இன்று என்ன குறை? அவர் போட்ட பாதையில்தான் இன்று காங்கிரஸ் போய்க் கொண்டிருக்கிறது. அவர் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை என்பதாகப் பேசினார்.

“இனி எனக்கேதாவது குறை, கவலை இருக்குமானால் அது மக்களிடையில் காணப்படும் கவலையற்ற தன்மையும், எதிரிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகும் தன்மையும் பற்றித்தான். இந்த நிலைமை, காரியத்தைக் கெடுக்கும்படியான அவ்வளவு பலத்தை என்றுமே அடைய முடியாது என்பதோடு அதிக காலம் நிலைக்கவும் முடியாது. ஆகையால் அதை ஒரு குறையாகக் கருத வேண்டியதில்லை.

ஆனால் சண்டித் தொல்லையாகவே கருதுகிறேன். மனிதன் துன்பத்திற்கு ஆளாகாவிட்டாலும், தொல்லைக்கு ஆளாவது சகஜம் தான். எனது அருமைத் தோழர்களுக்கு, தேர்தல் முடியும் வரை காங்கிரசை நிபந்தனையின்றி ஆதரித்து, காங்கிரஸ் முழு வெற்றியடையப் பாடுபட வேண்டுமென்பது தான் எனது கட்டளை போன்ற விருப்பமாகும்.

*தேர்தலுக்குப் பிறகு பெரிய புரட்சிப் பணி நமக்கு இருக்கிறது. அதற்குள் தோழர்கள் தங்கள் குடும்பப் பணிகளையும் முடித்துக்கொண்டு, போர்முனைக்குச் செல்லும் போர்வீரன் போல் தாய், தந்தை, மனைவி மக்களிடம் பயணம் சொல்லிக் கொள்ளத் தயாராய் இருக்கவேண்டும்.''*

*என்று சட்ட மன்ற தேர்தலுக்கு திராவிடர் கழகத் தோழர்களுக்குத் தனது எண்ணத்தை வெளியிட்டார்.ஆனால் பெரியாரின் எண்ணத்திற்கு ஏற்ப காங்கிரசின் செயல்பாடுகள் இல்லை.*

*தள்ளாத வயதிலும் தாம் மேற்கொண்ட முடிவால் காங்கிரசை ஆதரித்து நாடு முழுதும் பிரச்சாரம் செய்தார் பெரியார். ஆனால் முடிவோ வேறாக இருந்தது. மகத்தான வெற்றியை திராவிட முன்னேற்ற கழகக் கூட்டணி பெற்றது. தனிப் பெரும்பான்மையோடு தேர்தலில் திமுக வென்றது. காங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. காமராசரும் தன் விருதுநகர் தொகுதியில் தோல்வியைத் தழுவினார்.*

*காங்கிரசின் படுதோல்வியும், குறிப்பாகக் காமராசரின் தோல்வியும் பெரியாரை மிகவும் பாதித்தது. ஆச்சாரியாரைக் கூட்டு சேர்த்துக்கொண்டு அண்ணா வென்றதில் கூடுதல் எரிச்சல் அடைந்திருந்தவர் அது குறித்துத் தனது கருத்தை வெளியிட்டார்.*

“பொதுவாக காமராசர் தோல்வியைத் தவிர மற்ற தோல்வி எதுவும் எனக்கு அவ்வளவாகக் கவலை தரவில்லை. நமது மக்கள் ஜனநாயக உரிமைக்குத் தகுதியற்றவர்கள் என்பது எனது வெகுநாளைய கருத்து. இப்போதைய வெற்றியை மாற்றவேண்டும் என்பதில் இந்த வெற்றியை அளித்த மக்களின் யோக்கியதையைச் சரிவர நிர்ணயிப்போமானால், நாம் ஒன்றும் தனி முயற்சி எடுத்துப் பாடுபட வேண்டியதில்லை.

நம் உயிர் போன்ற கொள்கைகளுக்கு இந்த ஆட்சியில் கேடு நேராதவரை, ஆட்சியின் போக்கைப்பற்றி நாம் கவலைப்பட அவசியமில்லை என்றே கருதுகிறோம். பொதுவாக, இதுபோன்ற பார்ப்பனர் வெற்றி பற்றி எனக்கு இதற்குமுன் மூன்று அனுபவங்கள் உண்டு. மூன்றிலும் பார்ப்பனர் வெற்றி நிலைத்த பாடில்லை. ஆதலால் இன்றையப் பார்ப்பனர் வெற்றி பற்றியும் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை என்றே நம் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் அதிகக் கவலைப்படவில்லை.

பொதுவாக நம் நாட்டுக்கு இப்படி ஓர் நிலை வரக்கூடும் என்று கருதியே 1963 ல் காமராசர் தமிழ்நாட்டு முதல் மந்திரி பதவியைவிட்டு அகில இந்தியக் கட்சிப் பணிக்குச் சென்றபோதே நான் கூடாது என்று பத்திரிகையில் எழுதியதோடு “தங்கள் ராஜினாமா தமிழர்களுக்கும், தமிழ் நாட்டிற்கும், தங்களுக்கும் தற்கொலைக்கு ஒப்பாகும்” என்று தந்தியும் அனுப்பினேன்.

அவர் விலகியதன் பயனாகத் தமிழ்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமான ஆட்சி ஏற்படுவதுடன், பொறுப்புள்ள ஆட்சி அமைவதற்கில்லாமலே போய்விட்டது. வடநாட்டிலும் பொறாமை, துவேஷம், கோஷ்டி ஏற்பட இடம் ஏற்பட்டுவிட்டது.

காமராசர் தோல்வியைப்பற்றி, பலர் என்னிடம் வந்து துக்கம் விசாரிக்கும் தன்மைபோல், தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.அவர்களுக்கு நான் அளித்த ஆறுதல்,

“1967 பிப்ரவரி 23 -ந் தேதி தோல்வியைப்பற்றிக் கவலைப் படுவதைவிட 1966 நவம்பர் 7-ந் தேதி டெல்லியில் நடைபெற்ற கொலை முயற்சியில், அவர் உயிர் தப்பியதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்பினேன். நானும் அப்படியே நினைத்துத்தான் சரிபடுத்திக் கொண்டேன்”.

*காமராசரின், காங்கிரசின் தோல்வியைத் தன் தோல்வியாகக் கருதிய பெரியாரின் மனம் இப்படியிருக்க, இமாலய வெற்றியை பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா தலைமையில் ஆட்சியைப் பிடித்தது. இந்தத் தேர்தலில் அண்ணா பாராளுமன்றத்திற்காகத் தென் சென்னைத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் சட்டசபை தி.மு.க. தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.*

*இந்நிலையில் எவரும் எதிர்பாராத ஒரு நிகழ்வு நடைபெற்றது. தாம் கண்ட தலைவரும், கொண்ட தலைவரும் அவர் ஒருவரே என்று எந்தப் பெரியாரைப்பற்றி அண்ணா கூறினாரோ, அந்தப் பெரியாரை விட்டு விலக நேரிட்டதோடு, அவரால் 18 ஆண்டு காலம் ஏச்சுக்கும், பேச்சும் ஆளானாரோ அந்தப் பெரியாரைக் காணவேண்டும். அவரிடம் வாழ்த்துப் பெற வேண்டும் என்ற தனது எண்ணத்தைக் கழக முன்னணியினருக்குத் தெரிவித்தார். ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர் அவர்கள். பெரியாரைச் சந்தித்தே ஆக வேண்டும் என்ற அண்ணாவின் உறுதி 02..03.1967 அன்று நிகழ்ந்தது.*

*திருச்சியில் இருந்த பெரியாரைச் சந்திக்க நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, அன்பில் தர்மலிங்கம் ஆகியோருடன் காரில் புறப்பட்ட அண்ணா, தன் குழுவினருடன் சென்று பெரியார் தங்கியிருந்த இல்லம் சென்றார். அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்ற அன்னை மணியம்மையார், தந்தை பெரியாரிடம் விவரம் கூற, உணர்ச்சிவயப்பட்டவராக இருந்த பெரியாரிடம் சென்ற அண்ணா, ''அய்யா நலமாக இருக்கின்றீர்களா?'' என்று கேட்க, தடுமாற்றத்துடன் ''சுகமாக இருக்கிறேன். நீங்கள் எல்லோரும் நலமா? ரொம்ப சந்தோஷம்'' என்றார். உணர்ச்சிப் பெருக்கில் இருவர் கண்களிலும் கண்ணீர்.*

*06.03.1967 அன்று தாம் முதலமைச்சராகப் பதவி ஏற்க இருப்பதைச் சொன்ன அண்ணா, தங்கள் ஆசி பெற்றுச் செல்லவே வந்தோம் என்றார். சிற்றுண்டிக்குப்பின் விடை பெற்ற அண்ணாவிடம், என்னைக் கூச்சப்பட வைத்து விட்டீர்கள் என்றார்*

பெரியார். அச்சமயம் அவர்களின் மனதில் என்னென்ன ஓடின என்பது அவர்கட்கே வெளிச்சம்.

உணர்ச்சிப் பெருக்கில் மௌனமாகிப் போன பெரியாரிடம் "நாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நீங்கள்தான் சொல்லித்தரவேண்டும்" என்றார் அண்ணா. சற்று நினைத்துப் பார்த்தால், வரலாற்றில் இப்படியொரு சூழ்நிலை எந்தத் தலைவருக்காவது நிகழ்ந்துள்ளதாவெனில் இல்லை என்பதே உண்மை.

## இந்த அமைச்சரவை தந்தை பெரியாருக்குக் காணிக்கை

நம்மால் உருவாக்கப்பட்டவர்கள் என்றாலும் நம்மைக் குறை கூறிப் பிரிந்து சென்றவர்கள், நம்மிடம் அன்றாடம் ஏச்சையும், பேச்சையும் வாங்கி கட்டிக் கொண்டவர்கள், கொஞ்ச நஞ்சமல்ல, பதினெட்டாண்டு காலம் இத்தகைய நிலையில் வளர்ந்தவர்கள் என்றாலும் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றம் ஏதும் கொள்ளாமல் நிலைநிறுத்தியதோடு, வளர்ந்து, உயர்ந்து இன்று ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு ஆளாகி எவ்வித விரோத எண்ணமுமின்றி, தம் வாழ்நாளில் வேறு ஒருவரைத் தம் தலைவரென ஏற்றுக்கொள்ளாக் காரணத்தால் திறந்த மனதோடு வெற்றி பெற்றதும் உடனடியாகக் ஓடோடி வந்து தம்மிடம் வாழ்த்து பெற்றுச் சென்ற அண்ணாவையும், அவர்தம் தம்பிமார்களையும் எண்ணி எண்ணி மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த நிலையில் இருந்தார் பெரியார்.

இருந்தாலும் பார்ப்பனத் தலைவர் ராஜாஜியின் ஒத்துழைப்போடு அண்ணா வெற்றி பெற்றது முழு அமைதியை அவருக்குத் தரவில்லை.அவர் அமைதி பெறும் வகையில் அடுத்தடுத்த நிகழ்வுகள் நடந்தேறின.

06.03.1967 அன்று தன்னோடு நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, மதியழகன் கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மாதவன், சாதிக் பாட்சா மற்றும் முத்துசாமி ஆகியோரை அமைச்சர்களாக இணைத்துக்கொண்டு முதலமைச்சராகப் பதவியேற்ற அண்ணா "இந்த அமைச்சரவை தந்தை பெரியாருக்குக் காணிக்கை" என்றார். தம் ஆயுளுக்குள் இது நிகழும் என்று முன்னமே எண்ணியிருந்திருப்பாரோ? 01.01.1962 நாளிட்ட விடுதலையில் அவர் எழுதிய ஓர் அறிக்கையில் இருக்கும் இந்த வரிகள் அதனை உறுதி செய்யும் முகத்தான் உள்ளனவே?

"இனி கண்ணீர்த்துளிக் கட்சி தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவ வேண்டுமானால் பார்ப்பன வெறுப்புக் காரணத்தைத்தான் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள். இந்தக் காரியத்திற்கு என்னை அணுகலாம். நானும் ஆதரவளிக்கலாம்"

பெரியாரின் எண்ணமும் நிலையும் இவ்வாறு இருக்க திராவிடர் கழகத்தார் சிலரின் எண்ணம் வேறாக இருந்தது. அவர்கள் அண்ணா திரும்பி வந்து பெரியாரைச் சந்தித்ததும், பெரியார் அவர்களை அரவணைத்ததும் அவர்களுக்கு ஏற்பில்லை. அதனை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கினர்.

ஆனால் அந்தக் கருத்துக்களைப் பெரியார் ஏற்கவில்லை. தம் வாழ்வில் இன நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர், அதற்காக எதையும் விலை கொடுக்கத் தயாரானவர் என்ற காரணத்தால் தன் தொண்டர்களின் எண்ணங்களுக்குத் தெளிவான தனது பதிலை 09.03.1967 விடுதலையில் விரிவாகக் கூறினார்.

"தேர்தல் முடிவுக்குப் பின்னிட்டு நான் தெரிவித்த எனது கருத்தாகிய அறிக்கைகளைப் பற்றி எனது தோழர்களிடையிலும், காங்கிரஸ்காரர்களிடையிலும், பொது மக்களிடையிலும் ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சிலரை நேரில் பார்த்த அளவிலும், சிலரால் எனக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் பார்த்த அளவிலும் எதிர்க்கட்சித் தலைவர்கள் என்னைக் கண்டு பேசிய பிறகு எனது கருத்து மாறிவிட்டதாகவும் எனது எதிர்ப்பு உணர்ச்சியை நான் கைவிட்டு விட்டதாகவும் எதிரிகளுக்கு ஆதரவாகப் போவதாகவும், இதனால் எதிர்காலம் மிகவும் மோசமாய்ப் போய்விடுமென்றும், நாம் ஆதரிக்க ஆரம்பித்து விட்டால் எதிரிகள் தலை கால் தெரியாமல் ஆடுவார்கள் என்றும் இதனால் சாதாரண மக்களும், நம் கழகத் தோழர்களும் பழி வாங்கப்படுவார்கள் என்றும், என்னை நம்பியவர்களை நான் காட்டிக் கொடுத்து விட்டதாக ஆகுமென்றும், முடிவாக நானும் எதிரிகளைக் கண்டு பயந்துபோய் வளைந்து கொடுத்து விட்டேன் என்றும், பிளேட்டைத் திருப்பிப் போட்டு விட்டேன் என்றும், இந்த நிலைமையை யாருமே எதிர்பார்க்கவில்லையென்றும் தெரிவித்திருப்பதோடு, சிலர் கடுமையான பதங்களைப் பிரயோகப் படுத்திக் கீழ்த்தரமான தன்மையில் கையெழுத்தில்லாத கடிதங்கள் மூலமும் தெரிவித்திருக்கிறார்கள்.

இவற்றைக் கண்டு நான் ஆச்சர்யப்படவில்லை. மனதில் இதைப்பற்றி எவ்வித கலக்கமும் கொள்ளவில்லை. ஏனென்றால் இப்படிப்பட்ட சமயத்தில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதில் யாருடைய யோசனையையும் நான் கேட்க வேண்டுமென்று கருதி இருந்தவனல்ல. அன்றியும் பிறர் என்ன நினைப்பார்கள் என்பது பற்றிச் சிந்தித்து நடக்கவேண்டும் என்ற கவலை கொண்டவனுமல்ல. மற்றென்ன வென்றால் இப்படிப்பட்ட சமயத்தில் மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவன் என்றும், அதற்கு நான் ஒருவன் தான் நடுநிலைமையில் இருப்பவன், இருக்க வேண்டியவன் என்றும் கருதிக்கொண்டிருப்பவன்.

ஆனதால் எனது கருத்தைத் தெரிவித்துக் கொண்டதற்காக மற்றவர்கள் என்மீது ஆத்திரப் பட்டவர்களானால், அதற்காக வருத்தப்படுவதோ,

அல்லது என் கருத்தைத் திருத்திக் கொள்வதோ மாற்றிக்கொள்வதோ என்றால் அது எனது பதவிக்கு அழகல்ல என்றுதான் நான் கருதிக்கொள்ள வேண்டும்.

இன்றைய நிலைமை மிகமிக அதிசயமானதும், நெருக்கடியானதும் ஆகும். இராஜாஜி இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும்போது என்ன சொன்னார்? 'இராமன் குரங்குகளைப் பயன்படுத்திக்கொண்டது போல் நான் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறேன். இவர்கள் கைக்கு ஆட்சி வரும் படியாகக் காங்கிரசைத் தோற்கடித்தால்தான் காங்கிரசுக்கும் காங்கிரஸ் ஆதரவாளர் களுக்கும் வெட்கம் வரும். காங்கிரசுக்குச் செருப்பால் அடித்தது போன்ற அடி கொடுக்க வேண்டுமானால் இவர்களைக் கொண்டு காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும்' என்பதாக, ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் சொன்னார்.

அந்தப்படியே காங்கிரசைத் தோற்கடித்து இவர்களைக் கொண்டு வந்து பதவியில் வைத்து விட்டார். பதவிக்கு வந்தவர்களும் இராஜாஜியால்தான் பதவிக்கு வந்தோம் என்று கருதி நன்றிமேல் நன்றி தெரிவித்து, ஆசிர்வாதத்தின்மேல் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் நமது கடமை என்ன? உட்கார்ந்து கொண்டு அவமானப்பட்டதாகக் காட்டிக்கொண்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்ள நாமாக அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதா?

கூடுமானவரை தொல்லை கொடுக்க வேண்டிய அவசியம் நேரிடாமல் பார்த்துக்கொள்ளும் முயற்சியையாவது செய்து பார்த்து விடுவதா? நாம் தொல்லை கொடுப்பது என்று ஆரம்பித்துவிட்டால் குதூகலமாய்ப் பின் விளைவுகளைப்பற்றிக் கூட எண்ணாமல் நமக்கு ஆதரவு கொடுக்க மக்கள் முன்வருவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இதனால் பதவியிலிருப்பவர்கள் தொல்லைப்படலாமே தவிர மாறுதலடைந்து விட முடியுமா? அவர்களைப் பாதுகாப்பதற்கென்று பார்ப்பனர், பத்திரிகைக்காரர், பணக்காரர் முன்வருவார்கள். நாம் இந்த நான்கு தரப்பாரையும் சமாளிக்க வேண்டும். நம்மால் சமாளிக்க முடியும். ஆனால் பொது மக்கள் மீது இப்போது அவ்வளவு சுமை ஏற்ற வேண்டுமா?அவ்வளவு அவசியம் நமக்கு இருக்கிறதா?

ஏனென்றால் அண்ணாதுரை தீர்க்கதரிசி அல்லவானாலும் கெட்டிக்காரர். எவ்வளவு சீக்கிரம் அவர்களை (பார்ப்பனர்களை) விட்டு வெளியேற முடியுமோ வெளியேறி நமது மந்திரியாக ஆனாலும் ஆகக்கூடும். நமக்கே அண்ணாதுரை மந்திரி சபையை ஆதரித்து மறுபடியும் அவரே வந்தால் தேவலாம் என்று கருதும் படியான நிலைமை வந்தாலும் வரலாம்.

நாம் காமராசரின் கையைப் பலப்படுத்த வேண்டும் என்கிற கொள்கையில் இருந்தோம், இருக்கிறோமே தவிர காங்கிரசின் அடிமையல்லவே. அதுவும் நிபந்தனையற்ற அடிமை அல்லவே. அப்படியிருந்தால் பக்தவச்சலம் கண்டன நாள் கொண்டாடி இருப்போமா? இன்றுதான் ஆகட்டும். நாம் எந்த அளவில் இந்த மந்திரி சபையை ஆதரிப்பவர்களாக ஆகிவிட்டோம்? கொஞ்ச நாளைக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டாம் என்கின்ற நிலையில்தானே இருக்கிறோம்.

காங்கிரஸ்காரரை நினைத்துக்கொண்டு நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. பக்தவச்சலமே இவர்களுக்கு ஆறு மாத வாய்தா கொடுத்திருக்கிறாரே. நான் அப்படி வாய்தாகூடக் கொடுக்க வில்லையே? சமயம் எதிர்பாருங்கள் என்பதாகத்தானே சொல்கிறேன்? இதனால் நான் பயந்துவிட்டேன் என்று சொல்லப்படுவதனால் எனக்கு உள்ள மரியாதை எவ்வளவு? தோழர்களே மனதை விட்டுவிடாமல் உறுதியான மனத்தைக் கொண்டு எதையும் சிந்தியுங்கள்.''

*பெரியாரின் விரிவான, விளக்கமான இந்த அறிக்கையால் திராவிடர் கழகத் தொண்டர்களும், நடுநிலை வகிப்போரும் அமைதி கொண்டனர்.பதவியேற்ற அண்ணா தனது அமைச்சரவையைப் பார்ப்பனர் எவரும் இல்லாதவாறு அமைத்தார். பதவியேற்பின்போது உறுதிமொழி எடுத்துக்கொண்ட அமைச்சர்கள் வரலாற்றில் முதன்முறையாக, ''கடவுள் சாட்சியாக'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் ''உளமார'' எனச் சொல்லிப் பதவியேற்றது போன்ற நடவடிக்கைகள் பெரியாரை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தன.*

*திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்துத் தேர்தலில் வென்ற ராஜாஜி எப்படியும் அண்ணாவின் அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்று எண்ணியது ஈடேறவில்லை என்ற காரணத்தால் சபாநாயகர் தேர்தலில் தி.மு.க.வை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வி அடைய நேரிட்டது. அதன் பின் ஊடகங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்த ராஜாஜி 'தேன் நிலவு முடிந்து விட்டது' என்றார். பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கையை அண்ணா கைவிடவில்லை என்ற நிலையில் பெரிதும் ஆனந்தமடைந்தார் பெரியார்.*

## பெரியாரும் அண்ணாவின் ஆட்சியும்

*எதிர்பாராத வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றதையும்,தம்மினத் தலைவராம் ஆச்சாரியாரின் துணையோடு வெற்றி பெற்ற பின்னர்,அவர் விரும்பியவாறு அவரை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளாமல் புறக்கணித்ததையும்,அனைத்திற்கும் மேலாக எவரும் எதிர்பாராத திருப்பமாகத் தந்தை பெரியாரைச் சந்தித்த அண்ணா ஆட்சியே அவருக்குக் காணிக்கை என்றதும் பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு மிகுந்த எரிச்சலையூட்டின.*

*'கண்ட்ரோல் என்பதே எனக்குப் பிடிக்காது' என்று ஆச்சாரியார் சொல்வது போலவும் 'அதனால்தான் என்மீதுள்ள உங்கள் கண்ட்ரோலை நான் மெல்ல மெல்ல விலக்குகிறேன்' என்று அண்ணா கூறுவது போலவும் கேலிச் சித்திரம் வெளியிட்டது ஆனந்த விகடன்.*

*பெரிய சிம்மாசனத்தில் பெரியார் அமர்ந்திருப்பது போலவும், அண்ணாவும், அமைச்சர் பெருமக்களும் எதிரே மரியாதையோடு நிற்பதை ஆச்சாரியார் ஒளிந்திருந்து பார்ப்பது போலவும் ‘யாமிருக்க பயமேன்’ என்ற தலைப்பில் நகைச்சுவைப் படம் வெளியிட்டது சுதேசமித்திரன்.*

*அண்ணா ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் பெரியார் விடுதலையில் ஆட்சியாளர்கட்கான பல அறிவுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். மக்களின் உணவுப் பிரச்சனைகளைச் சமாளிப்பது, மாணவர்களுக்குக் கல்வி அளிப்பது, அதிலும் ஆங்கிலவழிக் கல்வியின் முக்கியம் ஆகியன பற்றி எழுதினார்.*

*16.04.1967 அன்று சென்னை கோட்டையில் ‘தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்’ என்ற மின் பெயர்ப் பலகையை முதலமைச்சர் அண்ணா திறந்து வைத்தார். அரசுக் கோப்புகளிலும் நடைமுறைகளிலும் மரியாதை நிமித்தமாகக் கூறப்பட்டு வந்த ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி போன்ற வடசொற்களுக்கு மாற்றாக திரு, திருமதி, செல்வி என்ற சொற்கள் பயன்படுத்தப்படும் என்ற அரசாணை 26.04.1967 அன்று வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வுகளால் மகிழ்ந்தார் பெரியார்.*

*இதே ஏப்ரல் மாதத்தில் சிதம்பரம் நகரில் திராவிடர் கழகத்தார் ஏற்பாடு செய்திருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டதற்கு பாராட்டு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர்களைப் பாராட்டிப் பேசினார் பெரியார்.*

*காமராசர் என்ற சொக்கத் தங்கத்தின் மேலிருந்த ஈடுபாடு காரணமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கத் தொடங்கிய அன்றைய நிலையிலும், காங்கிரசைப் புறந்தள்ளவில்லை என்பதும், தமது செயலுக்காக அவர் சிறிதும் தயங்கவில்லை என்பதும், காங்கிரஸ் கூட்டத்தில் பங்கேற்பதை அண்ணாவைச் சார்ந்தோர் விரும்புவரோ என்ற அய்யம் இல்லாமல் கலந்துகொண்டது வியப்பளிப்பதோடு அன்றைய அரசியல் நாகரிகத்திற்கும் பெரியாரின் தனித்துவத்துக்கும் இது ஓர் உதாரணமாய்த் திகழ்ந்தது என்றால் மிகையில்லை.*

*சமதர்மத் திட்டத்தின் மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்த பெரியார் மகிழும் வகையில் 19.04.1967 அன்று தனியார் மின் நிறுவனங்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் அண்ணா வெளியிட்டார்.*

*28.04.1967 அன்று பெரம்பலூர் மாவட்டம், ஒகளூர் என்ற ஊரில் அரசுப் பள்ளியில் புதிய கட்டடத் திறப்பு விழா அமைச்சர் ஏ.கோவிந்தசாமி தலைமையில் நடந்தது. அதில் கலந்து கொண்ட பெரியார், முதல்வர் அண்ணாவின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.*

*அண்ணாவின் ஆட்சியை அவ்வப்போது பாராட்டி வந்த பெரியார் சில விஷயங்களைக் கண்டிக்கவும் தயங்கவில்லை. ரூபாய்க்கு ஒருபடி அரிசித் திட்டத்தை தவறு என்றார். ‘இதனால் மிக்க நட்டம் ஏற்படும். இந்த அரிசி விலை குறைப்பே நியூசன்ஸ், அனாவசியத் தொல்லை’ என்றார்.*

*07.06.1967 அன்று திருச்சி மாநகரில் பெரியார் மாளிகையில் பெரியாரால் நடத்தி வைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்களின் மகள் உஷாவின் திருமணத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முதலமைச்சர் அண்ணா ஆற்றிய வரலாற்று சிறப்பு வாய்ந்த உரை இதோ:*

“என்னுடைய பொது வாழ்வில் எனக்குக் கிடைத்த ஒரே தலைவரான பெரியார் அவர்களே, நமது தமிழ்நாட்டில் மட்டும் வயதானவர்கள் வீட்டிற்குப் பெரியவர்களாக வீட்டிலேயே இருப்பார்கள். அவரது பிள்ளைகள் வெளியூர்களில் ஒருவர் டாக்டராகவும் ஒருவர் எஞ்சினீயராகவும் ஒருவர் வக்கீலாகவும் இருப்பர். அந்தப் பெரியவர் தன் மகன்களைச் சுட்டிக்காட்டி, அதோ போகிறானே அவன்தான் பெரியவன், டாக்டராக இருக்கிறான். இவன் அவனுக்கு அடுத்தவன் எஞ்சினீயராக இருக்கிறான். அவன் சிறியவன் வக்கீலாக இருக்கிறான். இவர்கள் எல்லோரும் எனது பிள்ளைகள் என்று கூறிப் பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைவார்.

அதுபோலப் பெரியவர்கள், நம்மாலே பயிற்சியளிக்கப்பட்டவர்கள் பல்வேறு கட்சிகளில் இருந்தாலும், அவன் என்னிடமிருந்தவன், இவன் என்னுடன் சுற்றியவன் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய பெருமை இந்தியாவிலேயே, உலகிலேயே பெரியார் ஒருவருக்குத்தான் உண்டு.

காங்கிரசில் இருப்பவர்களைப் பார்த்து, திமுகவில் இருப்பவர்களைப் பார்த்து, கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் கட்சியில் இருப்பவர்களைப் பார்த்து இவர்கள் என்னிடமிருந்தவர்கள். இவர்களுக்கு நான் பயிற்சி கொடுத்தேன், இன்று இவர்கள் சிறப்போடு இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய பெருமை அவர் ஒருவரையே சாரும்.

அவர் என்னுடைய தலைவர். நானும் அவரும் பிரிகிறபோது கூட நான் அவரையேதான் தலைவராகக் கொண்டேன். வேறு ஒருவரைத் தலைவராகப் பெறவில்லை. அந்த அவசியமும் வரவில்லை. அன்று ஏற்றுக்கொண்டது போல் இன்றும் அவரையே தலைவராகக் கொண்டுதான் பணி செய்து வருகிறேன்.

சுயமரியாதை இயக்கம் ஒழுக்கச் சிதைவு இயக்கம் அல்ல. மனித சமுதாயத்தை ஒழுக்க நெறிக்குக் கொண்டு வந்து முன்னேற்ற வேண்டும் என்பதற்காகப் பாடுபடும் இயக்கமாகும். சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவு இயக்கம். தமிழ் இயக்கத்தோடும் பிணைத்துக் கொண்டது. பகுத்தறிவுவாதிகளாகிய நாங்கள் பகுத்தறிவால்தான் மனித சமுதாயத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முடியும். அதற்கு எதிராக இருக்கிற மதம், புராணம் இவைகள் எல்லாம் மக்களின் எண்ணத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டு வருகிறோம்.

சுயமரியாதை இயக்கம் வளர்ந்து பெண்ணுரிமையைப் பெற்றிருக்கிறது. ஆலயங்களில் நுழையும் உரிமையைப் பெற்றிருக்கிறது. இன்னும் பல உரிமைகளைத் தமிழர்களுக்குப் பெற்றுத்

தந்திருக்கிறது. தமிழர்களின் குடும்பங்களில்பல, சுயமரியாதைத் திருமணங்களை ஏற்று நடத்தியிருக்கின்றன. சட்டப்படி செல்லாது என்று தெரிந்தும் அதனால் ஏற்படும் தொல்லைகளைப் பொருட்படுத்தாது, மக்களுக்காகத்தானே சட்டம் என்பதை உணர்ந்து, சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்கள் நமது வணக்கத்தற்கு உரியவர்கள் ஆவார்கள்.

எங்களது ஆட்சியில், விரைவில் சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டப்படிச் செல்லத் தக்கதாகச் சட்டம் கொண்டுவர இருக்கிறோம். ஏற்கனவே நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களும் சட்டப்படிச் செல்லத்தக்க தாகும் என்று சட்டம் கொண்டுவர இருக்கிறோம். பெரியாரவர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்ததை நாங்கள் வந்து செய்யும் வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நெடுந்தொலைவு பிரிந்து சென்றிருந்த மகன் தன் தந்தைக்கு மிகப் பிடித்தமான பொருளைக் கொண்டு வந்து கொடுப்பதைப்போல, நாங்கள் பெரியாரிடம் இக் கனியைச் (சட்டத்தை) சமர்ப்பிக்கின்றோம். எனக்கு முன் இருந்தவர்கள்கூட இதைச் செய்திருக்க முடியும். எனினும் நான் போய் நடத்த வேண்டிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு பெருமகிழ்ச்சியடைகிறேன்."

*முதலைமைச்சர் அண்ணாவின் இந்த உரையைக் கேட்ட பெரியார் அவர்கள், மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்திற்கே சென்று இந்த உரையை "நான் அருள் வாக்காகவே கருதிப் பாராட்டுகிறேன்" எனப் புகழ்ந்தார்.*

*20.06.1967 அன்று சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியின்போது பேசிய ஒரு தி.மு.க. உறுப்பினர் "பெரியாருக்குத் தியாகிகள் பென்ஷனும், அரசு மானியமும் வழங்கப்படுமா?" என்று கேட்ட கேள்விக்குப் பதிலுரைத்த முதலமைச்சர் அண்ணா, "இந்த அமைச்சரவையையே அவருக்கு காணிக்கையாகக் கொடுத்திருக்கிறோமே" என்றார்.*

*சொன்னதைச் செய்யும் கொள்கை கொண்ட அண்ணா 28.11.1967 அன்று தமிழ்நாடு இந்து திருமண (திருத்த) மசோதா என்ற பெயரில் சட்டம் கொண்டுவந்து 'சுயமரியாதைத் திருமணம் சட்டப்படியாக செல்லுபடியாகும்' என்று ஆணை பிறப்பித்தார். இது மட்டுமின்றி இந்த ஆணையில் இதற்கு முன் நடைபெற்ற அனைத்துச் சுயமரியாதைத் திருமணங்களும் செல்லும் என்றும் சட்டம் இயற்றப் பட்டிருந்தது. 06.12.1967 அன்று விருதுநகரில் நடைபெற்ற தி.மு.க. முன்னோடிகளில் ஒருவரான ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் மகளின் சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்திய முதலமைச்சர் அண்ணா அவர்கள், "இந்தத் திருமணச் சட்டம் பெரியாருக்குக் காணிக்கை" என்றார்.*

*தன் கொள்கைகள் தன் கண் முன்னே ஈடேறி வரும் உன்னதமான காட்சிகளைக் கண்டு பெரியார் மட்டற்ற மகிழ்வில் திளைத்திருந்தார்.*

அண்ணா அவர்கள் நம் நாட்டுக்கு நிதி என்றுதான் சொல்லவேண்டும். ஆட்சிப் பொறுப்பேற்றதும் பகுத்தறிவுக் கொள்கைப்படி துணிந்து ஆட்சி செய்து வருகிறார். ஒவ்வொரு மன்றங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் அண்ணா அவர்கள் படம் இருக்கவேண்டும். ஏனெனில் வரலாறு தோன்றிய காலம் முதல் இம்மாதிரிப் பகுத்தறிவாளர் ஆட்சி ஏற்பட்டதே கிடையாது.

– தோழர் பெரியார், விடுதலை, 10.09.1968

அண்ணா அவர்கள் நமக்கு கிடைத்ததற்கரியது கிடைத்தது போன்றவராவார்கள்; அவர் போனால் அடுத்த அந்த இடத்திற்குச் சரியான ஆள் இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு பெருமை உடையவர்கள் நமது நல்வாய்ப்பாக அவரது தலைமையில் பகுத்தறிவாளர் ஆட்சி அமைந்துள்ளது. இதனைக் காப்பாற்ற வேண்டியது தமிழர் கடமையாகும்.

– தோழர் பெரியார், விடுதலை, 06.11.1968

அண்ணா ஒருவர்தான் எந்தப் புரட்சியும் கொலையும் இல்லாமல் பகுத்தறிவு ஆட்சியை நிறுவியவராவார். லெனின் பகுத்தறிவு ஆட்சியை உண்டாக்கினார் என்றால் பாதிரிகள், பணக்காரர்கள், மதவாதிகளைக்கொன்று உண்டாக்கினார். ஆனால் அண்ணா ஒருவர்தான் ஒரு சொட்டு ரத்தம் சிந்தாமல் பார்ப்பனரை, பணக்காரனைக் கொல்லாமல் பகுத்தறிவு ஆட்சியை அதுவும் மக்களின் ஆதரவுப் பெற்று நிறுவியவராவார்.

– தோழர் பெரியார், விடுதலை, 23.12.1969

யார் ஆள்கிறார்கள் என்பதைவிட எப்படி ஆள்கிறார்கள் என்பதுதான் எனக்கு முக்கியம். சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, வகுப்புவாரி உரிமை ஆகிய எனது கொள்கைக்கு ஆதரவாகப் பகுத்தறிவுவாதிகளே (தி.மு.க) ஆட்சிக்கு வந்த பதவிப் பிரமாணம் கூட இவர்கள் கடவுள் பேரால் செய்யதாது திருப்தி அளிக்கிறது.

– தோழர் பெரியார், விடுதலை, 15.09.1967

திராவிட முன்னேற்றக்கழகம் என்பது சற்றேறக் குறைய இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளாக ஆரியர்களால் தாழ்த்தப்பட்டு, அடக்கப்பட்டுத் தலை நிமிராமல் அழுத்தி வைக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கென்றே தோற்றுவிக்கப்பட்ட கழகமாகும்.

– தோழர் பெரியார், விடுதலை, 11.03.1971

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவிலே பார்ப்பனர் தவிர்த்த மற்றத் திராவிடர் சமுதாயத்திற்குச் சிறப்பாகச் சமூகத்துறையில் அரசியல் மூலம் தொண்டாற்றும் ஸ்தாபனம் திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்றே ஒன்றுதான் என்று சொல்லும் படியான நிலையில் இருந்து வருகிறது.

– தோழர் பெரியார், விடுதலை, 11.03.1971

தி.மு.கழக ஆட்சியின் மூலந்தான் தமிழன் தான் அடைய வேண்டிய பலனை அடையமுடியும். ஆகவே இந்த ஆட்சிக்கு ஆதரவாக இருந்து பாதுகாக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

– தோழர் பெரியார், விடுதலை, 19.02.1973

**சான்றுகள்:**

*1. விடுதலை நாளிதழ்கள், 2.பெரியார் 95 நூல் - இனியன் பதிப்பகம், சீர்காழி.*

# தலித் மக்களின் குடிநீரில் விஷத்தைக் கலக்கும் பார்ப்பனியக் கொடூரம்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திலுள்ள குரும்பேரி கிராமத்தில் சுமார் 300 க்கும் மேற்பட்ட தலித் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அதே கிராமத்தில் வேளாளக் கவுண்டர்கள், செட்டியார்கள், வன்னியர்கள் என 1500க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களும் உள்ளன. காலம் காலமாக இத் தலித் மக்கள் ஆதிக்க ஜாதிகளின் நிலங்களில் விவசாயக் கூலிகளாக வேலை செய்து வந்துள்ளனர். சமீப காலமாகத் தான் இவர்களில் ஒரு சிலர் படித்து நகரங்களுக்கு வேலைக்கு சென்று சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர்.

## குரும்பேரி தலித் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட சாதிய வன்கொடுமைகள்: கால வரிசைப்படி

ஜனவரி 1: ஆதிக்க சாதியைச் சேர்ந்த கொங்குநாடு மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் வெங்கடேசன் தனது எருது மாட்டை வேண்டுமென்றே அவிழ்த்துவிட அது தலித் மக்கள் நிலத்தில் மேய்கிறது. மாட்டை அடித்து விரட்டுகின்றனர் தலித் மக்கள். மாட்டை தாழ்த்தப்பட்டவர்கள் தொட்டு விட்டதால் தீட்டாகிவிட்டது என்று சொல்லி மாட்டின் மீது தண்ணீர் தெளித்து தீட்டுக் கழிக்கின்றார் வெங்கடேசனும் அவனது கூட்டாளிகளும்.

ஜனவரி 6 இரவு: வெங்கடேசனின் தூண்டுதலின் பேரில் தலித் மக்கள் பயன்படுத்தும் பொதுக் கிணற்றில் விஷம் கலக்கப்படுகிறது. கிணற்றில் உள்ள மீன்கள், மீன்களை உண்ட கொக்குகள் ஆகியன கிணற்றிலேயெ இறந்து கிடக்க, அதனைப் பார்த்த தலித் மக்கள் அந்தத் தண்ணீரைக் குடிக்கவில்லை. இல்லையெனில் ஒரு தலித் கிராமமே அன்று மடிந்திருக்கும்! சாதிய வெறியர்களின் வன்மத்தால் படுகொலைசெய்யப்பட்டிருக்கும்.

ஜனவர 16: பொங்கல் திருவிழா அன்று சாமி ஊர்வலமாக வருகையில் சாதிய இந்துக்களில் ஒருவன் வெங்கடேசனின் தூண்டுதலில் அண்ணல் அம்பேத்கரின் சிலை மீது பீர் பாட்டிலை வீச அது சிலை மீது உடைந்து, தெறித்துச் சிதறுகிறது. ஒரு மாபெரும் புரட்சியாளரை திட்டமிட்டு இழிவு படுத்தப்படுகின்றார்.

ஜனவரி 17: இதனைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தை கட்சியினர் அண்ணல் சிலை முன்பு அமர்ந்து முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக அரசு அதிகாரிகள் இருதரப்பையும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கின்றனர். சார் ஆட்சியர் உட்பட, அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் முன்னிலையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. இருதரப்பும் சமாதான மாகி கைகுலுக்கி செல்கின்றனர்.

ஜனவரி 18: வேலை நிமித்தமாக ஆதிக்க சாதியினரின் வசிக்கும் பொதுத்தெரு வழியாகச் சென்ற அரி என்பரைப் பிடித்துச் சராமாரியாகத் தாக்கி அவரின் இருசக்கர வாகனத்தைக் கொளுத்துகின்றனர் சாதிய இந்துக்கள். அதனைக் கேள்விப்பட்டு அங்கு வந்த அரியின் சித்தப்பா அன்பரசு (விசிக தொண்டரணி பொறுப்பாளர்) என்பரையும் அக்கூட்டம் சரமாரியாகத் தாக்கி அவரது மண்டையையும் உடைக்கின்றனர்.

பின்னர் 400க்கும் மேற்பட்டோர் கூடி தலித் மக்களின் குடியிருப்புக்குச் சென்று, திட்டமிட்ட வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். வீடுகளைக் கொளுத்துகின்றர். 7 வாகனங்களைச் சேதப்படுத்துகின்றனர். அதில் 3 முற்றிலுமாகக் கொளுத்தப்படுகிறது. செங்கல்வராயன் என்ற இளைஞனை வீட்டிலில் நுழைந்து தாக்குகின்றனர். பெண்களை மானபங்கம் செய்து அடித்து உதைக்கின்றனர். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர். அதிர்ச்சியில் ஒரு சில இளம்பெண்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டு அது கூடத் தெரியாமல் வழிநெடுக ரத்தம் கசிந்தவாறே ஓடியுள்ளனர். இவை அனைத்தும் பாதுகாப்புக்கு இருந்த காவல் துறையினர் முன்னிலையிலே நடந்தது என்பது தான் வேதனைக்குரியது.

இதுபோன்ற சாதிய வன்கொடுமைகள் அரங்கேறும் போது ஆழமாக விசாரணை ஏதும் செய்யாமல் இரு தரப்பினரையும் ஒரே தராசில் சமமாகப் பாவித்து இரு தரப்பினரின் மீது வழக்குகளைப் போட்டு, குறிப்பாக பாதிக்கப்பட்ட தலித் மக்கள் மீது கொலை முயற்சி மற்றும் பொதுச் சொத்துக் களைச் சேதப்படுத்தியது போன்ற பிரிவுகளில் வழக்கை பதிவு செய்வது காவல்

- இதன் தொடர்ச்சி 19 ஆம் பக்கம்



# வனிதா மதில்:
## எங்கேயும் எழுப்ப வேண்டிய மதில்

பேராசிரியர் கிரண்குமார்

இந்தியாவில் சுவர்களுக்கென்றே தனி வரலாறு இருக்கிறது. அப்படியிருக்கும் போது அந்தச் சுவர்களை வெவ்வேறு கோணங்களில் நாம் அணுகலாம். இதுவரை நாம் இடித்தெரிந்த கோட்டைகள், சுவர்கள் எல்லாம் மத அடிப்படைவாதம் காலம் காலமாக கட்டிக்காத்து வந்த தீண்டாமைச் சுவர்கள் தான். ஆனால், முதன்முறையாக பெண்களுக்கெதிராக ஆணாதிக்க பார்ப்பனிய மதம் கொண்டுள்ள வெறுப்புணர்வையும் அதன் விளைவாக இந்த சமூகம் பின்பற்றும் மிகக் கடுமையான பாலின ஏற்றத் தாழ்வுகளை வேரறுக்கும் நோக்கிலும், பழைய கோட்டை சமஸ்தான - சாம்ராஜ்ஜியக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெரிந்து பாலின சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு கேரளாவில் பெண்கள் ஒன்றிணைந்து கட்டியெழுப்பியதே இந்த "வனிதா மதில் (அ) பெண்கள் மதில்".

அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI (M), ஸ்ரீ நாராயண தர்மா பரிபாலன யோகம் (SNDP) மற்றும் கேரளா புலையர் மகா சபா (KPMS) ஆகிய கட்சிகளின் முழு ஆதரவுடன் சாதி, மதங்களைக் கடந்து பாலின சமத்துவத்தை பறைசாற்றும் விதமாகவும் சபரிமலை கோவில் நுழைவுக்கு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்து கேரளாவில் சங்க் பரிவாரங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வன்முறைகளைக் கண்டித்தும் அணிதிரள்வது என்று KPMS-ன் தலைவர் புன்னல ஸ்ரீகுமாரின் தலைமையில் முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், அந்த நிகழ்விற்கு அரசு ஆதரவு அளிப்பதாக பினராயி விஜயன் அறிவித்தார். (அரசின் நிதியிலிருந்து இதற்கு பணம் கொடுக்கப்படவில்லை என்பதும் தெளிவு செய்யப்பட்டது)

கடந்த வருடம் டிசம்பர் 10-ஆம் தேதி சர்வதேச மனித உரிமை நாள் கொண்டப்பட்ட அந்த தினத்தன்று, கேரளாவின் இடது ஜனநாயக அரசு (LDF – Left Democratic Front) மற்றும் கேரளாவின் மத சீர்திருத்த அமைப்புகள் இணைந்து அந்த மாநிலத்தின் தனித்துவமான 'மறுமலர்ச்சி' காலகட்டத்தை (1920-களில்) நினைவுகூறும் வகையிலும், "அனைவருக்கும் இங்கே அனைத்து உரிமைகளும் இருக்கிறது" என்னும் அடிப்படையில் பெண்களுக்கான உரிமைகள் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்ற முக்கியமான காரணத்திற்காகவும் ஜனவரி 1-ஆம் தேதி மிகப் பெரிய பெண்கள் மனித சங்கிலி அமைக்கப்போவதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டார் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன்.

கேரளாவில் உள்ள பெண்கள், தலித்துகள் மற்றும் சட்டத்திற்கு விரோதமான வன்முறைப் போக்கு அதிகரித்து வருகின்ற சூழ்நிலையானது, இதுவரை ஒளித்துவைக்கப்பட்டிருந்த சாதிய எண்ணங்களை வெளிச்சப்படுத்தியுள்ளது. இது மீண்டும் சாதியக் கட்டுபாடுகளை சமூகச் சட்டங்களாக மாற்றத் துடிக்கும் இந்துத்துவ சக்திகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

இதற்கு உதாரணமாக 22.12.2018 ஆம் தேதி 'ஜென்ம பூமி' என்னும் ஆர்.எஸ்.எஸின் அதிகாரப்பூர்வப் பத்திரிக்கையில் "தெங்கு கேரேன்டவனே பிடிச்சு தலையில் கைய்யட்டும் போல் ஓர்கனம்" (தென்னை மரத்தில் ஏற்ற வேண்டியவனை தலையில் ஏற்றுவதற்கு முன் யோசித்திருக்க வேண்டும்) என்று கேரள முதலைமைச்சரின் சாதியைச் சொல்லி வெளியான கேலிச்சித்திரம் கேரளாவை சாதி-மதப் பிரச்சினைகளைக் கொண்டு துண்டாட துடித்துக் கொண்டிருக்கும் பி.ஜே.பியின் எண்ணத்தைத் தெளிவாக்கியுள்ளது.

**யாரிடமிருந்து பெண்ணுக்கு விடுதலை? "வேறு எந்தக் காரியத்துக்காகவும் இந்து மதத்தை ஒழிக்காமல் தாட்சண்யம் பார்ப்பதாயிருந்தாலும் பெண்களுடைய சுதந்திரத்தை உத்தேசித்தாவது இந்து மதமென்பது அழிய வேண்டியது மிக்க அவசியமாகும்",** *என்பதை நன்கு உணர்ந்திருந்த தந்தை பெரியார், நூற்றாண்டு காலமாய் இருந்துவருகின்ற பெண் ஒடுக்குமுறை மற்றும் அடிமைத்தனத்தில் இருந்து தங்களை முழுவதுமாக விடுவித்துக் கொள்வதற்காக அணிதிரள வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை எப்போதும் நினைவுபடுத்துகிறார்.*

*காரணம் பெண் விடுதலையென்பது எப்பொழுது தங்களின் வாழ்க்கை மீதான முழு அதிகாரத்தை அவர்கள் பெறுகிறார்களோ அது தான் பெண் விடுதலை. சாதி-மதம் மற்றும் இன்னும் சிலவற்றால் அடிமைகளாய் இருக்கும் இந்த உலகில் சமத்துவம் கோருவது என்பது அடிமைத்தனத்தில் பங்கெடுத்துக் கொள்வது போன்று தான். இந்த மதிலானது ஆண்களிடமிருந்து பெண்களைத் தற்காத்துக் கொள்வதற்காக அல்ல அடிப்படைவாத மதக் கோட்பாடுகள் ஏற்படுத்தியிருக்கும் அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காகத் தான்.*

*அப்படியிருக்கும் வேளையில் கேரளாவில் மத-சாதியத்தைக் கொன்றழிக்கும் வகையில்*

*"உயர் உயர் உயரோ, உணர் உணர் உணரோ, வனிதா மதிலினில் ஜாதி விஷத்தின் கரிநாதங்கள் தீண்டில்லா இனி இவரே திரிச்சு கொண்டு வரேன்டா, மதிலாய் எதிர்க்கும் ஈநங்கள், என்நும் எதிர்க்கும் ஈநங்கள்" (இன்னும் உயரமான சுவர்களை எழுப்பலாம், பெண்ணே விழித்துக் கொள்! ஜாதி விஷம் இனி இவர்களைத் தீண்டாது! திரும்பி கொண்டு வரவேண்டாம்! நாங்கள் அதை மதிலாய் எதிர்ப்போம்! இனி எப்பொழுதும் நாங்கள் அதை எதிர்ப்போம்!)*

*என்னும் பிரபா வர்மாவின் அதிகாரப்பூர்வ 'வனிதா மதில்' பாடல் கேரளாவின் பெண்களை யெல்லாம் மிக வேகமாக ஒன்றிணைத்தது. பெண்களை அதிகமாகக் கொண்ட மாநிலத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை மீண்டும் 2000 வருடங்களுக்கு முன்னிருந்த இருண்டகாலத்திற்குள் இழுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் இந்துத் துவத்தையெதிர்த்து பாடல், ஓவியங்கள், எழுத்து, அரசியல், கலாச்சாரம் என அனைத்துத் தளங்களிலும் மக்களை விழிப்படையச் செய்து இரண்டாம் புரட்சிக்காக வலுவான மதிலை எழுப்பியிருப்பது வரவேற்கத்தக்கது.*

*எப்பொழுதும் மதில்கள் கட்டுவதிலேயே கவனம் செலுத்தும் இந்துத்துவ பரிவாரங்கள், இந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்த உடனேயே மீண்டும் ஒரு மதில் கட்டினார்கள். இந்து அமைப்புகள் மற்றும் பாரதிய ஜனதா கட்சியினரின் துணைக் கொண்டு டிசம்பர் 26-ஆம் தேதி 'அய்யப்ப ஜோதி' என்னும் பெயரில் காசர்கோடிலிருந்து திருவனந்தபுரம் வரையில் பெண்கள் ஆண்கள் என அனைவரும் கையில் விளக்கு ஏந்தி சபரிமலையின் பாரம்பரிய சடங்கு உரிமைகளைப் பாதுகாப்ப தற்காக நின்றனர்.*

*அதில் சாதி மத அடிப்படைவாதத்தில் திளைத்திருக்கும் பெண்கள் மற்றும் ஆண்களை ஒன்று சேர்த்தனர். மேலும், நாயர் மற்றும் நம்பூதிரி சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் ஆண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தோல்வியை சந்தித்த இந்த 'அய்யப்ப ஜோதி' அணிவகுப்பை மற்ற மாநிலத்து சங்க் பரிவார ஊடகங்கள் பெறும் வெற்றி பெற்றதாக அறிவித்தது.*

*இந்த தோல்வியின் விளைவாக அடுத்த மூன்றாவது நாளில் டிசம்பர் 29-ஆம் தேதி 'வனிதா சங்கமம்' என்னும் பெயரில் 8 மாவட்டங்களில் காங்கிரஸ் (United Democratic Front – UDF) போரட்டங்களைத் தொடர்ந்தது. திருவனந்த புரத்தில் இருக்கும் தலைமைச் செயலகத்தின் முன்பும் ஆர்பாட்டம் நடந்தினார்கள். மேலும், இந்தப் போராட்டமானது அய்யப்ப ஜோதிக்கும் வனிதா மதிலுக்கும் எதிரானது என்று சொல்லி வனிதா மதிலின் தனித்துவத்தை திசைதிருப்ப முற்பட்டது காங்கிரஸ். கேரளாவில் சாதி-மதப் பிரிவினைவாதத்தைத் தூண்டுவதற்கே இடதுசாரி அரசு வனிதா மதிலை எழுப்புவதாக காங்கிரஸ் அறிவித்தது. கேரளாவைப் பொறுத்தவரையில் காங்கிரஸின் நிலைபாடு என்பது மிகவும் மோசமானது.*

## 170 அமைப்புகள் - 56 இலட்சம் பெண்கள்

*அறிவித்த தேதியின்படியே ஜனவரி 1 அன்று வடக்கில் (ஆரம்ப முனையில்) காசர்கோட்டில் மாநில சுகாதாரத் துறை அமைச்சர் கே.கே. சைலஜா தலைமை தாங்க தெற்கில் (முடிவின் கடைசியாக) திருவனந்தபுரத்தில் பிருந்தா காராத் தலைமை வகிக்க மொத்தம் 170-க்கும் மேற்பட்ட சமூக சீர்திருத்த அமைப்புகள் ஒன்றிணைந்து ஏறத்தாழ 56 லட்சம் பெண்களைக் கொண்டு 620 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையெங்கிலும் அமைக்கப்பட்ட மதில் தான் இந்த "வனிதா மதில்". அதில், அனைத்து தரப்பு மக்களும்; சமூக ஆர்வலர்கள், திரைப்பட நடிகர்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள், மற்றும் செவிலியர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.*

*வனிதா மதில் எந்தவிதமான மாற்றத்தையும் தந்துவிடப்போவதில்லை என்று சங்க் பரிவாரங்கள் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கையில், அங்கிருக்கும் பழங்குடியின மக்கள் திரளாக வந்து மதில் அமைத்தது, கருத்தைக் களத்திற்கு எடுத்துச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தியதைக் காட்சிப்படுத்துகிறது. மேலும், அட்டப்பாடியில் இருக்கும் பி.ஜே.பி கட்சியைச் சேர்ந்த பெண்களும், கட்சியின் முக்கிய பிரமுகரின் மனைவி உட்பட வனிதா மதில் அமைத்தனர் என்பதை அங்கிருக்கும் நமது DYFI தோழர் அனி பிரான்சிஸிசைத் தொடர்பு கொண்டபோது (Ani Francis) உறுதிப்படுத்தினார்.*

“வனிதா மதில் ஜிந்தாபாத்” என்னும் முழக்கம் இன்னும் அழுத்தமாக அடுத்த நாள் ஒழித்தது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 3-ஆம் தேதி திருவனந்தபுரத்தில் நடந்த ஆர்பாட்டத்தை பதிவு செய்ய வந்திருந்த செய்தி நிருபர்களை காவிகள் தாக்கத்தொடங்கினர். அதில் கைராளி செய்தி தொலைகாட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஒளிப்பதிவாளரான சாஜிலா அப்துல்ரகுமான் (கேமரா பெர்சன் ) காவிகளின் தாக்குதலுக்கு உள்ளான போதும் கைவிடாது அந்தப் போராட்டத்தினை அவர் பதிவு செய்துள்ளார். “சங்கிகளின் அரட்டலுக்குப் பயந்து என்னுடைய காமிராவைக் கீழே வைக்க மாட்டேன்” என்று பேட்டியளித்த போது நாம் மதில் வலிமையை புரிந்து கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைக் கொண்டு ஆராயும் போது United Nations Development Programme (UNDP) பாலின சமத்துவமின்மை குறியீட்டு அட்டவணையை (GII) 2015-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதில் பெண்களுக்கு ஆபத்து அதிகமாக இருக்கும் நாடுகளின் பட்டியலில் 155-நாடுகள் தேர்வு செய்யப்பட்டன. அதில் இந்தியா 130-வது இடம் என்பது இந்தியாவில் பெண்களின் நிலைமையை உலகறியச் செய்தது.

வனிதா மதிலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் கேரளாவின் மறுமலர்ச்சி காலகட்டத்தைச் சிறிது தெரிந்து கொள்வது ஏற்புடையது. “கேரள வரலாற்றில் நிகழ்ந்த சமூக சீர்திருத்த இயக்கங்களின் விளைவைப் பற்றி அறியாமையில் இருப்பவர்கள் தான் ‘வனிதா மதிலை’ எதிர்க்கின்றனர்” என்று பினராயி விஜயன் வெளிப்படையாக அறிவித்தார்.

## புரட்சிகள் ஏற்படுத்திய மறுமலர்ச்சி

கேரளாவைப் பொறுத்தவரையில் நிலப் பிரபுத்துவம் மற்றும் சாதியச் சுரண்டல்காரர்களின் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாகவும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி அடிமைத்தனத்தை நீட்டித்துக்கொள்ளும் திறன் உள்ள ஒரு கட்டமைப்பாகவும் செயல்பட்டது இந்துத்துவம் தான். மதமும் நிலப்பிரபுத்துவமும் ஒன்றிணைந்து சாதி ஆதிக்கத்தைப் பலப்படுத்தியிருந்த காலத்தில் சாதியைக் கட்டுக்குள் வைத்திருந்த முலைவரிச் சட்டத்தை எதிர்த்து நங்கேளியின் முலையறுப்புப் போராட்டம் தொடங்கி “மேல்சாதி இச்சைகளுக்கு எங்களின் மானத்தை அடகுவைப்பதா என்று சொல்லி, மானமே உயிர்” என்ற கருத்து மேலோங்கிய போது தோள் சீலைப் போராட்டம் வெற்றி கண்டது.

கேரள மறுமலர்ச்சி என்பது ஒரு விதத்தில் வருணாசிரம சாதிய அமைப்பின் வேரை ஆட்டம் காணவைத்தது. அதன் விளைவாக நாராயணகுரு போன்ற சீர்திருத்தவாதிகள் ஏற்படுத்திய மத சீர்திருத்தங்கள் வழியாக அய்யங்காளியின் தலைமையின் கீழ் நடந்த போராட்டங்கள், குருவாயூர் சத்தியாகிரகப் போராட்டம், மற்றும் வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம் போன்ற புரட்சிகளால் விதைக்கப்பட்ட விதையை இடதுசாரி இயங்கங்கள் தங்களின் இடைவிடாத முயற்சியின் மூலமாக இன்றைய கேரளாவின் அரசியல்-சமூகம்-பொருளாதாரம் ஆகியவற்றில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அய்யங்காளி மற்றும் கிறிஸ்துவ மிஷினரிகளின் பெரும் பங்களிப்பின் மூலமாக தலித்துகள் 1900-களில் ஏறக்குறை எல்லாவிதமான சாலைகளையும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். அரசியல், இலக்கியம், கலாச்சாரம் என அனைத்திலும் சாதியப் பாகுபாட்டையெதிர்த்து போர்க் கொடி தூக்கினார்கள். அதிலும் குறிப்பாக நம்பூதிரிகள் சமூதாயத்தில் நிலவிய மிகக் கொடூரமான பெண் வன்கொடுமைகளை உடைத் தெரிந்ததில் வி.டி. பாட்டத்திரிபாடின் பங்கு மிக முக்கியமானது. 1930-ஆம் ஆண்டு ‘அடுக்களையில் நின்னு அரங்கதேக்கு’ (அடுப்படியில் இருந்து அரங்கத்திற்கு) என்னும் நாடகம் கேரளாவில் ஒரு அழுத்தமான பெண்ணிய உணர்வை ஊட்டியது.

அதைத் தொடர்ந்து 1931-32ஆம் ஆண்டு கே. கேளப்பன், ஏ.கே. கோபாலன் போன்ற சீர்திருத்தவாதிகளின் தலைமையின் கீழ் நடைபெற்ற குருவாயூர் கோவில் நுழைவுப் போராட்டம் தான் இன்று கேரளாவில் நடக்கும் சபரிமலைப் போராட்டத்திற்கு முன்னொடி. அத்தனை போரட்டங்களின் விளைவாகத் தான் 1936-ஆம் ஆண்டிற்கு பிறகு கேரளாவில் உள்ள கோவில்கள் மற்றும் சாலைகளை அனைத்து சாதியினரும் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

வைக்கம் சத்தியாகிரப் போராட்டத்தில் தந்தை பெரியார் மற்றும் டி.கே. மாதவனின் இடைவிடாத எதிர்ப்புகளாலும் நாகம்மையார் மற்றும் மாதவனின் மனைவி ஆகியோர் அமைத்த பெண்கள் கூட்டணி கிராம் கிராமமாக சென்று சாதியப் பிரச்சினைகளுக்கு எதிராகவும், நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் போராடுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது. வைக்கம் போராட்டத்தை மேலும் வலுவாக்கியது. வரலாற்றில் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கத்தை உடைத்தெரிந்த நாகம்மையாரின் விழிப்புணர்வுப் பிராச்சாரத்தின் விதை இன்று ஏகாதிபத்திய ஆணாதிக்க படையெடுப்பை தடுப்பதற்கு வனிதா மதிலாய் எழுந்துள்ளது.



15 ஆம் பக்க தொடர்ச்சி

துறைக்கு வழக்க மாகிவிட்டது. தீண்டாமையை வேரறுப்பதற்கான எந்தத் தீவிர முயற்சியையும் அவர்கள் எடுப்பதில்லை.

குரும்பேரி சம்பவத்திலும் காவல்துறை இவ்வாறே வழக்கைப் பதிவு செய்துள்ளது என்பதனை அறிந்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர்களுடன், காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் இணைந்து களத்திற்குச் சென்று மக்களிடம் நிலவரத்தைக் கேட்டறிந்து, ஆறுதல் கூறிய பின் திருப்பத்தூர் டிஎஸ்பி தேசுராஜை சந்தித்துப் பேசினோம்.

இந்த சாதிய வெறியாட்டத்திற்கு காரணமான கொங்கு மக்கள் கட்சியைச் சேர்ந்த வெங்கடேசன், ஈஸ்வரன், குலோத்துங்கன் போன்றோரை உடனடியாகக் கைது செய்யக் கோரினோம். பாதிக்கப்பட்ட மக்கள் மீது சம்மந்தமின்றி போடப்பட்டுள்ள வழக்கை, அல்லது சில பிரிவுகளையாவது திரும்பப் பெற வேண்டுமென்றும் வலியுறுத்தினோம்.

அவரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் வேலூர் மாவட்ட டிஐஜி-யைச் சந்திக்க முடிவு செய்து, பாதிக்கப்பட்ட மக்களை வேலூருக்கு அழைத்து சென்றோம். பெருந்திரளாக மக்கள் அதிகாரியைச் சந்திக்கச் செல்வதை அறிந்து மாவட்டக் கண்காணிப்பாளர் பிரவேஷ் குமார் காட்பாடி காவல் நிலையத்தில் வைத்து மக்களின் பிரதிநிதிகளாகச் சென்ற எங்களைச் சந்தித்தார்.

மக்களின் பிரதிநிதிகளாக விசிக மாநில அமைப்பாளர் தோழர் நீலசந்திரகுமார், மாவட்டச் செயலாளர் தோழர் சுபாஷ் சந்திரபோஸ், மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர் தோழர் மகேசு, திவிக தோழர் சிவா, குறும்பட இயக்குநர் மற்றும் சமூக செயற்பாட்டார் தோழர் பாலு, ஆகியோர் சந்தித்து உண்மை நிலையை எடுத்துரைத்தோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கவும், அப்பாவி மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பபெறவும், இந்த சாதி வெறியாட்டத்தை நடத்திய அனைவரையும் கைது செய்யவேண்டும் என கோரிக்கைகளை முன் வைத்தோம். அவரும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். காவல்நிலையத்தில் பிடித்து வைக்கப்பட்டுள்ள 9 பேரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தோம். காவல்துறை உறுதி அளித்ததன் பெயரில் மீண்டும் மக்களை ஊருக்கு அனுப்பிவைத்துள்ளோம்.

21 ஆம் நூற்றாண்டிலும் நிலவும் இத்தகைய சாதிய வன்மம் மிகுந்த தாக்குதல்களை முறியடிக்க முற்போக்கு சக்திகள் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என விழைகின்றோம்.

## தமிழர்களின் மாடுகளை அடக்கிய தமிழர்கள் மீது ஜாதிவெறித்தாக்குதல் தமிழர் பண்பாட்டின் உண்மை முகம்!

திருச்சி மாநகரத்திலிருந்து தோகைமலை வழியாகக் கரூர் செல்லும் சாலையில் 10 கி.மீ தொலைவில் உள்ள ஊர் அதவத்தூர். அந்த ஊருக்கு அருகில் உள்ள இனியனூரில் பள்ளர்கள் சிறு அளவிலும், முத்தரையர்கள் பெரும்பான்மையாகவும் வசிக்கின்றனர்.

அதவத்தூர் கிராமத்தில் இந்த 2019 ஆம் ஆண்டு பொங்கலை ஒட்டி நடைபெற்ற ஜல்லிக் கட்டில் முத்தரையர் சாதியினருக்கு சொந்தமான காளை ஒன்றை பள்ளர் சமுதாய இளைஞர்கள் அடக்கியுள்ளனர். தமிழர்களின் பண்பாட்டை மீட்பதற்காக ஜல்லிக்கட்டுக் காளையை வளர்த்த முத்தரையர்களுக்கு - அதே தமிழர் பண்பாட்டை மீட்பதற்காக பள்ளர்கள் மாட்டை அடக்கியதை ஏற்க முடியவில்லை.

முத்தரையரின் மாட்டை அடக்கிய தமிழர்கள்... அதாவது பள்ளர்கள் மீது தாக்குதலை நடத்தினர். ஜல்லிக்கட்டு நடந்த இடத்திலேயே தாக்கியும் அவர்களுக்கு வெறி அடங்கவில்லை. தங்களது தமிழர் பண்பாட்டை, பாரம்பரியத்தை நிரூபிப்பதற் காக, பள்ளர்களின் பகுதிக்குள் புகுந்த 150 க்கும் மேற்பட்ட தமிழர்கள், சக தமிழர்களான பள்ளர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கியுள்ளனர்.

15.01.2019 இரவு நடத்தப்பட்ட அந்தத் தமிழர் பண்பாட்டுத் தாக்குதலில் பல ஆண்களும் பெண்களும் படுகாயமடைந்துள்ளனர். வீடுகள் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. சம்பவம் நடந்ததும் காவல் துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட சிலர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இதுபற்றிய செய்தியை நியூஸ் 18 தொலைக் காட்சியும் சில உள்ளூர் நாளிதழ்களும், சிலரது முகநூல் பக்கங்களும் வெளியிட்டன. ஜல்லிக்கட்டுக் காக தமிழ்இனமே பொங்கி எழுந்து தைப்புரட்சி நடந்து கொண்டிருப்பதாக நாடே அறிவித்துக் கொண்டிருந்த காலத்திலேயே “காட்டாறு”, அதவத்தூர்கள் தான் நடக்கப் போகின்றன என எச்சரித்தோம்.

அன்று, எமக்கு பதில் கூறியவர்கள், “ஜல்லிக் கட்டை ஜனநாயகப்படுத்துவோம்” என்றார்கள். அவர்களில் ஒருவரைக்கூட அதவத்தூரில் காண முடியவில்லை.

இதுதான் தமிழர்களின் பண்பாடு, பாரம்பரியம் என்றால், இந்தப் பண்பாடும், பாரம்பரியமும் அழிந்து போக வேண்டும் என்று உறுதி ஏற்போம்!

**தோழர் வாசுகி, மதுரை**



# நூல் அறிமுகம்

## நூலாசிரியர் அறிமுகம்

நூலாசிரியர் ஓவியா அவர்களை பெரியாரிலைப் பின்பற்றும் தோழர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள் என்றாலும், இந்நூலில் மிக அருமையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். அவரது தாத்தா காலத்திலிருந்து பெரியாரியலை வாழ்வியலாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர், ஆதலால் தற்போது அவரது பேரன், பேத்தி வரை தொடர்ந்து பெரியாரியலைக் கற்பித்து வருகிறார்.

அவரது கல்வி குறித்து நினைக்கும்போது என் நினைவுக்கு வருவது இந்தக்காட்சிதான். அவர் அப்போது சென்னையில் பாலிடெக்னிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். அப்போது தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவிற்காகப் மிகப்பெரிய பேரணி நடைபெறுகிறது. அப்பேரணியில் அவர் மட்டுமல்ல, அவருடன் பயின்ற தோழிகளையும் கலந்து கொள்ளச் செய்தார். அப்பேரணியில் என் குடும்பத்தாருடன் கலந்துகொண்ட என்னால், அக்காட்சியை இன்னும் மறக்க முடியவில்லை. அது என்னவென்றால், பேரணியில் கலந்துகொண்ட எங்களைப் பார்ப்பதற்கு வசதியாக கோஷமிட்டுக் கொண்டே பின்நோக்கி நடந்து வந்தார் பேரணி முடியும் வரை.

13 வயதில் திராவிடர் கழகப் பேச்சாளராக மதுரையில் இருந்த போதிகுத்து அவரது குடும்பத்துடன் எனக்கு நட்பு இருந்து வருகிறது. அது மட்டுமல்ல, அவர் தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம் தொடங்கியதிலிருந்து, அந்த இயக்கத்தின் அனைத்துச் செயல்பாடுகளிலும் ஓவியாவுடன் தொடர்ந்து பணியாற்றியிருக்கிறேன்.

அந்த இயக்கத்தின் தொடர் போராட்டத்தால் இந்தியாவிலேயே முதன்முதலாக வசந்தகுமாரி என்ற பெண் பேருந்து ஓட்டுநராக நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் நியமிக்கப்பட்டார். அதற்காக, மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தின் முன்பாக போராட்டம் நடத்தியது. இந்து அறநிலையத்துறையில் பெண்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக போராட்டம் நடத்தியது ஆகியவை எல்லாம் ஓவியாவுடனான மறக்க முடியாத நிகழ்வுகள். அந்த இயக்கத்திற்காக "புதிய குரல்" என்ற சிற்றிதழையும் நடத்தி வந்தார். தற்போது புதிய குரல் என்ற பெயரிலேயே சாதி ஒழிப்பையும் பாலின சமத்துவத்தையும் இலக்காகக் கொண்ட பண்பாட்டு அமைப்பை நடத்தி வருகிறார்.

## பெரியாரின் பெண்ணியம்

"தமிழ் இந்து" நாளிதழின் ஞாயிறு இணைப்பாக வரும் "பெண் இன்று" என்ற இணைப்பில் 30 வாரங்களாகத் தொடர்ந்து ஓவியா அவர்கள் பெண்ணுரிமை குறித்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பை நூலாகக் கொண்டுவர விரும்புவதாக பெரியாரியல் சிந்தனையாளர் தோழர்.பிரபாகரன் அழகர்சாமி தெரிவித்ததற்கிணங்க, அவரது "நிகர்மொழி பதிப்பகத்தின்" மூலம் இந்நூல் வெளிக் கொணரப்பட்டுள்ளது.




31 தலைப்புகளின் கீழ் பெண்ணுரிமை பற்றி பெரியாரிய நோக்கில் எழுதப்பட்டுள்ளது இந்நூல்.பெண்ணுரிமை குறித்து நிறையப்பேர் பேசியிருக்கலாம், எழுதியிருக்கலாம். ஆனால், பெரியார் பேசிய பெண் விடுதலை என்பது, அவளது குடும்பத்துக்கு அல்லது நாட்டுக்கு பயன் விளைவிப்பது அல்ல. மாறாக ஒவ்வொரு பெண்ணும், தனி மனுஷியாகத் தன் வாழ்க்கையைச் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனை. எனவே பெரியாரிய நோக்கில் எழுதப்பட்டுள்ள பெண்விடுதலை குறித்த நூலாக இது அமைந்துள்ளது.

## ஆண்களுடன் ஓர் உரையாடல்

பெண்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே எவ்வாறெல்லாம் வன்முறைக்கு ஆட்படுகிறார்கள் என்பதையும் அதற்கு இந்தச் சமுதாயமே காரணமாக உள்ளது என்பதையும், சமுதாய மாற்றம் ஏற்படாமல் இங்கு ஆணுக்கும் விடுதலையில்லை, பெண்ணுக்கும் விடுதலையில்லை என்பதை மிகத் தெளிவாக இந்நூலில் எடுத்துக்காட்டியுள்ளார் ஓவியா. மேலும் "பெண் ஆண் சமத்துவம் என்ற அடிப்படை பிரச்சினை குறித்தும் அதன் சிக்கல்கள், தீர்வுகள் பற்றியும் ஓர் உரையாடல் நிகழ்த்துவதே இந்நூலின் நோக்கம் என்றும் குறிப்பிடுகிறார்.

நம்முடைய சமுதாய அமைப்பில், ஓர் ஆண், பெண்ணைப் பாதுகாக்க வேண்டியவனாக இருக்கிறான்; எனவே ஓர் ஆண் எப்படி இருக்க வேண்டும், பெண் எப்படி இருக்க வேண்டும் என்ற படிமானங்கள் நமது மனங்களில் இருக்கிறது என்பது அவரது கருத்து.பெண்ணின் பிறப்பு என்பது அந்தப் பெற்றோருக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய ஒரு சம்பவமாக ஏன் தொடர்கிறது என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுப் பார்க்கவேண்டும் என்கிறார் அவர். ஆனால், ஒரு குடும்பம் வறுமை வயப்படுகிறது என்றால் அதன் முழு சுமைதாங்கியாக நிற்பவர்கள் பெண்கள்தான் என்று கூறகிறார்.

## உடையும் நகையும்

"நகைகளை வைத்தே ஒரு பெண் தன்னைத்தானே மதிப்பிடுகிறாள். கவரிங் நகையாவது போடாமல் இந்த சமுதாயத்தில் ஒரு பெண் நடமாடமுடியாது என்று நினைக்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறாள்" என்று குறிப்பிடுகிறார். இதெல்லாமே சமுதாயம் பெண்ணின் மீது நிகழ்த்தும் வன்முறைதான். மேலும், "ஆண்களின் சமுதாயச் செல்வாக்கைப் பறைசாற்றும் அலங்கார ஊர்திகளாக வாழ்வது அவமானம் என்பதைப் பெண்களுக்கு உணர்த்தாமல் பெண் விடுதலையும், மானுட விடுதலையும் சாத்தியமேயில்லை" என்று தனது கருத்தை ஆணித்தரமாகத் தெரிவிக்கிறார்.

## திணிக்கப்படும் கனவுகள்

பெண் குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களின் வளர்ப்பு முறையே அவளை ஓர் ஆணுக்கான பொருளாகத் தயாரிப்பதாகவே தொடர்கிறது. அது மட்டுமல்ல, ஐந்து வயதில் ஓட எத்தனிக்கும், மரத்திலேற எத்தனிக்கும் பெண் குழந்தைகளை ஓர் அதட்டல் தடுத்து நிறுத்துகிறது. கை,கால்களை உடைத்துக் கொண்டால், உன்னைக்கட்டிக்கொள்ள ஓர் ஆண்மகன் வராவிட்டால் உன் கதி என்ன? என்ற கேள்வி அவள் மனதை நிரந்தர ஊனமாக்குகிறது என்கிறார் தோழர் ஓவியா.

இவ்வாறு குழந்தைப் பருவத்திலிருந்தே, பெண்கள் பிறந்து வளர்வதே திருமணம் செய்து சிறப்பாக வாழ்வதற்கு மட்டும்தான் என்ற கோட்பாட்டை அவர்களது மூளையில் திணிக்கிறது இந்தச் சமுதாயம். ஒரு வகையில் பார்த்தால், அதனால்தான் பெண்களுக்கு தற்போது, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவாவது தெரியவேண்டாமா? என்ற கேள்வியுடன் குறைந்த பட்சமாக கல்லூரிக் கல்வி வரை படிப்பதற்கு அனுமதி கிடைத்து வருகிறது.

## மூளைக்கு விலங்கு

"தான் என்னவாக வரவேண்டும் என்கின்ற கேள்வி ஆணுக்கு உறுத்துவதுபோல் பெண்ணுக்கு உறுத்துவதில்லை. அந்தக் கேள்விக்கான பதில் அவள் மூளைக்குள் ஏற்கனவே திணிக்கப்பட்டு விடுகிறது. வீட்டு வேலைகள் பெண்ணின் மூளைக்குப் போடப்படும் முதல் விலங்கு" என்று கூறுகிறார் ஓவியா. அது மிகச்சரியான கருத்துதான். ஏனென்றால், திருமணத்திற்குப் பின் வீட்டைப் பராமரிப்பதையும், குழந்தையைப் பராமரிப்பதையும் தவிர, வேறு சிந்தனையே இருப்பதில்லை. பி.இ., படித்த எம்.இ., படித்த பெண்களுக்குக்கூட மூளையில் படிந்துள்ள இந்தச் சிந்தனை என்னும் விலங்கை ஒடிப்பது மிகவும் சிரமமான காரியம்தான்.

## பெண் பருவமடைதல்

ஓர் ஆண் பருவமடைந்து முதன் முதலாக விந்து வெளிப்படுவது சமுதாயத்தில் கொண்டாடப் பட வேண்டிய பெரிய நிகழ்வு அல்ல. ஆனால் அதே நேரத்தில் ஒரு பெண் பருவமடைவது பெரிதாகக் கொண்டாடப்படுகிறது. அந்தக் கொண்டாட்டம், ஓர் ஆணை திருப்திப்படுத்துவது மட்டுமே அவள் பிறப்பின் நோக்கமென்பதைப் பெண்ணுக்கு நினைவுபடுத்துவதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, சுதந்திரமாக சுற்றித் திரிந்த அவள் பருவமடைந்ததும் காவல் காக்கப்படுகிற ஒரு பொருளாக்கப்பட்டு விடுகிறாள் என்று குறிப்பிடுகிறார் நூலாசிரியர் ஓவியா. "பருவமடைதல் என்னும் நிகழ்ச்சி மூலமாகப் பெண்ணின் மனதுக்கும் கண்களுக்கும் ஒரு கலாச்சாரத் திரையைப் போடுகிறது இந்தச் சமுதாயம்". அதுமட்டுமல்ல, "இனப்பெருக்கம் செய்வதற்கான ஓர் அம்சமே இங்கு பெண்ணின் முழு வாழ்க்கையாக்கப்பட்டிருக்கிறது. இனப்பெருக்கம் செய்வது மட்டுமே மனிதர்களின் வாழ்க்கையா?" என்று வருத்தத்துடன் கேட்கிறார்.

பெண்ணுக்கு நிகழ்த்தப்படும் பூப்புனித நீராட்டுவிழா நிகழ்ச்சி, தன்னைத்தானே பாலியல் பண்டமாக அப்பெண்ணை உணர வைப்பதில்தான் முக்கியத்துவம் பெறுகிறது என்றும், தனக்கு வாழ்க்கைத்துணையாக வரப்போகும் ஓர் ஆணின் வரவே தனக்கு புதிய வாழ்க்கை தரப்போகிறது என்கின்ற அடிமைத்தனமான சிந்தனைக்கு அவள்

ஆட்படுவதும் இந்த நிகழ்ச்சியிலிருந்துதான் தொடங்குகிறது என்று தனது கருத்தைப் பதிவு செய்கிறார்.

### பாலியல் கல்வியின் தேவை

"கற்கும் பருவத்தில் ஒரு பையனுக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தின் அளவும் பெண்களுக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தின் அளவும் மலையளவு வேறுபாட்டுடனேயே இருக்கின்றன" என்று குறிப்பிடும் அவர், அதற்கான காரணத்தையும் தெரிவிக்கிறார். "வளரிளம் பருவத்தில் பெண்கள் சந்திக்கும் மிக முக்கியமான பிரச்சனை எதிர்பாலின ஈர்ப்பு. ஆனால் இந்தப் பருவத்தில்தான் கற்பு என்னும் மிகப் பெரிய வாழ்நாள் சுமையை அவள்மீது ஏற்றி வைக்கிறது இந்தச் சமுதாயம்"

எனவே, இயல்பாக ஏற்படும் பாலியல் உணர்வுத் தூண்டல்களையும் ஒழுக்கம் சார்ந்த பிரச்சனையாகக் கருதி துன்பப்படுகிறார்கள் இவர்கள் என்று கூறிவிட்டு, "பருவமடைதல் என்னும் நிகழ்வுக்கு பிந்திய வாழ்க்கையில் பையன்களையும் சிறுமிகளையும் வழிப்படுத்துகின்ற அறிவியல் சார்ந்த கல்வியும், அதற்கான முறையான நிறுவனங்களும் இன்று அத்தியாவசியத் தேவை" என்று பாலியல் கல்வியின் தேவையை வலியுறுத்துகிறார்.

### பின் தொடர்ந்தால் காதல் வருமா?

ஒரு பெண்ணைக் கவர்வதற்காக நம் இளைஞர்கள் செய்யும் அனைத்து தவறான செயல்களும் நமது திரைப்படங்களில் கதாநாயகர்கள் செய்கிறவைதான் என்று கூறும் அவர் "விருப்பமில்லாத ஒரு பெண்ணை பின் தொடர்வது சட்டப்படிக் குற்றம் என்று நம்மில் எத்தனைபேர்.நமது வீட்டுப் பையன்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம்?" என்று கேட்கிறார்.

### கட்டமைக்கப்படும் வன்மம்

பெண்களுக்கு இல்லையா இராப்பொழுது? எனும் அத்தியாயத்தில் கீழ்க்கண்டவாறு தனது ஆதங்கத்தைப் பதிவு செய்கிறார் ஓவியா. "வெளி உலகத்தில் ஒவ்வொரு இடத்திலும் ஒரு பெண் என்பதற்காகவே அவளுக்குத் தனித்த துன்பங்கள் காத்திருக்கின்றன" அதுவும் "ஒரு பெண்ணின் மீது அவள் உடல் மீதுள்ள ஆசையில் அல்ல; அவள் மீது ஏற்படும் கோபத்தினாலும் வெறுப்பினாலும் கூட ஓர் ஆண் அவளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த நினைக்கிறான்" இவையெல்லாம் பெண்ணின் மீது கட்டமைக்கப்படும் வன்மம்தானே!

அது மட்டுமல்ல "பையன்களுக்குள்ள முக்கியமான பிரச்சனை ஒரு பெண்ணின் மறுப்பில் தனது ஆண்மை இழிவுபடுத்தப்படுவதாகக் கருதிக் கொள்வதுதான்" என்று குறிப்பிடும் அவர் "உண்மையில் அவர்களுக்கு நாம் உணர்த்த வேண்டியது ஆண்மை என்கின்ற பதமே ஒரு போலி மயக்கம் என்பதைத்தான்" என்று கூறியதோடு, அதனால்தான் பெரியார், ஆண்மை என்கின்ற பதம் பெண்களால் அழிக்கப்பட்டலொழிய பெண்களுக்கு விடுதலை இல்லை"என்று கூறினார் என்பதையும் தெரிவிக்கிறார்.

### கணக்கில் வராத உழைப்பு

"ஒரு குடும்பம் பெண்ணின் உழைப்பின் மூலம் கிடைக்கும் வருவாயை இரண்டாம் தரமானதாகவே பார்க்கிறது. நிலையான வருவாய் தரக்கூடிய ஒரு வேலை என்பது ஆணின் திருமணத்திற்கு முன் நிபந்தனையாக இருக்கும் அதே நேரத்தில்,பெண் வேலைக்குப் போகலாமா? கூடாதா? என்பதைத் தீர்மானிப்பதே அவளின் திருமணமாக இருக்கிறது" இது எவ்வளவு பெரிய பாலின பாரபட்சம் என்று கேட்கிறார் ஓவியா.

வேலைக்குச் செல்லும் பெண்கள் எண்ணிக்கை நகரத்தோடு ஒப்பிடும்போது கிராமத்தில்தான் அதிகம். ஆனால், பொதுப் புத்தியில் நகரத்தில்தான் பெண்கள் வேலைக்குப் போவதாகப் பதிந்து போயுள்ளது. அதுமட்டுமல்ல, பெண் வேலைக்குச் செல்வது அந்த வீட்டு ஆணின் இயலாமையாகவோ, அவமானமாகவோ பார்க்கப்படுகிறது. இவ்வாறு பெண்களின் உழைப்பு கணக்கில் வராத உழைப்பாகவே இருக்கிறது என்கிறார்.

### திருமணம் என்னும் சடங்கு

பெண்ணுக்கு மட்டுமல்ல,ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் ஆணுக்குமே இங்கு திருமணம் நிர்ப்பந்தம் தான் என்று குறிப்பிடும் அவர், வயதுவந்த ஓர் ஆண் அல்லது பெண்ணின் இணையரை அவர்களின் பெற்றோர்தான் தீர்மானிக்கிறார்கள் என்பது வெளிநாட்டவர் பலருக்கும் வியப்பளிக்கக்கூடிய செய்தி என்கிறார். இதற்கு "ஒரே சாதிக்குள் திருமணம் என்கிற நடைமுறை 90 விழுக்காடு மக்களால் பின்பற்றப்படுவதுதான் காரணம்" என்கிறார்.

திருமணம் என்பது, வயது வந்த பெண் மற்றும் ஆண் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, மகிழ்ச்சியோடு இங்கு நடைபெறுவது இல்லை. மாறாக அது ஒரு நிர்பந்தமாகவும் சடங்காகவுமே நடைபெறுகிறது. இதற்கு நம் ஒவ்வொருவரையும் பிடித்திருக்கும் சாதி என்னும் மனநோயே காரணம் என்கிறார் ஓவியா.

### மாறாத சடங்குகள்

மாறாத சடங்குகளில் ஒன்றாக பெண் பார்க்கும் சடங்கும் சமுதாயத்தில் நடக்கிறது. தற்போது உயர்கல்வி கற்ற பெண்கள் கூட இதனை இழிவாகக் கருதாமல் மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள்.இதனை ஓவியா அவர்களும் "பெண் பார்க்கும் சடங்கு பெண்ணின் அடிப்படை தன்மானத்தைக் கேள்வி கேட்கும்

நிகழ்வு என்கின்ற புரிதல் படித்த பெண்களுக்கு முழுமையாக வந்திருக்கிறதா என்பது பதில் சொல்ல முடியாத கேள்விதான்" என்று குறிப்பிடுகிறார்.

அதேபோல், திருமணங்களில் பெண்ணுக்குத் தாலிகட்டும் நிகழ்வை "ஒரு மருத்துவரான பெண்ணை, உளவியல் நிபுணரை, பொறியியல் வல்லுநரை, காவல்துறை அதிகாரியை, நீதிபதியான பெண்ணை இந்தச் சமுதாயத்தில் இன்றுவரை ஆண்கள் வெட்ட வெளிச்சமாக ஒரு பண்டமாக நடத்தி, உடைமை கொண்டு சாசனம் எழுதிக் கொள்கிறார்கள். இது கட்டுகிறவருக்கும், கட்டிக் கொள்கிறவருக்கும் உறுத்தவில்லை" என்று வருந்துகிறார் ஓவியா.

### குறையாத வேலைச்சுமை

பெண்களின் குறையாத வேலைச் சுமையைக் கருத்தில் கொண்டே தந்தை பெரியார் அவர்கள், "வீட்டுக்கொரு அடுப்படி என்பதை ஒழிக்க வேண்டும்" என்கிற தீர்வை முன்வைத்தார். இதைக் குறிப்பிடும் ஓவியா, "சிந்திக்க சிந்திக்க இதைவிட்டால் வேறு ஒரு தீர்வு இல்லை என்று நம்மை முடிவெடுக்க வைக்கும் வார்த்தைகள்" என்கிறார். அதுமட்டுமல்ல, "ஒரு சமுதாயத்தில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் எத்தனை தேவைப்படுகிறார்களோ அந்த அளவு சமையல்காரர்கள் இருந்தால் போதாதா? எதற்காக ஐம்பது சதவீத மக்கள் (பெண்கள்) சமையல் காரர்களாக இங்கு இருக்க வேண்டும்?என்று கேட்கிறார்.

### பெண்களும் பொது வெளியும்

"கல்வி,வேலைவாய்ப்பு பெண்ணை பொது வெளிக்குக் கொண்டு வந்திருக்கிறதே தவிர, அவர்கள் இன்றும் பொதுவெளியைக் கைப்பற்றவில்லை. பொதுவெளியில் அவர்கள் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறார்கள். இதைப் பெண் விடுதலையின் சோகம் என்பதா? சவால் என்பதா? சோகம் என்று கொள்ளும் பெண்கள் முடங்கிப் போவார்கள். சவால் என்று எடுத்துக் கொள்ளும் பெண்கள் சாதிப்பார்கள்" என்று பொதுவெளியில் பெண்களின் தற்போதைய நிலை பற்றி அருமையாக எடுத்துரைக்கிறார்.

இந்நூலின் அணிந்துரையில், "இந்நூலை முழுமையாகப் படித்து முடித்தபோது, பல செய்திகளைப் புதிதாய் அறிந்து கொண்ட மாணவனைப் போல மகிழ்ச்சியும் ஊக்கமும் பெற்றேன்" என்று பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது மிகச் சரியான கருத்து. இன்றைய இளைய சமுதாயத்தினர் அனைவருக்கும் பாலின சமத்துவத்தைப் போதிக்கும் நூலாக இந்நூல் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

நூல் கிடைக்குமிடம்: நிகர்மொழி பதிப்பகம்,
இணையம் வழியாகப் பெற: www.periyarbooks.in
செல்: 84284 55455

## திராவிடர் பண்பாட்டு விழா
## காதலர் நாள்

காட்டாறு குழு கடந்த 04.02.19 திங்களன்று, பல்லடத்தில் நடத்திய கலந்துரையாடலில் எடுத்த முடிவுகள்:

1. பிப்14 காதலர் நாளை திராவிடர் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடி வருகிறோம். அவை அமைப்புகளின் கலைவிழாக்கள் போல, அமைப்பு களின் செயல்பாடுகள் போலவும் நடைபெற்று வருகின்றன. அவை அவசியமானவைதான்.

அவற்றை அடுத்த கட்டத்திற்கும் நகர்த்தும் விதமாக, காதலர் நாளை தோழர்களின் இல்ல விழாவாக - ஒடுக்கப்பட்ட மக்களின் இல்ல விழாவாகக் கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது.

"வரும் 14.02.2019 அன்று, நமது பணிகளில் இருந்து விடுமுறை எடுப்போம்.
குழந்தைகளுக்கும், நமக்கும் புத்தாடைகளை எடுப்போம்.
வீட்டுக்குத் தேவையான, மிகவும் அவசியமான பொருட்களை மட்டும் அந்த நாளில் வாங்குவோம்.
பக்கத்து வீட்டுக்காரர்கள், நண்பர்களை வீட்டிற்கு அழைத்து விருந்துகளை நடத்துவோம்.
பக்கத்து வீடுகளுக்கு இனிப்புகள் அல்லது பிரியாணியைக் கொடுத்து மகிழ்வோம். அதோடு, இந்த நாளை ஏன் கொண்டாடுகிறோம் என்பதைச் சுருக்கமாக வாழ்த்து அட்டைகளைப் போல அச்சிட்டு வழங்குவோம்.
காதலர் நாளில் மட்டுமல்ல, பெரியார் பிறந்த நாளையும் இதே போல இல்ல விழாவாகவும் கொண்டாடுவோம்". என்றும் முடிவு செய்யப்பட்டது.

தீபாவளி,கிறிஸ்மஸ், ரம்ஜான் போன்ற மத விழாக் களின் காலங்களில் அந்தந்த மதங்களைச் சேர்ந்த குடும்பங்களின் குழந்தைகளுக்கு உற்சாகமும், கொண்டாட்டமும் கிடைக்கிறது. வெறும் விழாவாக மட்டுமல்லாமல், அந்த விழாக்களின் அடிப்படையில், ஜாதி உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வது, அந்தப் பிணைப்புகளை உறுதிப்படுத்திக் கொள்வது, மதக் கடமைகளை நினைவுபடுத்தி, செயல்படுத்திக் கொள்வது என்பவையும் நடக்கின்றன.

இவற்றை ஒழிப்பதற்கு, ஜாதி கடந்த சொந்தங்களை ஒரு இணை நிறுவனமாக உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கு காதலர்நாள், பெரியார், அண்ணா, அம்பேத்கர் பிறந்த நாட்களைப் பயன்படுத்திக் கொள்வோம். அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலாக மட்டும் நின்று விடாமல், இல்ல விழாவாகவும் இவற்றை முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கிறோம்.



# பெரியார் வாழ்க! பெரியாரியல்??? – 2

அதி அசுரன்

சென்ற இதழின் தொடர்ச்சி

## நாம் தமிழர் – மே17 என்ன வேறுபாடு?

நாம் தமிழர் கட்சி, கடந்த 2012 ஆம் ஆண்டில் தனது கொள்கை மற்றும் திட்டங்களை ஒரு ஆவணமாக வெளியிட்டது. அந்த ஆவணம்தான் அந்தக் கட்சியை நாம் சரியாக அடையாளம் கண்டு புறக்கணிக்க உதவியது. அந்த நாம் தமிழர் ஆவணத்தில், அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கான நடத்தை விதி என்று ஒரு பாகம் உள்ளது. அதில் முதல் விதி,

**ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நம்மீது திணிக்கப்பட்டுள்ள சாதி, மத அடையாளங்களையும், அண்மைக்காலமாகத் திணிக்கப்பட்டு வருகிற இந்தியன், திராவிடன் என்ற முத்திரைகளையும் தவிர்த்துவிட்டுத் "தமிழன்" என்ற அடையாளத்தையே முதன்மை அடையாளமாகப் பெருமிதத்தோடு நாம் தமிழர் கட்சியினர் ஏற்க வேண்டும்.** - பக்கம்.105, விதி.1

நாம் தமிழரின் இந்த அடிப்படைவிதியைத் தான் பெரியாரிய உணர்வாளர்கள் மாநாட்டிலும் 4 வது தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அதாவது சென்ஸஸ் பதிவில் "தமிழர்கள்" என்றே பதிவு செய்ய வேண்டும் என்ற தீர்மானமாகும். நாம் தமிழர் கட்சி உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டதை அப்படியே பெரியாரியலாளர்களிடம் ஒரு முடிவாக அறிவிக்கிறார்கள். இவர்களை எப்படி சீமானிடமிருந்து வேறுபட்டவர்களாகப் பார்க்க முடியும்?

அடுத்து 12 வது தீர்மானத்தைப் பார்ப்போம்.

**12. பொதுப்பட ஒத்திசைப் படியலில் (Concurrence List) இருக்கிற கல்வித்துறையை மாநிலங்களின் பட்டியலுக்கு உடனே கொண்டுவர வேண்டும் என்றும், அந்த வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற கல்விக்கூடங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், "இந்திய அரசின், பிற பன்னாட்டு நிறுவனங்களின் கல்விக் கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்க முழுமையாகத் தடைசெய்ய வேண்டும் என்றும் மாநாடு வலியுறுத்துகிறது."**

**சித்த மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவக் கல்வியும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதோடு, கல்விக்கான எந்த வகை இந்தியத் தேர்வுகளையும், 'நீட்' உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளையும் தமிழ்நாட்டிலும், பிற அனைத்து மொழித் தேசங்களிலும் தடைசெய்ய வேண்டும் என்றும்,**

**அவற்றோடு "தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துக் கல்விகளும் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியாகவே இருக்க வேண்டும்" என்றும், ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளை மொழிப் பாடமாக மட்டுமே பயிலலாம் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.**

நாம் தமிழர் ஆவணத்திலும், நாம் தமிழர் வெளியிட்டுள்ள ஆட்சி செயற்பாட்டு வரைவிலும், இதே வரிகள் உள்ளன.

**அனைத்துக் கல்வியையும் தமிழிலேயே கற்போம். கல்வி மொழியாகத் தமிழையே தேர்ந்திட வேண்டும்.**

(பக்கம் 59, 111 நாம் தமிழர் ஆவணம்)

**ஆரம்பப் பள்ளி முதல் உயர்படிப்பான மருத்துவம், சட்டம், பொறியியல் வரையிலுமான அனைத்துப் பாடங்களும் தமிழ்மொழியிலேயே மொழிபெயர்க்கப் பட்டுக் கற்றுத்தரப்படும். தமிழ்வழிக் கல்வியே சட்டமாக்கப்படும்.**

(பக்கம் .87 நாம்தமிழர் ஆட்சியின் செயற்பாட்டுவரைவு)

நாம் தமிழரின் பார்ப்பன ஆதிக்க ஆவணப் பதிவுகள் தான் பெரியாரிய உணர்வாளர்கள் மாநாட்டிலும் தீர்மானமாக வந்துள்ளன.

அனைத்துக் கல்வியும் தாய்மொழி வழிக்கல்வியாக இருக்கவேண்டும் என்பதை தமிழ்த்தேசிய அறிஞர்களும், இந்தியாவில் உள்ள பார்ப்பனர்களும், ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் ஆதரிக்கின்றனர். ஆனால், பெரியாரியலாளர்கள் தொடக்கக்கல்வி அல்லது பத்தாம் வகுப்பு என்ற நிலை வரை மட்டுமே தாய்மொழிவழிக் கல்வியை ஆதரிக்கின்றனர்.

## விடுதலை வேட்கையை விதைத்த ஆங்கிலவழிக் கல்வி!

*காந்தியார் 1937 ஆம் ஆண்டு "வார்தா கல்வித் திட்டம்" என்ற பெயரில் குலக்கல்வித் திட்டத்தை அறிவித்தார். அதன்படி அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த இராஜாஜி நூற்றுக் கணக்கான பள்ளிகளை இழுத்துமுடினார். மீதம் இருந்த பள்ளிகளிலும் மாணவர்கள் தங்கள் குலத்தொழில்களைப் பழகத் தூண்டினார். அதன் தொடர்ச்சியாகவே, 1938 இல் முதல் இந்தி எதிர்ப்புப் போர் தொடங்கப்பட்டது. தனித்தமிழ்நாடு முழக்கமும் எழுந்தது. அந்தப் போராட்டத்தின் அடுத்தகட்டமாகத் தான் 1952 ஆம் ஆண்டு குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. 1937 இல் வார்தா கல்வித் திட்டத்தின் முக்கியக்கூறுகள் மூன்று.*

1. தாய்மொழி வழிக்கல்வி
2. ஏழு முதல் 14 வயது வரை கட்டாயக் கல்வி
3. பகுதி நேரத்தொழிற்கல்வி அதாவது குலத் தொழில் கல்வி.

*இந்த மூன்றையும் பற்றிப் பெரியார் தனது குடி அரசு ஏட்டில் தொடர்ச்சியாக எழுதியும், பேசியும் வந்தார். அவற்றுக்கு எதிரான போர்க்களத்தையும் உருவாக்கினார். அப்போது, தாய்மொழி வழிக் கல்வி பற்றியும், ஆங்கில வழிக்கல்வி பற்றியும் எழுதியுள்ளவைகளில் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.*

> ..தொழில்துறையில் விஞ்ஞான முறையை எடுத்துக் கொண்டால் தமிழில் இதற்கு ஏதாவது பயன்படக்கூடிய சாதனங்கள் இருக்கிறதா? வைத்திய நூல்களை எடுத்துக்கொண்டால், வைத்தியன் பிழைக்கத்தான் வழி இருக்கிறதே தவிர இன்றைய நிலையில் நோயாளி பிழைக்க .......

...இதேபோல், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமைதான். ஏன்? நம் தாய் நம்மைப் பெற்றெடுத்ததும் நம்மைத் தெலுங்கன் வீட்டிலோ, துருக்கியன் வீட்டிலோ விட்டிருந்தால் - நாம் தெலுங்கோ அல்லது உருது மொழியே பேசுவோமா? அல்லது, நம் தாய் தமிழ் பேசியதன் காரணமாக நம்மைப் பீறிட்டுக் கொண்டு நம் நாவிலிருந்து தமிழ் தானாக வெளிவருமா? இன்னும் கவனிப்போம். நம் தாய் குழந்தையாக இருந்தபோது பேசியதென்ன? "பாய்ச்சி குடிக்கி", "சோச்சி தின்னு", "மூத்தா போய்", "ஆய்க்கு போ" என்றுதானே பேசியிருப்பாள்! இப்போது நாம் பாச்சி, சோச்சி, மூத்தா, ஆயி - என்றா பேசுகிறோம்? இந்தக் காலத்தில் நம் தாய்கள் பேசுகிற மொழியே அதிசயமாயிருக்கும். ஆதலால், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமை என்று தோன்றவில்லையா?

ஆங்கில மொழி நூல்களில் முன்னேற்றக் கருத்துகள் மலிந்து கிடக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன. நமது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்கான பல அரிய மார்க்கங்களை ஆங்கில நூல்களிலிருந்தே நாம் பெரும்பாலும் அறிந்து வருகிறோம். சுருங்கக்கூறின், "அடிமை வாழ்வே ஆனந்தம்" என்று நினைத்திருந்த இவ் இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கில மொழி அறிவுதான் என்று கூறினால் மிகையாகாது.

ராஜா வேண்டாம், குடியரசுதான் வேண்டும் என்கின்ற அறிவு; சமதர்மம் வேண்டும், சனாதனம் ஒழியவேண்டும் என்கின்ற அறிவு; ஆணும் பெண்ணும் சமம் என்கின்ற அறிவு ஆகிய சகல அரசியல் - பொருளாதார முன்னேற்ற அறிவுக் கருத்துகளையும் ஆங்கில மொழிதான் நமக்குத் தந்தது.

தந்தியையும், மின்சாரத்தையும், படக் காட்சியையும், ஆகாய விமானத்தையும், ரேடியோவையும், எக்ஸ்ரேயையும் அதுதான் அறிமுகப்படுத்தியதே யொழிய, நமது தமிழ்மொழியோ அல்லது அதை அழிக்க வந்த வடமொழியோ அல்ல.

வடமொழித் தொடர்பு சாத்திர, புராண, இதிகாச மூடநம்பிக்கைகள் நம் பகுத்தறிவை அடிமைப் படுத்தின. ஆங்கில மொழி நம்மை அவ்வடிமைத் தளையிலிருந்து விடுத்து, எதையும் நம் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படிச் செய்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பிரத்யட்ச அனுபவத்திற்கு ஒவ்வாத, சரித்திர காலத்திற்கு உட்படாத எதையும் ஒதுக்கித் தள்ளும்படிச் செய்தது. ஆங்கில மொழிதான் அதைப் பேசிய மக்களைத் தமிழைக் காட்டிலும் வெகு வேகமாக அறிவு உலகத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது.

- தோழர் பெரியார் - 'மொழி எழுத்து' நூல்

...நமது நாட்டில் ஆங்கிலப்படிப்பு பரவ ஆரம்பித்ததன் பலனாகவும், ஏழு ஆண்டுகளாக நமது இயக்கம் யாருக்கும் அஞ்சாமல், எந்த எதிர்ப்புக்கும் பின் வாங்காமல் உண்மைகளை எடுத்துக்கூறிப் பிரசாரம் செய்ததன் பலனாகவும், பார்ப்பனீயத்திற்கும், வருணாச்சிரம தருமங்களுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருந்த மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. இதனால் உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்று சொல்லிக் கொண்டும், பூதேவர்கள் என்று கூறிக்கொண்டும் இருந்த பார்ப்பனர்களுடைய கௌரவமும் குறைய தொடங்கிவிட்டது என்பதும் உண்மையாகும்.

-தோழர் பெரியார்,
குடி அரசு - தலையங்கம் - 29.11.1931

பிள்ளைகள் 7 வயது முதல் 14 வரை கட்டாயமாக படிப்பிக்க வேண்டுமென்றால் 7 வயது வரை பையன்களுக்கு வேலை என்ன? பார்ப்பனப் பிள்ளைகள் நாலரை வயது 5 வயதிலேயே பிரை வேட்டாகப் படிக்க வைத்து 7 - வது வயதில் முதல் அல்லது 2-வது பாரத்தில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். அதனாலேயே அவர்கள் 14 அல்லது 15 - வது வயதில் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது மெட்ரிக்குலேஷன் படிக்கவோ பாஸ் செய்யவோ முடிகின்றது.

நம்முடைய பிள்ளைகளுக்கு 6, 7 - வது வயதில் "எழுத்தாணிப்பால்" கொடுத்து "சரஸ்வதி பூஜை" செய்து "அக்ஷராப்பியாசம்" ஆரம்பித்தால் முதல் பாரத்துக்கு வர 5 வருஷமும் முதல் பாரத்தில் இருந்து மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்குப் போக ஆறு வருஷமும் ஆக 11 வருஷமும் ஆகிறது. பரீட்சைகளில் ஏதாவது ஒன்று இரண்டுவருஷம் தவறிவிட நேர்ந்தால் மெட்றிக்குலேஷனுக்கு போவதற்குள் கையில் ஒன்று இரண்டு குழந்தைகளோ அல்லது உடம்பில் வியாதியோ ஏற்பட்டு மைனர் விளையாட்டில் திரும்பி விடுகிறான்.

ஏற்கனவே நமது பிள்ளைகள் படிப்பு இதனாலேயே கெட்டு மொத்த எண்ணிக்கையில் விகிதாச்சாரம் குறைந்து இருக்கிறது. இந்த நிலைமையில் இனி "7 முதல் 14 - வயது வரை தொழிலின் மூலம் பள்ளிக்கூட நிர்வாகத்துக்கும், வாத்தியார் சம்பளத்துக்கும் போதிய வரும்படி கிடைக்கும் படியான கல்வி தாய்பாஷையில் கற்பது" என்றால் பையனுக்கு உலகஞானமோ வாழ்க்கை அறிவோ அடைய வேண்டியகாலம் எது? அதற்கு ஏற்ற கல்வி எங்கே? என்று கேட்கிறோம்.

- தோழர் பெரியார், குடி அரசு - 21.11.1937

*1937 இல் மூடப்பட்ட பள்ளிக்கூடங்களில் சில, தமிழ்வழிக் கல்வியைப் பின்பற்றிய பள்ளிக் கூடங்களாக இருந்திருக் கலாம். அப்போதைய கல்வி முறை நமக்கு முழுமையாகத் தெரிய வில்லை. பெரியாரைப் பொறுத்த வரை, ஆங்கிலவழிப் பள்ளிகளை மூடும்போதுதான் கடுமையாக எதிர்வினையாற்றி இருக்கிறார் என்பதற்குச்சில சான்றுகள் உள்ளன. அவற்றில் சில வரிகள்,*

இவ்வாரம் சில சர்வகலா சாலைகளை மூடும்படியும் சில மத்தியதரப் பாடசாலைகளை எடுத்துவிடும் படியும் போடப் பட்டிருக்கும் உத்திரவுகளைப் பற்றியும் சில உயர்தரப் பாட சாலைகளை ஒழிக்க செய்யப்பட்டு வரும் சூழ்ச்சிகளைப் பற்றியும் பொது மக்களுக்கு விளக்கிக்காட்ட ஆசைப் படுகிறோம். அதாவது கோயமுத்தூர் பாரெஸ்டு காலேஜ் (வன பரிபாலன கல்வி சர்வகாலசாலையை) மூடிவிடுவது என்று உத்திரவு போட்டாய்விட்டது.

மற்றும் கிராமாந்திரங்களில் இருந்து வரும் மத்தியதர ஆங்கிலப் பாடசாலைகளையும், உயர்தர ஆங்கிலப் பாடசாலைகளையும் அதாவது செகண்டரி ஸ்கூல் என்பவைகளையும் எடுத்துவிடத்தக்க தன்மையில் "60 பிள்ளைகளுக்கு குறைந்த மத்திய தர ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும் - 60 பிள்ளைகளுக்கு குறைந்த உயர்தர ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும் எடுக்கப் பட்டு விடவேண்டும்" என்று உத்திரவுகள் போடப் பட்டாய்விட்டது.

அதோடு கூடவே சர்க்கார் அனுமதி பெற்று பொதுஜனங்கள் நிர்வாகத்தில் நடக்கும் பள்ளிக் கூடங்களையும் ஒழிப்பதற்கும் கால் நட்டாய் விட்டது. அதாவது "சரியானபடி நிர்வாகம் நடைபெறாத ஹைஸ்கூல்கள் எடுக்கப்பட்டு விடும்" என்று உத்திரவு போட்டாய் விட்டது. இனி ஸ்தல ஸ்தாபன பள்ளிக் கூடங்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் கிராண்டுகளை ஒழிப்பதற்கும் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது.

சமீபத்தில் சென்னையில் நடந்த தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டில் இக்கல்வி சூழ்ச்சிகள் சம்மந்தமாய் நடந்த காரியங்கள் பார்ப்பன பத்திரிகைகளிலேயே வெளிவந்திருக்கின்றன. மொத்தத்தில் இன்றைய ஆங்கிலப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் 100க்கு 90 பேர் பார்ப்பனர்கள். அவர்களிலும் தலைமை உபாத்தியாயர்கள் 100க்கு 99 பேர் பார்ப்பனர்கள். அவர்களிலும் 100க்கு 99 தொண்ணூற்று ஒன்பதே முக்காலே மூன்று வீசம் பேர்கள் வைதீகப் பார்ப்பனர்கள். (மனுதர்ம வர்ணாச்சிரமிகள்)

ஆகவே, இப்படிப்பட்ட இவர்கள் இம்மாதிரியான மனுதர்ம கல்வித் திட்டத்துக்கு வரவேற்பளிப்பார் என்பதில் ஆக்ஷேபணை என்ன இருக்க முடியும்? இவர்களது மகாநாட்டில் வரவேற்புத்தலைவரான தோழர் பி.ஏ. சுப்பிரமணியம் அய்யர் என்பவர் காந்தியார் கல்வித்திட்டத்தின் "பெருமை" யைப் பற்றிப் பேசும்போது காந்தியார் திட்டப்படி "ஏழு வருஷ காலம் பிள்ளைகள் பள்ளிக் கூடத்தில் இருந்து விட்டுப் போனால் கிராம வாழ்க்கையில் பிரியமும் எளியவாழ்க்கை ஆவலும் கைகால்களைக் கொண்டு உழைப்பதில் ஆசையும் பாரம்பரிய பெருமைக்கு (பழமைக்கு) வணக்கமும் நமது (சாஸ்திர புராணங்களாகிய) பழைய கலை களை வளர்ப்பதற்கு ஆர்வமும் ஏற்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கியமான கருத்து" என்று நன்றாக பச்சையாக காந்தியார் கல்வித்திட்டம் வருணாச்சிரம புனருத்தாரணம்தான் என்று சொல்லி விட்டார். இதை "மித்திரன்" முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் ஆதரித்தும் தலையங்கங்கள் எழுதி விட்டன.

- தோழர் பெரியார்,
குடி அரசு - தலையங்கம் - 26.12.1937

*ஆக, தமிழ்நாட்டின் முதல் மொழிப் போராட்டமும், தனித்தமிழ்நாடு போராட்டமும் தொடங்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்களில் ஆங்கிலவழிக்கல்வி ஆதரவும் ஒன்றாகும் என்பதைக் குடிஅரசு வழியாக அறியமுடிகிறது.*

*இதுகுறித்து பெரியார் எழுதிய கட்டுரைகளில் பல இடங்களில் ஆங்கிலக் கல்வி, ஆங்கிலக் கல்வி என்று குறிப்பிடுகிறார். அந்தச் சொற்கள் வெறும் ''மொழிக்கல்வி''யைக் குறிப்பவை அல்ல. ஆங்கில ''மொழிவழிக் கல்வி''யைக் குறிக்கின்றன என்பதைக்*

மொழி பக்தர்களுக்கு (வெறியர்களுக்கு) ஒரு விண்ணப்பம். பக்தியின் பெயரால் அறிவு வளர்ச்சியை, நாட்டு வளர்ச்சியை, புதுமை வளர்ச்சியைப் பாழடித்து விடாதீர்கள். உடை விஷயத்தில் நாம் காட்டுமிராண்டிகளானதே போதுமானது.

*குடிஅரசுக் கட்டுரைகளை முழுமையாகப் படித்தால் அறியமுடியும்..*

“சமீபத்தில் 1957 நுங்கம்பாக்கத்தில் இந்திய எதிர்ப்புக்கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டப்பட்ட காலத்தில், எல்லாக்கட்சிக்காரர்களும் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் பேசிய திருவாளர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், தமிழ்நாட்டுக்கு ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்றும் பேசினார்; பிறகு நான் பேசும்போதும் அதுபோலவே பேசிவிட்டு, ஆங்கிலம் பேச்சு மொழியாக இருந்தாலும் மிகவும் பயன்படும் என்றும் சொன்னேன். அதே சமயம் இப்படி நான் சொல்வதால், மொழிவெறியர்கள் சிலர் என்னை “நீயாருக்குப் பிறந்தாய்?” என்று கூடக் கேட்டார்கள். அந்த மொழியைப் பேசவேண்டும் என்று சொல்வதனால், நாம் ஆங்கிலேயனுக்குப் பிறப்பதானால், மற்றபடி, காப்பி குடிப்பது முதற் கொண்டு இரயில், ரேடியோ, ஆகாயவிமானம், டெலிபோன், மருந்து முதலியவை ஆங்கிலேயனுடையவை என்று தெரிந்து அனுபவிக்கிற நாம் எத்தனை தடவை ஆங்கிலேயர்களுக்குப் பிறந்தவர்களாவோம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், மொழி பேசுவதனால், ஆங்கிலேயனுக்குப் பிறந்தவனாக மாட்டோம் என்று சொன்னேன். கடைசியாக, தமிழில் மூலமோ, தமிழ் இலக்கியத்தின் மூலமோ தமிழ்ச்சமயம், தமிழ்ப் பண்பாடு மூலமோ நாம் உலகமக்கள் முன்னிலையில் ஒருநாளும் இருக்க முடியாது”.

– மொழியும், அறிவும் நூல் – 1957,
“ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்”

“தமிழ்மக்கள் என்னும் குழந்தைகளுக்குத் ‘தாய்ப்பால்’ என்னும் தமிழானது முன்னேற்றம் என்னும் உடல்தேர்வதற்கோ, வளர்வதற்கோ பயன்பட்டு இருக்கிறதா? பயன்படுமா? தாய்ப்பால் சிறந்தது என்பதில், தாய்ப்பாலில் சக்தியும், சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே, சத்தற்றவள் என்பதோடு நோயாளியாகவும் இருக்கும்போது, அந்தப் பாலைக்குடிக்கும் பிள்ளை உருப்படியாக முடியுமா? தாய்க்கு நல்ல உணவு இருந்தால் தானே அவளுக்கு பாலும் ஊறும், அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும். தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது?

பார்ப்பனர்களும், அரசாங்கமும் இந்தத் துறையில் செய்கின்ற அக்கிரமங்கள் சொல்லி முடியாது. ஒரு பண்டத்துக்குத் தமிழ்ப்பெயர் உண்டாக்கி தமிழில் சொல்லிவிட்டால் போதுமா? அதன் செயல் முறைக்கும், அதன் பாகங்களுக்கும், அதை ஊடுருவி அறிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படைக்கு சொற்கள் வேண்டாமா? மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளில் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு, நமக்குத் தக்க அறிவும், அனுபவமும், செய்முறையும் வேண்டுமானால் நமது தாய்ப்பாலில் (தமிழ்மொழியில்) என்ன இருக்கிறது?”

– தாய்ப்பால் பைத்தியம்1960,
“ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்” நூல்.

“புதிய உலகில் வாழ்கின்ற, வாழ வேண்டிய மக்களுக்கு மொழிப் பைத்தியம் எதற்கு? அதுவும் ஜாதி போன்ற, மதம் போன்ற மொழிப்பைத்தியம், மொழி வெறி என்பது எதற்காக இருக்க வேண்டும்? போதாக்குறைக்கு, “பெரியார் கல்லூரியில் படித்தவர்கள்” என்றும், நாங்கள் “பகுத்தறிவு வாதிகள்” ....

## பெரியார் பெயரால் தமிழ்வழிக்கல்வி ஆதரவு – பெரியாரின் கண்டனம்

*இப்போது 2018 இல் பெரியார் பெயராலேயே மாநாடு கூட்டி, அதில் பெரியாரியலுக்கு எதிராகவே தமிழ்வழிக் கல்வி என்ற தீர்மானத்தைப் போடுவது போலவே, ஏற்கனவே வரலாற்றில் ஒரு நிகழ்வு நடந்துள்ளது. அப்போது தமிழ்வழிக்கல்விக்கு ஆதரவாக அப்போதைய தி.மு.க அரசின் அமைச்சர்கள் பேசியுள்ளனர்.*

*“உயர்கல்விவரை தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வருவோம். தமிழ் மொழிக்குக் கேடு வந்தால் பதவியையே தூக்கி எறிவோம்” என்றனர். “நாங்கள் பெரியாரிடம் படித்தவர்கள்” என்றும் பேசினர். உடனடியாகப் பெரியார் அந்தத் தமிழ்வழிக் கல்வி ஆதரவுப் பேச்சைக் கண்டித்தார்.*

*“ஒரு அரசாங்கத்தையே நமக்குக் காணிக்கை ஆக்குகிறேன்” என்று அறிவித்தவர்கள் ஆயிற்றே! நாம் சொல்வதைச் செய்பவர்களின் ஆட்சி ஆயிற்றே! நமது நட்பு சக்திகள், நமது இயக்கத்தின் தோழமைச் சக்திகள் ஆயிற்றே! என்பவை போன்ற எவ்விதத் தயக்கமும் இன்றிக் கடுமையாகத் தனது கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.*

“புதிய உலகில் வாழ்கின்ற, வாழ வேண்டிய மக்களுக்கு மொழிப் பைத்தியம் எதற்கு? அதுவும் ஜாதி போன்ற, மதம் போன்ற மொழிப்பைத்தியம், மொழி வெறி என்பது எதற்காக இருக்க வேண்டும்? போதாக்குறைக்கு, “பெரியார் கல்லூரியில் படித்தவர்கள்” என்றும், நாங்கள் “பகுத்தறிவு வாதிகள்” என்றும் சொல்லிக் கொள்ளும் இன்றைய மந்திரிகள், “தமிழுக்கு – தமிழ்மொழிக்குக் கேடு வந்தால் நாங்கள் பதவியை விட்டு வெளியேறி விடுவோம்” என்று சொல்லுகிறார்கள் என்றால், இதில் என்ன பகுத்தறிவு இருக்கிறது? என்ன “பெரியார் வாசனை” இருக்கிறது?

உயர்தரப் படிப்புகளை எல்லாம், கல்லூரியிலும் கூடத் தமிழிலேயே ஆக்குகிறோம் என்றால், மக்களை முட்டாள்களாக்குகிறோம் என்றுதானே பொருள்? இப்படியான நிலை ஏற்பட்டால் இது முக்கொலை என்றுதானே ஆகும். தமிழ்மொழியும் கெட்டு, பாட விஷயமும் பொருளும் கெட்டு, ஆங்கிலமும் கெடும்படி ஆவதால், மூன்று கொலை செய்வதாகத்தானே முடியும்? இதுதானா சிப்பாய்கள் வேலை?”

– தோழர் பெரியார், விடுதலை, 05.04.1967

"தி.மு.க. கட்சி, "இந்தி கூடாது, அரசியல் தமிழில் நடத்தப்பட வேண்டும்" என்று கிளர்ச்சி செய்கிறது.
ம.பொ.சியின் தமிழரசுக்கட்சி, "அரசியலில் இங்கிலீஷ் கூடாது; இங்கிலீஷ் மூலம் பாடங்கள் கூடாது; பள்ளிகளில் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் பயிற்சி கூடாது; காலேஜ்களில் இங்கிலீஷில் பாட போதனை நடத்தப்படுவதும் கூடாது; தமிழிலேயே தான் நடத்தப்பட வேண்டும்" என்றும், அதற்காகவே தாம் சிறை செல்லப் போவதாகவும், மற்றும் மந்திரிக்குக் கருப்புக் கொடி பிடிக்கப் போவதாகவும் சொல்லுகிறது. இவைகளைப் பார்த்தபின், சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இன்றைய அரசியல் கட்சிக்காரர்கள் பெரிதும் தங்கள் கிளர்ச்சிக்கும், தாங்கள் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்கும் இந்த மொழிப் பிரச்சனையையே கருவியாக வைத்துக் கொள்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.
..தொழில்துறையில் விஞ்ஞான முறையை எடுத்துக்கொண்டால் தமிழில் இதற்கு ஏதாவது பயன்படக்கூடிய சாதனங்கள் இருக்கிறதா? வைத்திய நூல்களை எடுத்துக்கொண்டால், வைத்தியன் பிழைக்கத்தான் வழி இருக்கிறதே தவிர இன்றைய நிலையில் நோயாளி பிழைக்க நோயைக் கண்டுபிடிக்க அதில் என்ன அதிசியமிருக்கிறது
...ஜாதி, மதம், மொழி ஆகியவைகள் ஒரு மனிதனுக்கு இயற்கை யானவை அல்ல; இவை செயற்கை யானவை. காலதேச வர்த்தமானத் தினால் ஒரு மனிதனை வந்து அடைபவை அல்லது மனிதன் வசதிக்குத் தக்கபடி ஏற்படத் தக்கவை.
உணவுப்பழக்கம் போலும், கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் ஏன்? காதலிக்குக் காதலனும், காதலனுக்குக் காதலியும் அமைவது நற்சம்பவமாய் அமைபவை. மற்றும் எஜமானனுக்கு அடிமையும், அடிமைக்கு எஜமானனும் அமைவது போல் அமைபவையே அல்லாமல் எது நிரந்தரம்? எது மாற்றக் கூடாதது? எது மாற்ற முடியாதது?
மொழி பக்தர்களுக்கு (வெறியர் களுக்கு) ஒரு விண்ணப்பம். பக்தியின் பெயரால் அறிவு வளர்ச்சியை, நாட்டு வளர்ச்சியை, புதுமை வளர்ச்சியைப் பாழடித்து விடாதீர்கள். உடை விஷயத்தில் நாம் காட்டுமிராண்டிகளானதே போது மானது.

– தோழர் பெரியார், 1967,
"ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்" நூல்.

*தற்போது அண்ணா பல்கலைக்கழகமாக இருக்கும் பொறியியல் கல்வி நிறுவனம், 1970 இல் கிண்டி தொழில்நுட்பக்கல்லூரியாக இருந்தது. அங்கு 16.07.1970 அன்று கல்லூரியின் தமிழ்மன்றத்தைத் தொடங்கி வைக்கப் பெரியாரை அழைக்கிறார்கள். அன்று தான் பெரியாருக்கு "கம்ப்யூட்டரை" முதன்முதலில் அறிமுகப்படுத்தி வைக்கிறார்கள். அந்த விழாவில் பேசும்போது,*

"எஞ்சினீயரிங் கல்லூரி என்கின்ற பொறியியல் கல்லூரியில் தமிழ் மன்றம் ஏன் துவக்குகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. பொறியியற் கல்லூரியில் உள்ளவர்களுக்கு எதற்காகத் தமிழ்மன்றம் என்று தெரியவில்லை. அடுத்த படியாக, தமிழைக் கொண்டு என்ன செய்யப் போகிறார்கள் என்றும் தெரியவில்லை.
இப்போது நாம் பெரிய வளர்ச்சிநிலையில் இருக்கிறோம். பெரிய வளர்ச்சிகள் ஏற்பட்டு வருகிற 70 ஆம் ஆண்டில் இருக்கிறோம். கல்லூரி முதல்வர் அவர்கள், "கம்ப்யூட்டர்" என்கின்ற ஒரு இயந்திரத்தைக் காட்டினார்கள். அது எப்படி வேலை செய்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை என்பதோடு, புரியும்படி தமிழில் அவர்களால் எனக்குச் சொல்லவும் முடியவில்லை. காரணம், தமிழில் அதை விளங்கும்படிச் சொல்வதற்கான சொற்கள் இல்லை என்பதே".
...தமிழுக்காக வேண்டுமானால் தமிழ் படிக்கலாம். இலக்கியநயம், கவிநயம் என்பவற்றிற்காக வேண்டு மானால் தமிழ் கற்கலாம். மற்றபடி புதுமையான கருத்துக்களை அறிந்து கொள்வதற்குத் தமிழில் எதுவுமே கிடையாது. இப்போது தோன்றியுள்ள பல விஞ்ஞான அதிசய, அற்புத இயந்திரங்களுக்குச் சரியான தமிழ்ச்சொற்கள் கிடையாது. ஏதாவது ஒரு சொல்லைச் சொல்லி, அதற்கு இதுதான் பொருள் என்று கொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய நேரிடையாகச் சொல்லக்கூடிய சொற்கள் தமிழில் இல்லை.
நாம் தமிழர், நம்நாடு, தமிழ்நாடு என்பதற்காகத் தமிழைப் போற்றலாமே ஒழிய, தமிழில் பொது அறிவிற்கான எதுவும் கிடையாது. ஆனதால் தமிழில் பெரும் விற்பனர்களாக இருப்பவர்களுக்குக்கூட பொது அறிவு சற்றுக் குறைவாகத்தான் இருக்கும்.
...இந்தக் கம்ப்யூட்டருக்குத் தமிழில் "கணிப்பான்" என்கின்றனர். ஆங்கிலத்தைவிட அதைப்புரிந்து கொள்வது மிகக்கஷ்டமாக இருக்கிறது. காரணம் இப்போதுதானே நாம் கொஞ்சம் நாகரீகம் பெறுகின்றோம்".

– தோழர் பெரியார், 16.07.1970,
"ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்" நூல்.

*பெரியார் 1970 ஜூலையில் கூறியவை இன்றும் மாறாமலேயே இருக்கின்றன. கலைச் சொல்லாக்கம் என்பதில் உள்ள சிக்கலையும் இந்த விழாவில் பேசியுள்ளார். இவை மட்டு மல்ல; தமிழ்வழிக்கல்வி பற்றிய பெரியாரின் கருத்துக்கள் இன்னும் ஏராளமாக, விரிவாக உள்ளன. குடி அரசு, விடுதலை, பகுத்தறிவு, புரட்சி ஆகிய ஏடுகளைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தாலே போதும். அவை நம் கண்ணில்படும்.*

தாய்ப்பால் சிறந்தது என்பதில், தாய்ப்பாலில் சக்தியும், சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே, சத்தற்றவள் என்பதோடு நோயாளியாகவும் இருக்கும்போது, அந்தப் பாலைக்குடிக்கும் பிள்ளை உருப்படியாக முடியுமா?

## தி.மு.க. ஆட்சியைக் காக்கவே தமிழ்வழிக்கல்வி ஆதரவு

*1970 நவம்பரில் கலைஞரின் தி.மு.க. ஆட்சி, கல்லூரிகளில் தமிழையும் ஒரு பயிற்று மொழியாக அறிவித்தது. அதை வைத்து தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்ற திட்டத்தில், இராசாசி, காமராஜர் ஆகியோர் மாணவர் போராட்டங்களைத் தூண்டி விட்டனர். அப்போது தி.மு.க ஆட்சிக்குச் சிக்கல் வரக்கூடாது என்பதற்காகப் பெரியார், தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக இருப்பதுபோலச் சில வரிகளை எழுதியுள்ளார்.*

*"நமது கடமை" என்ற பெயரில் எழுதப்பட்ட அந்தத் தலையங்கத்தின் சில பகுதிகளை மட்டும் தோழர் சுபவீ அவர்கள் தமது, "பெரியாரின் இடதுசாரித் தமிழ்த்தேசியம்' நூலில் பதிவு செய்துள்ளார். அந்தத் தலையங்கம் தோழர் பசு.கவுதமன் அவர்களின், "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?" என்ற தொகுப்பின் முதல் தொகுதியில் முழுமையாக உள்ளது.*

*அந்த முழுமையான தலையங்கத்தில், பெரியார் தனது வழக்கமான பாணியில், அதாவது வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டு என்ற விதத்தில் தமிழ் வழிக்கல்வியை ஆதரித்து எழுதவில்லை. தி.மு.க. ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் தீவிரமாகிவிடக் கூடாது என்ற அக்கறைதான் அந்த அறிக்கையில் மேலோங்கியுள்ளது. அதிலும்கூடத் தமிழை, வளர்ச்சி அடையாத பழங்கால மொழி என்றும், ஆங்கிலம்தான் அறிவியல் மொழி என்றும் ஆணித்தரமாகக் கூறுகிறார்.*

> "பாடமொழிப் பயிற்சியைத் தங்களது யுத்ததளவாடமாக எடுத்துக்கொண்டு ஆச்சாரியாருடைய சுதந்திராக் கட்சியும், ஆரிய ஏடுகளும் இந்த ஆட்சியைக் கவிழ்க்கக் காரணம் காட்டி மாணவர்களைத் தூண்டி விடுகின்றன. இதற்குப் பார்ப்பனரல்லாத இனத்து விபீஷணர்களும் ஆளாகி விட்டிருக்கிறார்கள்.
>
> தமிழ்மொழி, ஆங்கிலமொழி இரண்டைப் பற்றிய என்னுடைய கருத்தைப் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆங்கிலம், வளர்ந்த மொழி - விஞ்ஞான மொழி என்பதும், தமிழ் - வளர்ச்சி அடையாத பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடாகும். இதை நான் சொன்னதற்கான முக்கிய நோக்கம், தமிழ்மொழி - ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பது தானே தவிர, தமிழ் மீது எனக்குத் தனிப்பட்ட வெறுப்பில்லை."
>
> - தோழர் பெரியார், விடுதலை, 01.12.1970

**ராஜா வேண்டாம், குடியரசுதான் வேண்டும் என்கின்ற அறிவு; சமதர்மம் வேண்டும், சனாதனம் ஒழியவேண்டும் என்கின்ற அறிவு; ஆணும் பெண்ணும் சமம் என்கின்ற அறிவு ஆகிய சகல அரசியல் - பொருளாதார முன்னேற்ற அறிவுக் கருத்துகளையும் ஆங்கில மொழிதான் நமக்குத் தந்தது.**

## "தமிழ்வழிக்கல்வி நீக்கப்படும்" என பெரியார் உறுதி அளித்தார்

*இறுதிக்காலத்தில் பெரியார் தமிழ்வழிக் கல்வியை ஆதரித்தார் என்பதற்காகக் கொடுப்படும் ஒரே ஒரு சான்றிலும், ஆங்கிலமே சிறந்தமொழி, ஆங்கிலேமே அறிவியல்மொழி என்பதைத்தான் பதிவுசெய்துள்ளார். அந்த அறிக்கையின் இறுதிப் பகுதி இரண்டு தலைப்புகளாக உள்ளது. இரண்டு தலைப்புகளிலும் 'பயிற்றுமொழி' என்பது தலைப்பாக வரவில்லை. ஆட்சியைக் காப்பாற்றுவது பற்றியே தலைப்புகள் உள்ளன.*

### 8500 பள்ளிகளை மூடியது யார் ஆட்சி?

> எந்தக் காரணத்தாலோ இன்றைய ஆட்சிக்கு மாற்றம் ஏற்பட்டால் நாடு வருணாசிரம ஆட்சிக்குத்தான் ஆளாகிவிடும். உதாரணமாகச் சொல்லுகிறேன். என்னவென்றால், இதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர்ந்து பொறுத்துக்கொண்டால் அடுத்த ஆட்சிக் காலத்தில் சரிபடுத்திக் கொள்ள முடியும் என்பது எனது உறுதியான கருத்தாகும்.
>
> ஜஸ்டிஸ்கட்சி ஆட்சிக்குப் பிறகு 1938 இல் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட உடன் என்னநிலை ஏற்பட்டது என்று பார்த்தால் காங்கிரஸ் ஆட்சி, உத்தியோகத்தையே மனதில் வைத்து 2500 பள்ளிகளை மூடியதோடு மீதியுள்ள பள்ளி மாணவர்களைக் கட்டாயமாக இந்தி படிக்கவேண்டுமென்று உத்திரவு போடவில்லையா? 1952 இல் காங்கிரஸ் ஆட்சிபீடமேறிவுடன் 6000 பள்ளிகளை மூடிவிட்டு பிள்ளைகள் அவரவர் ஜாதித்தொழில் படிக்க வேண்டும் என்று உத்திரவு போடவில்லையா?...

### காங்கிரஸ் ஆட்சி வந்தால் தமிழர் கதி என்ன?

> ...தமிழர்களே! ஒன்று மனதில் வையுங்கள். இந்த ஆட்சி கடுகளவு பார்ப்பன ஆதிக்கமுள்ள எந்தக் கட்சிக்குப் போனாலும் நமது கதி பழைய கதிதான். போராட ஆள் இல்லை. சுத்தமாக ஆளே இல்லை. எனக்கும் எழுந்து நிற்க முடியாத வயதாகி விட்டது. முன்னெச்சரிக்கையோடு நம்மவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.
>
> - தோழர் பெரியார், விடுதலை, 01.12.1970

"நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?"

*இப்படித்தான் அந்தத் தலையங்கம் முடிகிறது. தமிழ்வழிக்கல்விக்கு ஆதரவான அறிக்கை என்றால், அந்த அறிக்கையின் முடிவுப் பகுதியில் கட்டாயம் தமிழ்வழிக்கல்வி பற்றித்தான் இருந்திருக்கும். இந்த அறிக்கை மட்டுமல்ல, பொதுவாழ்வில் "அறிக்கை" என்ற பண்பு தொடங்கிய காலம் முதல் இன்றுவரை, எந்த நோக்கத்திற்காக அறிக்கை வெளிடப் படுகிறதோ, அந்த நோக்கம் தான் இறுதிப் பகுதியில் உறுதியான கருத்தாக முன்வைக்கப்படும்.*

*பெரியாரின் "நமது கடமை" என்ற அறிக்கை தொடக்கம் முதல் முடிவு வரை, முற்று முழுதாக தி.மு.க.ஆட்சியைக் காப்பாற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இடையில் சில பத்திகள் பயிற்றுமொழி பற்றி வருகிறது.*

*அதேசமயம் அதன் இறுதிப் பகுதியில், "அடுத்த ஆட்சிக் காலத்தில் இதைச் சரிபடுத்திக் கொள்ள முடியும் என்பது எனது உறுதியான கருத்தாகும்" என்று உறுதி கொடுக்கிறார். அதன்பிறகு நடந்த 1971 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. 184 தொகுதிகளைக் கைப்பற்றி மிகப்பெரும் பான்மை பலத்துடன் ஆட்சியைப் பிடித்தது. கலைஞர் மீண்டும் முதல்வரானார். "நமது கடமை" அறிக்கையில் பெரியார் உறுதிகொடுத்தபடி, தமிழ்வழிக்கல்வி அடுத்தகட்டத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை.*

*இந்த வரலாற்றில் நாம் வெளிப்படுத்த வேண்டிய மற்றொரு தகவல் என்னவென்றால், தமிழ்வழிக் கல்வியை தி.மு.க. அறிவித்தபோது, தமிழ்த்தேசிய இயக்கங்களின் தலைவர்களில் மூத்தவர், தோழர் பழ.நெடுமாறன் அவர்கள் தமிழ்வழிக் கல்வியை எதிர்த்து மாணவர் போராட்டங்களைத் தூண்டிவிட்டார். இதை நாம் பரப்ப வேண்டும். தோழர் சுபவீ அவர்கள் தமது வலைப்பூவில் இந்தத் தகவலைப் பதிவுசெய்துள்ளார்.*

**உயர்தரப் படிப்புகளை எல்லாம், கல்லூரியிலும் கூடத் தமிழிலேயே ஆக்குகிறோம் என்றால், மக்களை முட்டாள்களாக்குகிறோம் என்றுதானே பொருள்? இப்படியான நிலை ஏற்பட்டால் இது முக்கொலை என்றுதானே ஆகும்.**

*1967 இல் ஒரே நேரத்தில் தி.மு.க வும், ம.பொ.சியின் தமிழரசுக் கட்சியும் தமிழ்வழிக் கல்வி, தமிழ் வழி அரசியல், தமிழ்வழிஆட்சி என்றெல்லாம் கிளர்ச்சிகளை நடத்தியபோது, தி.மு.க வையும், தமிழரசுக் கட்சியையும் பெரியார் கடுமையாகக் கண்டித்தார். "தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப் படுத்துவோம்" என்று அறிவித்த தி.மு.க. அமைச்சர்களை, அறிவித்த உடனேயே கடுமையாகக் கண்டித்தார். அந்த அறிக்கை 05.04.1967 விடுதலையில் வந்துள்ளது. சில பத்திகளுக்கு மேலே அதைப்பதிவு செய்துள்ளேன். மீண்டும் படித்துக்கொள்ளுங்கள்.*

*1970 க்குப் பிறகு, 1972 ஆம் ஆண்டில் பெரியார், மொழி உணர்ச்சிக்கு ஆதரவாகவும் பேசியுள்ளார்.*

**"மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ, நாட்டுநினைவோ எப்படி வரும்? நம் பிற்காலச் சந்ததிக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படிச் செய்ய வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி சிறிதளவாவது இருந்தால்தான் முடியும். அன்றியும் சமுதாய உணர்ச்சி சிறிதளவாவது இருக்க வேண்டுமானாலும் மொழி உணர்ச்சிஇருந்தால்தான் முடியும்".**

- தோழர் பெரியார், விடுதலை, 25.07.1972

*பெரியார் தமிழ் வளர வேண்டும். தமிழ்மொழி தமிழர்களின் வாழ்வுக்குப் பயன்பட வேண்டும் என எண்ணியவர் என்பது மறுக்க முடியாத உண்மை. அவரது எதிர்ப்பு என்பது ஒரு அக்கறையுள்ள விமர்சனம் தான். அந்த விமர்சனத்தில் இருந்த கசப்பான உண்மை அவரது இறுதிக்காலத்திற்குப் பிறகு இன்றுவரையும் மாறவில்லை.*

## பயிற்றுமொழி பற்றிய பெரியாரின் இறுதிக்கருத்து: ஆங்கிலவழிக் கல்வியே!

*1970 ,1972 க்குப் பிறகு 1973 இல் மீண்டும் "தமிழ் காட்டுமிராண்டி பாஷை" என்கிறார். "குழந்தைகள் அனைவரும் வீட்டில் உரையாடும்போதுகூட ஆங்கிலத்தில் பேசவேண்டும்" என்றும், ஆங்கிலத்தால்தான் நாகரீகம் வளரும் என்றும் பேசியுள்ளார்.*

கேள்வி: **தமிழ்மொழியைக் "காட்டுமிராண்டி பாஷை" என்று நீங்கள் குறிப்பீட்டீர்களே?**

பெரியார்: **ஆமாம். சொன்னேன். என்ன தப்பு?...இந்தி மேலே இருந்த துவேஷம் தமிழ் மேலே அன்பா மாறியது. அதுதான் உண்மை. குழந்தைகளெல்லாம் வீட்டிலேயே இங்கிலீஷில் பேச வேண்டும். அது நல்ல நாகரீகத்தையும் கொண்டு வருகிறது.**

- கலைமகள் ஏடு, பிப்ரவரி 1973,
"ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்" நூல்.

கேள்வி: **முன்பு ஒருமுறை திருச்சியில் நடந்த சிலை திறப்புவிழாவில், தமிழ் காட்டு மிராண்டி மொழி என்று சொன்னீர்களே அப்படியானால், தமிழர்கள் காட்டுமிராண்டிகளா?**

பெரியார்: **தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொல்லக்காரணம், இன்றைக்கும் 2000 ஆண்டு களுக்கு முன்பு எந்த மூடப்பழக்க வழக்கங்களில் இருந்து வந்தோமோ, அதில் தானே இன்னும் இருந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பழக்க வழக்கங்களில் இருந்து நம்மை இன்னம் நாம் மாற்றிக்கொள்ளாமல், 2000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவற்றையே உதாரணங்கள் காட்டிக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வந்தால், அதற்கு என்ன பொருள்?**

கேள்வி: **தமிழ் இலக்கியங்களை நீங்கள் குறை கூறுவது ஏன்?**

பெரியார்: **தமிழ் இலக்கியங்களை எழுதிய புலவர்கள் அவற்றைக் கடவுளோடும், மதத்தோடும், இனத் தோடும் இணைத்து எழுதி வைத்திருக் கிறார்களே தவிர, தமிழ் வளரவேண்டும் என்பதற்காக என்ன செய்து வைத்திருக்கிறார்கள்? தமிழ் என்றாலே, சைவம், மதம், கடவுள் என்று நினைக்கிறானே தவிர, மக்கள் வாழ்க்கைக்கு, வளருவ தற்கு எவனும், எதுவுமே சொல்ல வில்லை. அதை எப்படி நம்முடைய வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும்? ஏற்றுக் கொள்ள முடியும்?**

- மாலைமுரசு பேட்டி, 16.09.1973,
"ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்"

ஆங்கிலத்தால்தான் நாகரீகம் வளரும் என்றும், தமிழை நம் இனத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது என்றும் தனது இறுதிக் கருத்தாகப் பதிவுசெய்துவிட்டார் பெரியார்.

தமிழ்த்தேசியக் குழுமங்கள் வழக்கம் போல, "இந்தநிலை 1930 - 40 களில் இருந்தது உண்மைதான். பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக, அன்றைய சூழ்நிலையில் பெரியார் எடுத்த அந்த முடிவுகளை ஆதரிக்கிறோம். ஆனால், இந்த 2019 ஆம் ஆண்டிலும் அதை அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை. பெரியாரைக் காலத்திற்கு ஏற்றபடி புதுப்பிக்க வேண்டும், சூழ்நிலைக்கு ஏற்றபடி தகவமைக்க வேண்டும்" என்று திரிபுவாதத்தைத் தொடங்கலாம். அவர்களுக்கு மட்டும் சில வரிகள்.

பார்ப்பனர்கள் இன்றைய சூழலிலும், ஆங்கிலவழிக் கல்வியைப் பயன்படுத்தி, அதன் மூலம் அகில இந்திய நுழைவுத் தேர்வுகளைத் தம்வசப்படுத்தி, அரசு, நீதி, நிதி, சட்டம், மருத்துவம், வணிகம், ஊடகம் என அனைத்துத் தளங்களிலும் ஆதிக்கத்தைத் தொடர்ந்து கொண்டுதான் வருகிறார்கள். இந்தியாவில் இயங்கும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை இயக்குநர்களில்கூட 90 விழுக் காட்டினர் பார்ப்பனர்களாகவே ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

இந்த ஆதிக்கத்திற்கு அவர்களது பிறப்பும், சமுதாய அந்தஸ்தும் முக்கியக் காரணம். அதை அடுத்து அவர்கள் ஆயுதமாகக் கொண்டுள்ள ஆங்கிலவழிக் கல்வியும் மறுக்க இயலாத காரணமாகும். அந்த ஆங்கிலவழிக் கல்வியின் மூலம் கிடைத்த அதிகாரங்களைக் கொண்டு சமஸ்கிருதப் பண்பாட்டைப் பரப்புகிறார்கள். தீபாவளியையும், யோகாவை உலகமயமாக்குகிறார்கள். அந்த அணுகுமுறைதான் தமிழ்நாட்டுக்கும் வேண்டியுள்ளது. "தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வான்" என்பது தமிழ்த் தேசியம். "தமிழன் வாழ்ந்தால் தான் தமிழ் வாழும்" என்பது திராவிடம்.

> 1970, 1972 க்குப் பிறகு 1973 இல் மீண்டும் "தமிழ் காட்டுமிராண்டி பாஷை" என்கிறார். "குழந்தைகள் அனைவரும் வீட்டில் உரையாடும்போதுகூட ஆங்கிலத்தில் பேசவேண்டும்" என்றும், ஆங்கிலத்தால் தான் நாகரீகம் வளரும் என்றும் பேசியுள்ளார்.

தோழர் பொழிலன் சிறையிலிருந்து விடுதலைஆன பிறகு, "தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்" என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, அதில் இதே "தமிழ்நாட்டில் தமிழே கல்விமொழி" என்ற பரப்புரையை நடத்தி வந்தார். அவர் தனிப்பட்ட முறையில் அவரது கொள்கையாகவும், நாம் தமிழர், மணியரசன் அமைப்புகளின் கொள்கையாகவும் இருக்கும் கருத்துக்களை அவரது "தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்" என்ற பெயரில் பரப்புரை செய்வதில் நமக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

ஆனால், "பெரியாரிய உணர்வாளர்கள்" என்ற பெயரில் பெரியாருக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பினால், அது பெரியாரியலுக்குத் திட்டமிட்டுச் செய்யும் துரோகம் ஆகும். தோழர் சீமானும், தோழர் மணியரசனும்கூடச் செய்யத் துணியாத தவறாகும்.

## மத்தியக் கல்விநிறுவனங்களும் தமிழ்நாட்டின் உரிமைகளே

"கல்வித்துறையை மாநிலப் பட்டியலுக்குள் கொண்டு வரவேண்டும். அனைத்துக் கல்வி நிறுவனங்களும் தமிழ்நாடு அரசின் கட்டுப் பாட்டுக்குள் வர வேண்டும்" என்ற இலக்குகளை அனைத்துப் பெரியாரியலாளர்களும் ஏற்பார்கள். அதற்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதோடு கூட கொஞ்சம் விஷத்தையும் சேர்த்துக் கொடுத்துள்ளார்கள். அதாவது, "இந்திய அரசின், பிற பன்னாட்டு நிறுவனங்களின் கல்விக் கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்க முழுமையாகத் தடைசெய்ய வேண்டும்" என்று கூறியுள்ளனர்.

கல்வித்துறை, மத்திய (Concurrence List) பட்டியலில் இருந்து தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டால், அதன்பிறகு அகில இந்திய அளவிலான மத்தியப் பல்கலைக் கழகங்களும், ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம்.களும் தமிழ்நாட்டில் இயங்குவதில் என்ன சிக்கல்?

ஒருவேளை, மத்தியப் பட்டியலிலேயே கல்வி சிறைப் பட்டிருந்தாலும், தமிழ்நாட்டில் தொடங்கப் படும் மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் "தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 80 விழுக்காடு இடஒதுக்கீடு" என்பதைக் கட்டாயமாக்கவேண்டும் என்று போராட வேண்டுமே ஒழிய, அத்தகைய நிறுவனங்களே வேண்டாம் என்பது பெரியாரியலுக்கு எதிரானது.

தமிழ்நாட்டின் மருத்துவக் கல்வி, சென்ற ஆண்டிலிருந்து அகில இந்தியக் கல்வி நிறுவனங்களின் உரிமையாகிவிட்டது. சட்டம், பொறியியல், பட்டயக் கணக்காளர் (Chartered accountant), கட்டிட வடிவமைப்பாளர் (Architect), இந்தியக் குடியுரிமைப் பணிகள் போன்ற அனைத்து முக்கியப் படிப்புகளும் மத்திய அரசின் உரிமையாகிவிட்டன. கலை, அறிவியல், வணிகவியல் படிப்புகளிலும் நல்ல வேலை வாய்ப்புகளுக்கு வாய்ப்பான பிரிவுகள் இந்திய மயமாகிவிட்டன.

நம்மைப் போன்ற அமைப்புகளால், NEET, GATE, NATA போன்ற நுழைவுத்தேர்வுகளை ஒழிக்கமுடியவில்லை. அவை ஒழியும் வரை - அவற்றைவிட்டால் நமக்கு வேறு வழியில்லை என்ற நிலை நீடிக்கும் வரை அப்படிப்பட்ட தேர்வுகளை எழுதி உயர்கல்விக்குச் செல்பவர்கள் வட மாநிலங்களுக்கு மட்டுமே தான் செல்ல வேண்டுமா? தமிழ்நாட்டிலேயே உயர்கல்வி படிக்கும் வாய்ப்பை வழங்கும் மத்தியப் பல்கலைக்கழகங்களை ஏன் மறுக்க வேண்டும்?

## தமிழ்நாட்டுப் பார்ப்பன மாணவர்கள் கொல்லப்பட்டார்களா?

வடமாநிலங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பயிலச்செல்லும் தமிழ்நாட்டு மாணவர்கள் கொலை செய்யப்படுவதும், தற்கொலை செய்து கொள்வதும் தொடர்ந்து நடக்கின்றன. அந்த மரணங்களைக் கண்டித்து தோழர் பொழிலனின் இயக்கம் கடந்த 2017 இல் (28.03.2017) ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. அதன்பிறகு, 2018 பிப்ரவரி 21 தாய்மொழி நாளில் ஒரு நிகழ்வை நடத்தினார். அவற்றில் அவர் வைக்கும் முழக்கங்கள்,

**“இந்தியக் கல்வி நிறுவனங்களையும், இந்தியக் கல்வி முறைகளையும் மறுப்போம்! பிறநாட்டுக் கல்விநிலையங்களைத் தமிழ்நாட்டில் ஏற்காதே!**

இந்த இரண்டு முழக்கங்களை முதன்மையாக வைத்துள்ளார். அனைவரும் அரசுப் பள்ளிகளில் தான் படிக்க வேண்டும் என்றும் கோருகிறார்.

வடமாநிலங்களுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்றால், அதற்கு தீர்வாக, அங்கு அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதிசெய்யப் போராட வேண்டும். அல்லது அதே தரமுள்ள மத்தியஅரசுக் கல்வி நிறுவனங்களைத் தமிழ்நாட்டிலேயே தொடங்கப் போராட வேண்டும். இந்த இரண்டையும் விட்டு விட்டு, “இந்தியக் கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்குள் இயங்கக் கூடாது” என்பது எந்த வகையில் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படும்?

இந்திய அரசுக்குத் தமிழ்நாட்டு மக்கள் வரிப்பணமாகக் கொடுக்கும் தொகை, வட மாநிலங்கள் கொடுக்கும் தொகையைவிட மிக அதிகமானது. மத்திய அரசு எவ்வளவு வேண்டுமானாலும் நம்மிடம் சுரண்டிச் செல்லலாம், நமக்குத் திருப்பித்தர வேண்டியதில்லை என்பதைத் தான் இந்தத் தீர்மானம் கூறுகிறது.

வடமாநிலங்களுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள், அவர்கள் “தமிழர்கள்” என்பதால் கொல்லப்படவில்லை. “தலித்” மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள், “பிற்படுத்தப்பட்ட” மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து மத்தியக் கல்வி நிறுவனங்களுக்குச் கல்வி கற்கச் செல்லும் எந்தப் “பார்ப்பானும்” இன்றுவரை கொல்லப்பட்டதில்லை.

> **“தலித்” மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள், “பிற்படுத்தப்பட்ட” மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து மத்தியக் கல்வி நிறுவனங்களுக்குச் கல்வி கற்கச் செல்லும் எந்தப் “பார்ப்பானும்” இன்றுவரை கொல்லப்பட்டதில்லை.**

இந்தப் பிரச்சனையில் தமிழர்களின் கோபத்தை முதன்மை எதிரியான பார்ப்பனர்களை நோக்கித் திருப்புபவர்கள்தான் பெரியாரியலாளர்கள். அதைவிட்டுவிட்டு, “இந்தியக் கல்வி நிறுவனப் புறக்கணிப்பு” என்பது பார்ப்பன ஆதிக்கத்தைக் காக்கவே பயன்படும். இந்தப் பார்ப்பனப் பாதுகாப்புப் பணியை ஒரு தமிழ்த் தேசிய அமைப்பு வெளிப்படையாகச் செய்வதில் நமக்கு எந்தச் சிக்கலும் இல்லை. “பெரியாரிய உணர்வாளர்” என்ற பெயரில் அதைத் தொடங்க வேண்டாம் என்றே கூறுகிறோம்.

## தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு

பிற பன்னாட்டுக் கல்விநிறுவனங்களும் தமிழ்நாட்டில் இயங்கக் கூடாதாம். தமிழ்நாட்டு நிறுவனமோ, இந்திய நிறுவனமோ, பன்னாட்டு நிறுவனமோ எதுவாக இருந்தாலும் கல்வியை வணிகமாக்கும் நிறுவனங்கள் வேண்டாம் என்று கூறுவது தான் சரியானது. எந்த நிறுவனங்களும் வேண்டாம் என்பது தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு எதிரானது.

உலகின் நூற்றுக்கணக்கான நாடுகளில் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களையும் ஒன்றாக - ஒரேமாதிரியான நிர்வாகமுறையில் இணைக்கும் முயற்சி இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் 1994 லேயே தொடங்கப்பட்டு விட்டது. கலை, அறிவியல் படிப்புகளை ஒன்றிணைக்க National Assessment and Accreditation Council (NAAC), பொறியியல், மருந்தியல், வணிகவியல், தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை களை ஒருங்கிணைக்க The National Board of Accreditation (NBA) என இரண்டு அமைப்புகள் இயங்குகின்றன.

உலகின் மிகப்புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களோடு, தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், இணைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்றும் புதிது புதிதாக பல தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்கள் உலகமயமாக்கலுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஒருவேளை இந்தத் தமிழ்த்தேசிய அமைப்புகள், தனித்தமிழ்நாடு வேண்டும் என்று துணிவுடன் “வாய்திறந்து பேசி”, அதன்பிறகு போராடி தனி நாடே அடைந்தாலும், இப்போது சர்வதேச அளவில் கல்வித்துறையில் நிலவும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். NAAC, NBA, ISO போன்ற அங்கீகாரங்களுக்காகவும், தரவரிசைக் குறியீடுகளுக்காக நாடு நாடாக அலைந்துதான் ஆகவேண்டும். ஒருவேளை தனிநாடு பெறும்போது சர்வதேசச் சூழல் மாறினால் ஒழிய இப்போதிருக்கும் உலகமயமாக்கலில் இருந்து நமக்கு விடிவு இல்லை.

ஆக, தனிநாடே அடைந்தாலும் தமிழ்நாட்டில் மட்டும் முயற்சி செய்து கல்வித் துறையில் எதையும் மாற்ற முடியாது எனும்போது, அந்தத் தனிநாடு என்று வாய்திறந்து பேசவே முடியாத இன்றைய நிலையில், இந்திய நிறுவனங்களும், பன்னாட்டு

நிறுவனங்களும் தமிழ்நாட்டில் இயங்கக் கூடாது என்று தீர்மானம் போடுவதும், அதைப் பரப்புவதும் தமிழ்நாட்டுக்குச் செய்யும் மாபெரும் துரோகம் ஆகும்.

இந்து இயக்கங்களோ, தமிழ்த்தேசிய இயக்கங்களோ, கம்யூனிச இயக்கங்களோ - இந்தப் பன்னாட்டுக் கல்வி நிறுவனப் புறக்கணிப்பைப் பார்ப்பன மாணவர்களிடம் பேச மாட்டார்கள். இந்தியா முழுவதும் உள்ள அனைத்துத் தேசிய இனங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்களிடம் மட்டும் ஓடோடி வந்து பன்னாட்டுக் கல்வி நிறுவன எதிர்ப்புகளை முழங்குவார்கள். பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு, இந்த இந்துச் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலும் கல்வி மறுக்கப்படுகிறது. வலதுசாரி, இடதுசாரி, தமிழ்த்தேசிய இயக்கங்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் கல்வி மறுக்கப்படுகிறது.

தனியார் துறை வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு என்ற முழக்கத்தை முன்னெடுப்பது போல, இந்திய, பன்னாட்டு நிறுவனங்களின் உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டுப் பட்டியலின மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மாணவர்களுக்கும் உரிய இடஒதுக்கீடு வேண்டும் என்ற போராட்டத்தை முன்னெடுப்பதே நம் கண்முன்னே உள்ள அவசியமான செயலாகும்.

பன்னாட்டுக் கல்வி நிறுவனங்கள் தங்களது நாடுகளிலேயே- தங்களது நிறுவனங்களிலேயே இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. அதனால், அந்த முறையை அப்படியே இந்தியாவிலும் செயல்படுத்துங்கள் என்று போராடுவதே உலக நடைமுறைகளை அறிந்த செயலாக இருக்கும்.

தனியார் துறை இடஒதுக்கீடு என்ற கருத்தை திராவிடர் இயக்கங்கள் பல ஆண்டுகளாகப் பரப்பி வருகின்றன. அதற்காகப் போராடியும் வருகின்றன. தனியார் கல்வி என்ற துறையிலும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு வந்துவிட்டால் என்ன செய்வது என்று தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் சிந்திப்பதன் விளைவுதான் “தமிழ்நாட்டில் தனியார் பன்னாட்டுக் கல்விநிறுவனங்களே வேண்டாம்” என்ற முழக்கம். இதைத் தமிழ்த்தேசிய அமைப்புகள் முழங்குவது இயல்புதான். உண்மையான “பெரியாரிய உணர்வாளர்களும்”, திராவிடர் இயக்கத் தோழர்களும் எந்த நாளும் இப்படி ஒரு தமிழ் இனத் துரோகத்தைச் செய்ய மாட்டார்கள்.

## “பார்ப்பனர்” என அறிவிக்க என்ன தடை?

தீர்மானங்களில் எந்த இடத்திலும் “திராவிடர்”, “திராவிடம்” என்ற சொற்கள் வராமல் மிக மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள். அதுபோலவே, “பார்ப்பனர்” என்ற சொல்லும் தப்பித் தவறியும் வந்து விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்துள்ளார்கள்.

நூல் முழுவதும் “பார்ப்பனியம்”, “பார்ப்பனிய அதிகாரவர்க்கம்” என்றெல்லாம் சுற்றிச்சுற்றி வருகிறார்கள். “பார்ப்பனர்” என்றும் “பார்ப்பன அதிகாரவர்க்கம்” என்று நேரடியாகச் சொல்வதற்கு ஏன் இவ்வளவு தயக்கம்?

“பார்ப்பனியம்” என்ற ஆதிக்கச் சிந்தனையானது பார்ப்பனர் உள்ளிட்ட அனைத்து ஜாதிகளிலும் இருக்கும் “மனநிலை” ஆகும். பார்ப்பனியம் அவசியம் ஒழிக்கப்பட வேண்டிய இலக்குதான். ஆனால், அந்தப் பார்ப்பனியத்தை உருவாக்கி, பரப்பி, நிலைபெற வைத்துக்கொண்டிருப்பவர்கள் பார்ப்பனர்கள்தான்.

தீர்மானங்களில் “பார்ப்பனிய” என்ற சொல்லுக்கு முன் “பார்ப்பன” என்ற சொல்லையும் சேர்த்து, “பார்ப்பன - பார்ப்பனிய” என்று வந்திருந்தால் அதுதான் திராவிடர் இயக்கங்களின் அடையாளமாகும்.

“பார்ப்பனியம்” என்றாலே பார்ப்பனர்களைத் தானே குறிக்கும்? என்ற கேள்வி உங்களுக்கு வரலாம். நானும் அப்படித்தான் சமாதானமாக நினைத்தேன். ஆனால், இதே நூலில் பல இடங்களில் பன்னாட்டு நிறுவனங்களைக் குறிக்கும்போதும், இந்தியப் பெருமுதலாளிகளைக் குறிக்கும் போதும், வெளிப்படையாக, துணிவாக ரிலையன்சு, டாடா என்று நேரடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“முதலாளிகள்” என்ற சொல், நேரடியாகச் சொல்லப் பட்டுள்ளது. பார்ப்பனர்களைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் மட்டும் மறக்காமல் “ஈயம்” பூசப்பட்டுள்ளது. பார்ப்பனர்களைப் பார்ப்பனர்கள் என்று சொல்லக்கூட நடுங்குபவர்கள், தமிழ்த் தேசியர்களாக மட்டுமே இருக்க முடியும்....

முதலாளிகளைக் குறிப்பிடும் போது, “முதலாளித்துவம்”, “முதலாளியியம்” என்றெல்லாம் பூசி மெழுகவில்லை. “முதலாளிகள்” என்ற சொல், நேரடியாகச் சொல்லப்பட்டுள்ளது. பார்ப்பனர்களைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் மட்டும் மறக்காமல் “ஈயம்” பூசப்பட்டுள்ளது. பார்ப்பனர்களைப் பார்ப்பனர்கள் என்று சொல்லக்கூட நடுங்குபவர்கள், தமிழ்த்தேசியர்களாக மட்டுமே இருக்க முடியும். திராவிடர் இயக்கத்தவராக இருக்க முடியாது.

இந்த மாநாட்டின் வெற்றிக்கு முழுமையாகப் பாடுபட்ட திராவிடர் விடுதலைக்கழகம், தமது “நிமிர்வோம்” (ஜனவரி 2019) மாத இதழில், “திசைவழி காட்டிய திருச்சிப் பேரணி” என்ற பெயரில் தீட்டியுள்ள தலையங்கத்தில், மிகத் தெளிவாக ஒரு வாக்கியத்தை வரையறுத்துள்ளது.

**“ஜாதி ஒழிப்பு; ஜாதியின் உற்பத்தி சக்திகளான இந்து மதம்; பார்ப்பனியம்; அதை மூளையில் சுமந்து நிற்கும் ஜாதி ஆதிக்க வெறி; தமிழகத்தின் வளங்களையும் உரிமைகளையும் பறிக்கும் “இந்திய**

பார்ப்பன - பனியா அதிகார மய்யங்களின்” சுரண்டல்களை எடுத்துச் சொல்லி மக்களை சமூக - அரசியல் விடுதலைக்கு தயார் செய்யும் கடமை பேரணியில் பங்கேற்ற இயக்கங்களுக்கு உண்டு.”

*இந்திய சமுதாய ஆதிக்க வர்க்கமான “பார்ப்பனர்”களையும், இந்தியப்பொருளாதார ஆதிக்க வர்க்கமான “பனியாக்”களையும் நேரடியாகப் பட்டவர்த்தனமாகக் குறிப்பிடுகிறது. இந்தப் பண்புதான் திராவிடர் இயக்கங்களின் பண்பு.*

## தமிழியம் வேண்டாம்; பெரியாரியம் போதும்!

*அதுபோல, கூட்டமைப்பின் நோக்கங்களை விளக்கும், 3 ஆம் பக்கத்தில்,*

“திருவள்ளுவரின் அறக்கருத்துக்களோடு ஊன்றியவர்கள் நாம்”....

...”மறைமலையடிகளாரின் தமிழ், பாவாணரின், பாவேந்தரின், பெருஞ்சித்திரனாரின் தமிழோடு, தமிழிய உணர்வோடு, தமிழ்நாட்டுரிமை மீட்பு உணர்வுகளோடு உறவாடி உரம் பெற்றவர்கள் நாம்”...

*என்ற வரிகள் வருகின்றன. திருக்குறளைச் சில இடங்களில் பெரியார் ஆதரிக்கிறார். அவ்வளவு தான். திருக்குறளில் கூறப்பட்டுள்ளவை எல்லாமே அறக்கருத்துக்கள் தான் என்றும், அந்த அறக்கருத்துக்களில் ‘ஊன்றியிருக்கிறோம்’ என்றும் தமிழ்த்தேசியர்கள் கூறிக் கொள்ளலாம். பெரியாரியலாளர் களைப் பொறுத்தவரை திருவள்ளுவரையும் பெரியாரியக் கண்ணோட்டத்தில் விமர்சனங் களோடுதான் அணுகமுடியும்.*

*பெரியாரியலில் வள்ளுவர் பேசியதும் வரலாம். அதற்காக, பெரியாரியலாளர்களையும் இணைத்து, “திருவள்ளுவரின் அறக்கருத்துகளோடு ஊன்றியவர்கள்” என்று பார்ப்பனத்தனமாக எழுதுவது சரியல்ல.*

**“அடிமை வாழ்வே ஆனந்தம்” என்று நினைத்திருந்த இவ் இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கில மொழி அறிவுதான் என்று கூறினால் மிகையாகாது.**

கபிலர், திருவள்ளுவர், ராமானுஜர் முதலாகியவர்கள் "தெய்வத் தன்மையில்" இருந்து பாடுபட்டிருப் பதாய் சரித்திரம் கூறுகின்றன. புத்தர் முதலிய அரசர்கள் பாடுபட்டிருப்பதாய் ஆதாரங்கள் கூறுகின்றன. ராம் மோகன்ராய் மற்றும் சுவாமி தயானந்த சரஸ்வதி, ராமலிங்க சுவாமிகள், விவேகானந்தர் முதலிய ஞானவான்கள் முயற்சித் திருப்பதாய்ப் பிரத்தியட்ச அனுபவங்கள் கூறுகின்றன.

இவர்கள் எல்லாம் இன்று பூஜிக்கப்படுகிறார்கள் என்றாலும் காரியத்தில் ஒரு பயனும் ஏற்பட்டதாகக் கூற முடியாது.மேற்கண்ட பெரியார்களுக்கு சிஷ்யர்களாக 100 பேர்களோ பதினாயிரம் பேர்களோ ஒரு லட்சம் பேர்களோ இருக்கலாம்.அவரவர்கள் ஸ்தாபனங்களில் ஒரு சில லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கலாம். மற்றப்படி காரியத்தில் நடந்ததென்ன என்று பார்த்தால் பழய நிலைமையேதான். சட்டதிட்டங்கள் மூலம், வருணாச்சிரம கூட்டங்கள் மூலம் பத்திரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஆகவே இவ்விஷயத்தில் ஏதாவது ஒரு காரியம் தகுந்த அளவுக்கு நடைபெற வேண்டுமானால் மேல்கண்டபடி சுவாமிகள் என்றும், அவதாரங்கள் என்றும், மகாத்மா என்றும், பூஜிக்கப்படத் தக்கவர்கள் என்றும் சொல்லி சொல்லிக் கொள்ளு பவர்களால் ஒரு காரியமும் நடைபெறாது.

-தோழர் பெரியர் - குடி அரசு - 20.10.1935

அஸ்திவாரத்தில் கையை வைத்து ஜாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

திருவள்ளுவர், கபிலர், ராமானுஜர் முதலிய புராணக்காரர்களும் பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் முதலிய மத சம்மந்தமான சில புது முயற்சிகளும், மற்றும் எத்தனையோ சீர்திருத்த முயற்சிகளும் எல்லாம் உண்மையறியாமலும், உலக மெப்புக்கும் தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களே தவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள ஜாதிபேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும் படியாகவோ செய்த காரியங்கள் அல்ல.

- தோழர் பெரியார், குடி அரசு - 05.04.1936

பட்டினத்தார் - தாயுமானவர் - இராமலிங்க அடிகள் எல்லாம் தமிழ் படித்து சாமியானவர்கள். தமிழ்ப் படித்தவனெல்லாம் சாமியானனே ஒழிய, எவனும் பகுத்தறிவுவாதி யாகவில்லை. நமக்குத் தெரிந்து மறைமலை அடிகள் தமிழ்ப் படித்து சாமி ஆனவர்தானே. இப்போது நடந்தது சாமிசங்கரதாஸ் நூற்றாண்டு விழா. இந்த சங்கரதாஸ் என் வீட்டில் வந்து நாடகத்துக்கு பாட்டு எழுதிக் கொண்டிருந்தவர். சங்கரம் பிள்ளை என்று பெயர். பிறகு சங்கரம் பிள்ளை சங்கரதாஸ் ஆகி இன்று சாமி ஆகிவிட்டார்.

- தோழர் பெரியார் - விடுதலை - 3.10.1967

குறளை ஒரு அளவுக்கு நாம் ஏற்றுக் கொள்ளலாம். அதை பரப்பியதில் எனக்கு பெருமை பங்கு உண்டு. குறளைப் பற்றி அவ்வளவாக மக்களுக்குத் தெரியாது இருந்தபோது குறள் மாநாடு கூட்டி, தமிழ்ப் புலவர்கள் எல்லோரையும் ஒன்றாகக் கூட்டி குறளைப் பற்றி மக்களுக்கு விளக்கம் செய்து குறளைப் பரப்பினேன். இந்த மாநாட்டிற்கு மறைமலை அடிகளைத் தவிர மற்ற தமிழ்ப் புலவர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

- தோழர் பெரியார் - விடுதலை - 3.10.1967

நம் அறிஞர்களும், புலவர்களும் நமக்கு மனித தர்மத்திற்குக் குறளைத் தான் எடுத்துக் காட்டுவார்கள். அந்த வள்ளுவன் கூட இருக்கிற மற்றவனை விடக் கொஞ்சம் பரவாயில்லை என்பது தானேயொழிய, அவன் தான் எல்லாவற்றிற்கும்

என்பது பொருந்தாதது. நேற்று ஒரு பள்ளியில் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசும் போது, வள்ளுவன் படத்தைத் தூக்கி எறிந்து விட்டு பாரதிதாசன் படத்தை வைக்க வேண்டுமென்று சொன்னேன்.

- விடுதலை - 06.08.1968

வள்ளுவன் அப்படிச் சொன்னான்; தொல்காப்பியன் இப்படிச் சொன்னான் என்றால், அதெல்லாம் அவன் வாழ்ந்த காலத்திற்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாமே தவிர, இப்போதைக்கு அவை பயன்படக் கூடியதல்ல. இந்த வாழ்க்கைக்கு எவனும் வேலி போட முடியாது. நாளைக்கு எப்படி அமையும் என்று சொல்ல முடியாது. நாளுக்கு நாள், நேரத்திற்கு நேரம் உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மனிதன் மாறிக் கொள்ளத்தான் வேண்டும்.

-விடுதலை - 06.08.1968

தமிழர்களின் பகுத்தறிவுக்கும், சமுதாயக் கேடு நீக்கலுக்கும் தமிழர்களால், தமிழ்ப்புலவர்களால் போற்றப்படுகிறவர்களில் அய்ந்து பேர்கள் எதிரிகளாவார்கள். அவர்கள் யார் என்றால், 1.வள்ளுவன், 2. தொல்காப்பியன், 3. கம்பன், 4. இளங்கோவன், 5. சேக்கிழார்.

இந்த அய்ந்து பேர்களுக்கும் பகுத்தறிவில்லை என்பதோடு இவர்கள் இனஉணர்ச்சி அற்ற இனவிரோதிகளாக ஆகிவிட்டார்கள். வள்ளுவன் அறிவைக் கொண்டு ஒரு நூல் (குறள்) எழுதினான் என்பதல்லாமல் அதில் பகுத்தறிவைப் பயன்படுத்தினான் என்று சொல்வதற்கில்லை. அதில் மூடநம்பிக்கை, பெண்ணடிமை, ஆரியம் ஆகியவை நல்லவண்ணம் புகுத்தப் பட்டிருக்கின்றன. குறளுக்கு மதிப்புரை கொடுத்தவர்களில் சிலர் "குறள் வேத, சாஸ்திரங்களின் சாரம்" என்று கூறியிருக்கிறார்கள். குறளை ஊன்றிப் பார்த்தால் அது உண்மை என்று புலப்படும்.

...தமிழனுக்கு வேண்டியது மானம், அறிவு, இனஉணர்ச்சி ஆகியவைகளேயாகும். இவற்றிற்கு மேற்சொன்ன திருவள்ளுவன், தொல்காப்பியன், கம்பன், இளங்கோவன், சேக்கிழார் ஆகிய அய்வரும் - இவர்களது நூல்களான குறள், தொல்காப்பியம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகிய அய்ம்பெரம் இலக்கியங்களும் எந்த அளவுக்குப் பயன்படும் என்று சவால் விட்டுக் கேட்கிறேன் அல்லது எந்த இவற்றிற்கு உயிர், செலாவணி, இருக்கும்வரை தமிழனுக்கு மானம், அறிவு, இன உணர்ச்சி ஏற்படமுடியுமா? ஏற்படுத்த முடியுமா? என்று கேட்கிறேன்.

- தோழர் பெரியார்,

விடுதலை 90 வது பிறந்தநாள் மலர், 17.09.1968

*இந்தச் சான்றுகள் போதாது. பெரியார் இறுதியில் பேசியது தான் வேண்டும் என்றால், அதையும் தருகிறேன். படித்துக் கொள்ளுங்கள்.*

பெரியார்: **ஏன் குறளை எடுத்துக்குங்க! நான் மட்டும்தான் குறளைக் கண்டிக்கிறேன்.**

கேள்வி: **ஏன் கண்டிக்கிறீர்கள்?**

பெரியார்: **குறளோடு நின்னுட்டா வளர்ச்சி குன்றி விடுமேன்னுதான். குறள் 2000 வருஷத்துக்கு முந்தினது. பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கி விட்டது. பெண் ஒழுக்கம் பற்றி எவ்வளவு சொல்லியிருக்கு குறளில்? ஆண் ஒழுக்கம் பற்றி....? "தாம் வீழ்வார்..." என்ற குறளைப் பாருங்க. அதுதான் மோட்சம் என்கிறார் வள்ளுவர். அந்தக் காலத்து நாகரீகம் அப்படி. இந்தக் காலத்துக்குக் குறள் கருத்துக்கள் எல்லாமே ஒத்துவர முடியுமா?**

**நான் குறள் மாநாடு நடத்தியதாலே சிலபேர் என்னைக் கண்டிச்சாங்க. கலைஞர்கூட அதை (குறள்) ஒண்ணையாவது விட்டுவிடக் கூடாதான்ன கேட்டார். குன்றக்குடி அடிகளாரும் கேட்டுக் கிட்டாரு. இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தையது குறள். அதை அப்படியே இப்பவும் ஏத்துக்கணும்னா?**

-கலைமகள் ஏடு, பிப்ரவரி 1973

*பெரியார் இறுதிவரைக் கடுமையாக எதிர்த்த வள்ளுவரை, தமிழ்த்தேசிய அமைப்புகள் தங்களது நாயகராக ஆக்கிக் கொள்வதில் நமக்கு முரண்பாடு இல்லை. பெரியார் தூக்கி எறியச் சொன்ன குறளையும், வள்ளுவரையும் அதே பெரியாரின் பெயரால் மீண்டும் முதல் இடத்திற்குக் கொண்டுவர முயற்சிப்பதைக் கண்டிக்க வேண்டியுள்ளது. எந்தத் தத்துவமாக இருந்தாலும் எங்களுக்கு உரைகல், எங்களுக்கு வழிகாட்டி பெரியாரியம் மட்டுமே! பெரியாரிய ஆயுதம் கையில் இருக்கும் வரை, எங்களுக்குக் குறளும் வேண்டாம். உங்கள் குறளிவித்தைகளும் வேண்டாம்.*

## வள்ளலார், வள்ளுவர் எவரும் எமக்குக் கடவுள் அல்ல; வழிகாட்டிகளும் அல்ல!

*மேலும் "தமிழியம்" குறித்து நாம்தமிழர் கட்சி தனது ஆவணத்தின் 37 பக்கத்தில்,*

**"ஆசீவகம், உலகாய்தம், வள்ளுவம், வள்ளலாரியம் முதலிய தமிழ்நெறிகளின் தொகுப்பு" என்று விளக்கம் கூறியுள்ளது.**

*இந்தத் தமிழ்த்தேசிய அமைப்புகள் அனைத்தும் தங்களது தலைவராக - தமிழ்த் தேசியச் சிற்பியாக ஒருவரைக் காட்டுவார்கள். அவர்தான் மா.பொ.சி. தமிழ்நாட்டு சமுதாய, அரசியல் தளங்களில் பெரியாரின் பெயரைக் கேட்டாலே அலர்ஜி வருபவர்களுக்கெல்லாம் மாமருந்தாக இருந்தவர்தான் அந்த மா.பொ.சி.*

*அவர் வள்ளலாரைப் புகழ்ந்து எட்டு நூல்களை எழுதியுள்ளார். வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, வள்ளலாரும் பாரதியும், வள்ளலார் வளர்த்த தமிழ், வள்ளலார் வகுத்த வழி, வள்ளலார் கண்ட சாகாக் கலை, வானொலியில் வள்ளலார், வள்ளலாரும் காந்தியடிகளும், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ஆகிய அந்த எட்டு நூல்களும் வள்ளலாரியம் என்பதைக் கட்டமைக்கின்றன.*

*மா.பொ.சிக்குப் பிறகு தோழர் பழநெடுமாறன் அவர்களும் "வள்ளலார் மூட்டிய புரட்சி" என்ற*

நூலை எழுதி, தம் பங்குக்கு வள்ளலார் புகழ் பாடியுள்ளார்.

தோழர் மணியரசன் அவர்களது தமிழ்த் தேசியப் பேரியக்கம், வரும் 2019 பிப்ரவரி 24 இல் கும்பகோணத்தில், "தமிழர் மறுமலர்ச்சி மூலவர் வள்ளலார் பெருவிழா" என்ற நிகழ்வை நடத்துகிறது. அந்த விழாவைத் தோழர் மணியரசன் அவர்களோடு நாம்தமிழர் கட்சியும் இணைந்து பங்கேற்கிறது.

பாரதியையும், இந்து மதத்தையும், சமஸ்கிருதத்தையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்த மா.பொ.சியின் சீடர்கள் இன்று ஆசீவக, உலகாய்த, வள்ளுவ, வள்ளலாரியங்களைப் பேசுவது நமக்கு மகிழ்ச்சிதான். இந்து வேத மதத்திற்கும், அதன் பண்பாடு, பழக்க வழக்கங் களுக்கும் எதிராகப் போராடிய தலைவர்களையும், தத்துவங்களையும் தமிழ்த்தேசிய இறையியலாக முன்னெடுப்பதில் உண்மையிலேயே ஆரியப் பார்ப்பன எதிர்ப்புதான் அடிப்படையாக இருக்கிறதா என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

ஜல்லிக்கட்டுக்குச் சான்று எங்கே என்று கேட்டால், சிந்துச் சமவெளியிலிருந்து சான்று வருகிறது. "தமிழ்மொழி இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழி" என்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் வருகின்றன. அப்படியானால் பார்ப்பன எதிர்ப்புக்கு மட்டும் ஏன் தமிழ்நாட்டு எல்லைக்குள் இருந்து மட்டும் தலைவர்களைக் காட்ட வேண்டும்?

ஆசீவகத்துக்கும் முன்பே, இந்து - வேத மதத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்கள் இந்தியத் துணைக்கண்ட அளவில் பரந்து விரிந்த எல்லையில் வாழ்ந்திருக்கிறார்கள். புத்தருக்கும் முன்பே பார்ப்பனர்களோடும், அவர்களது தத்துவங்களோடும் போராடியவர்களை வரலாறு பதிவு செய்திருக்கிறது. கணாதர், கபிலர் போன்றோருக்கும் முன்பாகவும் நமக்கான தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

புத்தருக்கும் முந்தைய தலைவர்கள் பற்றித் தமிழ்த்தேசியர்களுக்குத் தெரிந்திருக்காது என்று கூட நாம் குறைத்து மதிப்பிடலாம். ஆனால், புத்தரையும், புத்தத்தையும் அனைவரும் அறிந்திருப்பார்கள். அந்த புத்தரை - பௌத்தத்தை, இவர்களது தமிழியத்துக்குள் இணைக்கத் தடையாக வருவது எது?

பௌத்தம் வடமாநிலத்தைச் சேர்ந்தது என்பார்களா? தமிழ்நாட்டின் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் எல்லாவற்றிலும் பௌத்தமும், சமணமும் பாடப்பட்டுள்ளது. இந்த வள்ளலாரைப் பற்றித்தான் எந்தச் சங்கஇலக்கியமும் பாடவில்லை. பாடியிருக்க வாய்ப்பில்லை. தமிழ்நாட்டிலும் பார்ப்பனர்களால், கடுமையாக எதிர்க்கப்பட்ட - அழிக்கப்பட்ட இறையியல் பௌத்தம் அல்லவா?

தோழர் அம்பேத்கரைத் தமிழ்நாட்டுக்காரர் அல்ல என்ற பெயரில் புறக்கணிப்பவர்களுக்கும், பௌத்தம், சமணம், சாங்கியம், நியாயம் போன்ற ஆதிகாலப் பார்ப்பன எதிர்ப்புக் கருத்தியல்களைப் புறக்கணிப்பவர்களுக்கும் என்ன வேறுபாடு?

2016 ஆம் ஆண்டு தி.வி.க நடத்திய வேத மறுப்பு மாநாட்டில்கூட வள்ளலார் பேசப்பட்டார். அதேசமயம் அந்த மாநாட்டின் அறிவிப்புகளில் இந்திய அளவில் இயங்கிய அனைத்துப் பார்ப்பன எதிர்ப்புத் தத்துவங்களும், தலைவர்களும் பேசப் பட்டனர். அதுதான் திராவிடர் இயக்கங்களின் அடையாளம்.

சீமானின் தமிழியம் வேறு; எங்களின் தமிழியம் வேறு; எங்களது தமிழியத்தில் புத்தரும் வருவார் என்பார்களா? புத்தரைக்கூட பெரியார் ஒரு தோழமைச் சக்தியாக மட்டுமே கருதினார். கடவுளாக அல்ல. நமக்கு ஒரு மதம் வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் பெரியாரியலாளர் களாகவே இருக்க முடியாது. பௌத்தம் ஒரு வழிகாட்டும்நெறி என்ற அளவில் வைத்துக் கொண்டால்கூட, தோழர் அம்பேத்கரால் சீர்திருத்தப்பட்ட பௌத்தத்தைத்தான் நாம் வரவேற்க முடியும்.

ஒருவேளை, "நாங்கள் மதத்தைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ பேசவில்லை. வள்ளுவரையும், வள்ளலாரையும் ஒரு பார்ப்பன எதிர்ப்புப் போராளிகளாகவே முன்னெடுக்கப் போகிறோம்" என்று தோழர்கள் திருமுருகனும், பொழிலனும் கூறலாம்.

அதைக்கூட, பேச வேண்டிய இடம் பெரியாரிய மேடை அல்ல. தமிழ்த்தேசியம் என்ற கருத்தை மட்டும் ஏற்பவர்களிடம் போய்ப் பேச வேண்டும். பார்ப்பனக் கடவுளர்களையும், பார்ப்பன இறையியல் தத்துவங்களையும் நம்புபவர்களிடம் போய்ப் பேச வேண்டும். எங்களிடம் பேசுவது தவறு என்கிறோம். வள்ளலாரையும், வள்ளுவரையும் தோழமையாகப் "பேசிவிட்டுச்" செல்வது திராவிடம். அவர்களை முன்னிறுத்தி தொடர்ச் சியாக "விழா எடுப்போம், மாநாடு நடத்துவோம்" என்பதும் தமிழ்த்தேசியம்.

திராவிடர் இயக்கங்களின் தலைவர்களாக - ஆரியப் பார்ப்பன எதிர்ப்புத் தளபதிகளாக நூற்றுக் கணக்கானோர் இருக்கிறார்கள். பெரியார் காலத்திலும், நீதிக்கட்சியின் காலத்தில் நடந்த மிகப் பெரும் சமுதாயப் புரட்சியின் வேர்களாக - முகம் தெரியாத தலைவர்கள் ஏராளமாக வாழ்ந்து மறைந்துள்ளனர். திராவிடர் இயக்கங்கள் அவர்களின் பிறந்தநாட்களைத்தான் கொண்டாட முடியும்.

கடவுளே இல்லை, கடவுளே வேண்டாம், மதங்களே வேண்டாம் என்பவர்களின் மேடையில் ஏறி தமிழ்த்தேசியக் கடவுளர்கள் போல எவரை யாவது உயர்த்திப்பிடிப்பது - தமிழ்த்தேசிய இறை யியல் என்று எதையாவது அறிமுகப்படுத்துவது என்ற இரண்டும் பெரியாரியலுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.



பெரியாரைப் பிறவிப் பகைவராகக் கருதிய மா.பொ.சி அவர்களும், அவரது சீடர்களான நாம் தமிழர் கட்சியும், தமிழ்த்தேசியப் பேரியக்கமும் வெளிப்படையாகக் கூறி வருவதை, தோழர்கள் பொழிலன், திருமுருகன்காந்தி ஆகியோர் வார்த்தை விளையாட்டுக்களில் கூறியுள்ளார்கள் என்பதை 24 வது தீர்மானம் உறுதிப்படுத்துகிறது.

## நட்பு சக்திகளுடன் அணுகுமுறை

இப்படி நுணுக்கி, நுணுக்கி, பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தால், பார்ப்பனர்களை எப்படி வெல்வது? தோழமைச்சக்திகளை நட்போடு பார்க்க வேண்டாமா? அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டாமா? ஒரு ஒருங்கிணைப்பு வேண்டாமா? என்ற கேள்விகள் எழலாம்.

நட்பு முரண்பாடு, பகைமுரண்பாடு, தோழமைச் சக்தி, கூட்டுழைப்பு, ஒருங்கிணைப்பு போன்ற சொல்லாடல்கள் காலந்தோறும் திராவிடர் இயக்கத்தினரை நோக்கி மட்டுமே வருகின்றன. அனைத்துக் கருத்தியல் அமைப்புகளுக்கும் அவற்றை எடுத்துச்சொல்ல யாரும் இல்லை.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்திய அளவில் மட்டுமல்ல; மனித குல விடுதலைக்கும், அனைத்து உயிரினங்களின் நல்வாழ்வுக்காகவும் உலக அளவில் பாடுபடும் அனைத்து அமைப்புகளோடும் நட்போடு - ஒருங்கிணைந்து இயங்க நாம் என்றும் தயாராகவே இருக்கிறோம்.

அந்த ஒருங்கிணைப்பு என்ற பெயரில், ஒட்டுமொத்த அடித்தட்டு மக்களுக்கு எதிரான கருத்துக்களையும், பெரியாரியலுக்கு எதிரான கருத்துக்களையும் துணிச்சலுடன் முன்வைப்பதும் - அந்த மக்கள்விரோதக் கருத்துக்கள் தான், ஒருங்கிணையும் அனைத்து அமைப்புகளின் நோக்கங்கள் என்றும் அறிவிக்கும் பொறுப்பற்ற போக்கைத்தான் விமர்சிக்க விரும்புகிறோம்.

“பெரியார் ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கான தலைவர், அவர் 0.5 விழுக்காடு மட்டுமே தலித் மக்களுக்குப் பாடுபட்டார்” என்ற குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் தங்களது பெரியாரிய எதிர்ப்புக் கருத்துக்களை எந்தவிதத் தயக்கமும் இன்றி முன்வைக்கின்றனர். கூட்டமைப்பிலும் பொறுப்பாளர்களாகவே இயங்குகின்றனர்.

இன்றுவரை அந்தக் கருத்துக்களைத் தெரிவித்த தோழர் அரங்க.குணசேகரன் அதற்காக வெளிப்படையாக விளக்கம் அளிக்கவில்லை. எந்தப் பெரியாரியலாளரும் அதற்காக அவருக்கு வெளிப்படையான கண்டனத்தையோ அல்லது அவரது குற்றச்சாட்டுக்கு உரிய பதிலையோ பதிவு செய்யவில்லை. பெரியாரியலை எதிர்ப்பவர்களுக்கு உள்ள இந்த உரிமை, பெரியாரியலைப் பின்பற்ற நினைப்பவர்களுக்கும் இருக்கிறது.

இந்தக் கட்டுரைகளில் நான் எழுதிய எந்தக் கருத்தும் எனது சொந்தக் கருத்துக்கள் அல்ல. மாநாட்டுத் திடலிலேயே எண்ணற்ற தோழர்கள், பல்வேறு அமைப்புகளின் தோழர்கள் எம்மிடம் பேசியவற்றின் தொகுப்பு தான் இது. தோழர்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்ட செய்திகள் இன்னும் இரண்டு பாகங்கள் எழுத வேண்டிய அளவுக்கு உள்ளன. களப்பணியாற்றும் திராவிடர் இயக்கத் தோழர்களைப் பொறுத்தவரை பெரியாரியலுக்கும் - தமிழ்த்தேசிய மாயைக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு அறிந்தே உள்ளனர்.

இன்றைய பார்ப்பன - இந்துமத ஆட்சியின் விளைவாகப் பெரியாரியலை நோக்கி ஏராளமான இளைஞர்கள் ஆர்ப்பரித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பெரியாரியலை அறிமுகப்படுத்தும் நோக்கத்தில்தான் இந்தக் கட்டுரை எழுதப்பட்டது. “பெரியாரின் இறுதி இலக்கு” பற்றிய அடுத்த பாகத்துடன் இக்கட்டுரை நிறைவடையும்.






"பிள்ளை பெறுவது"
எனும் விபத்தைச்
சந்தித்தவர்களும் -
அந்த விபத்துக்கு
ஆளாகப் போகிறவர்களும்
அவசியம் படியுங்கள்

விலை:
180

நூலைப் பெற:
தமிழ்வெளி, எண் 1, பாரதிதாசன் தெரு, சீனிவாசா நகர்,
மலையம்பாக்கம், சென்னை - 600 122,
அலைபேசி: +91 90940 05600
மின்மடல்: tamizhveli.com@gmail.com

வெளியீடு:
தமிழ்வெளி


Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com